In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்போதும் திருமேனி தீண்டுவார்

சிவாச்சாரியார்கள்



திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்களின் கூட்டமைப்பாகிய

ஸ்ரீசிவாம்ருத ஸங்கத்தினர் நல்லாதரவுடன்

மங்களம் நிறை சோபகிருது ஆண்டு மார்கழி திங்கள் 11ஆம் நாள் (27.12.2023 புதன்கிழமை)

திருவாதிரை தரிசனத் திருநாளில் வெளியிடப்பட்டது

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்போதும் திருமேனி தீண்டுவார்
அடியாருக்கும் அடியேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சர்வம் சிவமயம்

முப்போதும் திருமேனி தீண்டுவார்

ஸ்ரீ சிவாச்சாரியார்கள்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

திருப்பரங்குன்றம் ஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்களின்

கூட்டமைப்பாகிய

ஸ்ரீ சிவாம்ருத ஸங்கத்தினர் நல்லாதரவுடன்

சோபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் 11ஆம்நாள் (27.12.2023) புதன்கிழமை
திருவாதிரை சபாநாயகர் தரிசனத் திருநாளில்
வெளியிடப்பட்டது

ஆசிரியர்

சிவமஞ்சரிச்செம்மல்,அருட்பணிஅரசு,சிவசேவாரத்னம்

பூசை.ச.அருணவசந்தன்

சிவசுந்தரி கலைக்கூடம்

29,பீமண்ணமுதலிதோட்டத்தெரு,ஆழ்வார்பேட்டை,சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பான வேண்டுகோள்..

சிவநேயச்செல்வப் பெருந்தகையீர்,

எமது சிவசுந்தரி கலைக்கூடம் வழியாகச் சிவபெருமானின் பெருமைகளையும் சைவ சமயத்தின் மேன்மைகளையும், கோயில்கள், அவை வளர்க்கும் கலைகளின் சிறப்புகள் பற்றியும் பேசும் நூலாக சிவமஞ்சரி என்னும் தொடர் நூல் வெளிவருகிறது.

இந்நூலில் அரிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இடம் பெற்றுள்ளன. இவை மகா புராணங்கள் ,தலபுராணங்கள், திருமுறைகள் செவி வழிச்செய்திகள் முதலியவற்றில் இருந்து பெறப் பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

இந்நூல்கள் குறைந்த அளவு பிரதிகளே (300 பிரதிகள்) அச்சிடப்படுகின்றன. ஆர்வமுள் ளவர்கள் 99411 24964 என்ற எண்ணிற்கு முகவரியை எஸ்.எம்.எஸ் (SMS) மூலம் தெரிவித்து இதே எண்ணிற்கு G-pay மூலம் பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இவை விரைவு அஞ்சல், நூல் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

தாங்கள் விரும்பினால் எமது ஒவ்வொரு வெளியீடு வரும்போதும் தங்களுக்கு முன்னதாக தகவல் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு நூலுக்கும் ஆதரவுவிலை ரூ.150/.ம் தபால்செலவு ரூ.50/.ம் ஆக ரூ.200/. ஆகும்.

சிவபெருமானுடைய பெருமைகளைப் பேசும் நூலாகவும் சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகவும் விளங்கும் இந்நூலை தாராளமாக வாங்கி எமது சிவப்பணி மென்மேலும் பெருக, நல்லாதரவு அளிக்க வேண்டுகிறோம். தொடர்பு எண் : 99411 24964.

நூல் விவரம்

நூலின் பெயர்	: முப்போதும் திருமேனி தீண்டுவாரான ஸ்ரீசிவாச்சாரியார்கள்
நூலாசிரியர்	: பூசை.ச.ஆட்சிலிங்கம் (பூசை.ச.அருணவசந்தன்)
உரிமை	: ஆசிரியருக்கு
பக்கங்கள்,நூல் அளவு	: 4+8+80=92 (கிரௌன் 1/4)
வெளியிட்டோர்	: சிவசுந்தரி கலைக்கூடம், 29,பீமண்ண முதலி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018, அலைபேசி 99411 24964
அச்சுப்புள்ளிகள்	: ஸ்ரீலிபி,12 புள்ளிகளும் அதற்கு மேலும்
விலை	: பதிப்பிற்கு ஆதரவாக ரூ. 200/-.மட்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவம் எனும் செம்பொருளே எந்நாளும் துணை!

திருப்பரங்குன்றம் ஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்களின் கூட்டமைப்பாகிய ஸ்ரீ சிவாம்ருத ஸங்கத்தினர் நல்லாதரவுடன் வெளிவரும் முப்போதும் திருமேனி தீண்டுவார் ஸ்ரீ சிவாச்சாரியார்கள் நூலுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

சிவாகமஸ்ரீ. கபாலி வைத்யநாத குருக்கள்

அர்ச்சகர், ஸ்ரீ கபாலீஸ்வரர் திருக்கோயில்,திருமயிலை சென்னை.6000 004

ஆசிரியர், ஸ்ரீ கபாலீஸ்வரர் சிவாகம வேத பாடசாலை,திருமயிலை சென்னை.6000 004.

சிவாகமஸ்ரீ.மோகன்(எ) சபாரத்தின சிவாச்சாரியார்

அர்ச்சகர், செல்வ விநாயகர் திருக்கோயில்,மண்ணடி, சென்னை.6000 001

ஆசிரியர், சிவாகம வேத பாடசாலை,சென்னை.6000 001.

சிவாகமஸ்ரீ. இரா.முத்துக்குமாரசிவாச்சாரியார்,

அர்ச்சகர்,ஸ்ரீ பாலவிநாயகர் திருக்கோயில்,வாரன்ரோடு,திருமயிலை சென்னை

செயலாளர், அகில இந்திய அர்ச்சகர் சேவா சங்கம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவம் எனும் செம்பொருளே எந்நாளும் துணை! .



திருப்பரங்குன்றம் ஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்களின் கூட்டமைப்பாகிய
ஸ்ரீ சிவாம்ருத ஸங்கத்தினர் நல்லாதரவுடன் வெளிவரும்
முப்போதும் திருமேனி தீண்டுவார் ஸ்ரீ சிவாச்சாரியார்கள்
நூலுக்கு எமது நல்வாழ்த்துகள்!

சிவாகமஸ்ரீ. தில்லை கார்த்திகேய குருக்கள், பொரக்குறிச்சி,
சிவாகமஸ்ரீ .டி. எஸ் ரவி (எ) ஷண்முக குருக்கள், நல்லூர்
சிவாகமஸ்ரீ. சாம்பசிவ குருக்கள், நல்லூர்

சிவாகமஸ்ரீ சபாரத்தன குருக்கள்
அர்ச்சகர், அ மிகு வண்டார்குழலி சமேத
வடாரண்யேசுவரர் கோயில்,
திருவாலங்காடு,காஞ்சிபுரம் மாவட்டம்

சிவாகமஸ்ரீ செல்லமணி பட்டர் ,
அடையக் கருங்குளம், விக்ரமசிங்கபுரம்,
நெல்லை மாவட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவம் எனும் செம்பொருளே எந்நாளும் துணை!



திருப்பரங்குன்றம் ஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்களின் கூட்டமைப்பாகிய ஸ்ரீ சிவாம்ருத ஸங்கத்தினர் நல்லாதரவுடன் வெளிவரும் முப்போதும் திருமேனி தீண்டுவார் ஸ்ரீ சிவாச்சாரியார்கள் நூலுக்கு எமது நல்வாழ்த்துகள்!

சிவாகமஸ்ரீ. கீர்த்திவாச சிவாச்சாரியார்,
பெரிய பட்டம் அர்ச்சகர், அண்ணாமலையார் திருக்கோயில்,
திருவண்ணாமலை.

கலாராக்ஷசன். *சிவாகமஸ்ரீ* சதீஷ்(எ)
பா.பாலச்சந்திர சிவாச்சாரியார்
சிவாகமஸ்ரீ.பா.காமேஷ்(எ) காசிவிஸ்வநாத சிவாச்சாரியார்,
பரத்வாஜேஸ்வரசுவாமி திருக்கோயில்புலியூர், கோடம்பாக்கம், சென்னை-24

ஆகமப்பிரவீணா.*சிவாகமஸ்ரீ* .சண்முக சிவாச்சாரியார்
அர்ச்சகர், காரணீஸ்வரர் திருக்கோயில்,
திருமயிலை சென்னை.6000 004.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கயிலை நன்மலை ஆளுங் கபாலியை
மயில் இயன்மலை மாதின் மணாளனைக்
குயில்ப யில்பொழிற் மாமயிலை மேய என்
உயிரினை நினைந்து உள்ளம் உருகுமே.

திருநாவுக்கரசர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமயம்

எங்கள் உரை

சிவநேயச் செல்வர்களுக்கு,

எமது பணிவார்ந்த வணக்கம்உரித்தாகுக. நமது அன்பர்களின் பேராதரவுடன் *சிவசுந்தரி கலைக் கூடம்* வழியே சிவபெருமானின் எல்லையற்ற பெருமைகளை அருள் திருவிளையாடல்களையும் எண் ணற்ற ஆலயங்களின் பெருமைகளையும் இயன்ற வரை பேசும் நூல் என்னும் முத்திரையுடன் சிவமஞ்சரி என்னும் நூலை வெளியிட்டு வருகின்றோம். இதுவரை நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போது சிவனடியார்களின் பெருமைகளைப் போற்றும் வகை யில் *அறுபத்துமூவர் அருட்செயல் களஞ்சியம்* என்னும் தொடர் நூலை வெளியிட முனைந்துள்ளோம்.இது பெரிய புராணம் போற்றும் அடிய வர்களின் பெருமைகளையும் அவர்கள் செய்த அருட்பணிகள் பற்றிய கூடுதல் செய்திகளையும் கொண்டதாகும். இவ்வகையில் முதல்நூலாக **முப்போதும் திருமேனி தீண்டுவார்** என்னும் நூல் **ஆனந்த நடராஜர் தரிசனத் திருவாதிரை திருநாளில்** வெளிவருகிறது.

இதில் முப்போதும் திருமேனி தீண்டுவார் என்னும் பெயரில் போற்றப்படும் நாயன்மார் திருக்கூட்டம் பற்றிய பொதுச் செய்திகளும் சிவபூஜைகள் செய்து வரும் அர்ச்சகர்களான சிவாச்சாரியார்கள் பற்றிய சிறப்புச் செய்திகளும் இடம் பெறுகின்றன.

ஏற்கனவே சிவமஞ்சரி வரிசையில் சிவாச்சாரியார்கள் என்னும் தலைப்பில் வெளியிட்ட நூலை கூடுதல் செய்திகளுடன் விரிவுபடுத்தி படங்கள் சேர்ந்து இப்போது முப்போதும் திருமேனி தீண்டுவார். சிவாச் சாரியார்கள் என்னும் தலைப்பில் வெளியிட்டு மகிழ்கிறோம்.

இந்நூலைத் தொகுத்து வரும் வேளையில் சென்னை திருமயிலை கபாலீச்சரம் . வேதாகமபாடசாலை (பொறுப்பு) ஆசிரியர் திரு கபாலி வைத்திய நாதகுருக்கள் அவர்களிடம் காட்டினோம். அவர் படித்துச் சில திருத்தங்களை அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பரங்குன்றம் திரு கார்த்திக் குருக்கள், சிவாச்சாரியார்கள் துதி எனும் சிறிய நூலை அனுப்பி வைத்து உதவினார்கள்.

வழக்கமான அன்பர்களின் நல்லாதரவுடன் பொலிவுடன் இந்நூல் வெளிவருகிறது. வெளியீட்டிற்குத் துணை நின்ற புரவலர்கள் திரு விஸ்வ ஆறுமுகம் (CLRI Retd.), மின்தட்டச்சர்கள் திருமதி. ஜெயா பாபு, திருமதி குமரகுரு அச்சிட்டுக் கொடுத்த பிரின்ட் டெக் இந்தியா திரு பூபாலன் அவர்களுக்கும் அருட்கொடை வழங்கி சிறப்பித்த அனைவருக்கும், என்னை என் வழியே போகவிட்டுஎன்து சிவப் பணிகளுக்குத் துணை நிற்கும் எனது இல்லத்தரசி திருமதி வசந்தா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றித் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஓவியர் மயிலை திரு.காசி குடந்தை தினேஷ்,அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றித் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த இனிய வேளையில் அகிலாண்ட நாயகி கற்பகவல்லியும் அவளைப் பாகம் கொண்ட பரமர் கபாலி நாதனும் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோமிக்கப் பெருவாழ்வை அளித்து அவர்களை எந்நாளும் இன்பமுடன் வாழ்வித்து நல்லருள் பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகின்றேன்.

வாழி நலம் சூழ!!

இவ்வண்
சிவப்பணியில் மீளா அடிமை

சிவசுந்தரி கலைக் கூடம்
29,பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்பேட்டை,சென்னை,600 018,
அலைபேசி 99411 24964

பூசை.ச.ஆட்சிலிங்கம்
(பூசை.ச.அருணவசந்தன்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம வடிவே போற்றி! அருள்நிறை ஆச்சார்ய திருவே போற்றி!!
ஐயாறதனில் சைவனாகிய அண்ணலே போற்றி! போற்றி!!



முப்போதும் திருமேனி தீண்டுவாரான சிவாச்சாரியார்கள்

உலகிலுள்ள தெய்வங்கள் எல்லோருக்கும் மேலான தெய்வம் சிவபெருமானே ஆவார்.அதனாலேயே அவர் மகாதேவர் என்று அழைக்கப்படுகிறார். அவரை அறிவதற்கும் அவரைப் பூசிப்பதற்கும் அவர் அருளைப் பெறுவதற்கும் உரிய வழிமுறைகளை அவரே வகுத்து அளித்துள்ளார். அவையே "ஆகமங்கள்" என்று அழைக்கப் படுகின்றன.

உலகம் உய்ய எண்ணிலாத ஆகமங்களை இயம்பிய இறைவர் அவற்றைக் கணக்கில்லாமல் வகுத்துக் அளித்துள்ளார் என்றாலும், அவற்றில் உயர்ந்ததாக இருபத்தெட்டு ஆகமங்கள் போற்றப்படுகின்றன.

அந்த ஆகமங்களை உபதேசமாகப் பெற்று, உலகம் செழிப்புடன் விளங்கவும் உயிர்கள் மேன்மை பெற சிவாலயங்களில் சிவபூசை செய்யவும் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட மரபே சிவாச்சாரியார் மரபாகும். அவர்கள் வழிவழியாக வரும் சிவபூசை மரபுகளைப் பேணும் பரம்பரையினர் ஆவர். இவர்கள் ஒரு நாளிலுள்ள காலைசந்தி, உச்சிசந்தி, மாலைசந்தி ஆகிய மூன்று வேளைகளிலும் சிவபெருமானைப் பூசிப்பவர்கள் என்பதால் "முப்போதும் திருமேனி தீண்டுவார்" எனப்படுகின்றனர். மேலும் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களிலும் பூசை செய்பவர்கள் என்பதாலும் முப்போதும் திருமேனி தீண்டுவார் எனப்படுகின்றனர்.

அறுபத்து மூவர் வரிசையில் தொகையடியார்கள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒன்பது திருக்கூட்டத்தாரில் "முப்போதும் திருமேனி தீண்டுவார்" கூட்டமும் ஒன்றாகும். இந்த நூலில் அவர்களது சிறப்பையும் தொடர்ந்து சிவாச்சாரியார்கள் பற்றிய செய்திகளையும்அறிந்து மகிழலாம்.

இந்த இனிய வேளையில் அநாதிசைவனான அற்புதக் கபாலிநாதனும் அதிசயவல்லியான கற்பகாம்பிகையும் அன்பர்களுக்கு சகலசெல்வ யோகமிக்கப் பெருவாழ்வைத் தந்தருளி அவர்களை எந்நாளும் இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் போற்றிப்பணிந்து வேண்டுகின்றோம். வாழிநலம்சூழ!

-சிவசுந்தரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. அறிமுகவுரை

முப்போதும் திருமேனி தீண்டுவார் – அறிமுகம்

உலகில் மனிதர்களைப் படைத்த கடவுள் அவர்க ளுக்கு வாழ்வில் வழிகாட்டவும், தன்னை அறிவிக்கவும்,அறிந்து பூசிக்கவும்,உயர்ந்த குணமுடைய மக்களைப் படைத்தான். அவர்களுக்கு உயிர்கள் இக பர வாழ்வுகளில் செய்ய வேண்டிய செயல்கள்,ஆன்மாவின் கடமைகள் போன்றவற்றை விளக்கி உபதேசித்தான். அவன் உபதேசித்த அருளுரைகளே ஆகமங்கள் எனப் படுகின்றன. ஆகமங் களைக் கேட்டு அதன் படியே தங்கள் வாழ்வினை அமைத்துக் கொண்டவர்களே சைவர்கள் ஆவர். சைவர்களுக்கு வழிகாட்டவும் உலகநன்மைக்காக (பரார்த்தத்திற்காக)ச் சிவாலயங்களில் பூஜை செய்துவரவும் சிவபெருமானால் தோற்றுவிக்கப் பெற்ற வர்களே "சிவாச்சாரியார்கள்" எனப்படுகின்றனர். இவர்களைக் குருக்கள்மார் என்பர்.

சிவாச்சாரியார்கள் உலகியல் செயல் பாடுகளான கிராம நிர்மாணம்,ஆலயநிர்மாணம், வாழும்வகைகள், உலகியல் பொருட்கள் அவற்றின் தன்மை, மாடமாளிகை முதல் குகைகள் வரையாக உள்ள வாழ்விடங்களை அமைக்கும் முறைகள் போன்றவற்றை ஆகம நூல்களின் வழியே நன்கு உணர்ந்து ஆராய்ந்து மற்றவர்களுக்கு உபதேசித்தனர். அவர்கள் வாழ்வு வளம் பெறப் பலவகையான அரிய செய்திகளை விளக்கினர்.

ஆகமங்களில் வாழ்வியல் ஒழுக்கங்கள், வானசாஸ்திரம், பயிர்த்தொழில் மேம்பாடு, நீர்மேலாண்மை போன்ற அனேக செய்திகள் சொல்லப்பட்டிருந்தாலும், அவற்றில் உயர்ந்ததாக உலக உயிர்கள் வணங்கி மகிழ ஆலயங்களை அமைக்கும் முறைகளும் அதில் அதில் நடத்தவேண்டிய பூஜை போன்றவைகளும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.இதன்படி ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு அதில் தெய்வத்திருமேனிகள் நிலைப்படுத்தப்பட்டு முறையான பூசைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனை நடத்தும் உரிமையும் வழிநடத்தும் கடமைகளும் சிவாச்சாரியர்களுக்கு ஆண்டவனாலேயே வழங்கப்பட்டுள்ளன.

அவர்கள் வழிவழியாக வாழையடி வாழையாகச் சிவபெருமானைப் பூஜை செய்து வருவதுடன், உலகம் நலம் பெற ஆலயங்களில் வழிபாடு,விழாக்கள்,சிறப்பு பூசைகளைச் செய்கின்றனர். அவர்களது தாரக மந்திரம் "**லோகா: ஸமஸ்தா சுகினோ பவந்து**" என்பதேயாகும். இதுவே தமிழில் "**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க**" எனப் படுகிறது.

இறைவனால் படைக்கப்பட்டு உலகம் வாழ ஆலயங்களில் சிவபூசை செய்யும் உரிமைகளைப் பெற்ற சிவாச்சாரியார்கள் நல்லநாள் நேரங்களைக் குறிக்க வானசாஸ்திரம் பயின்றிருக்கின்றனர். கோள்களின் நிலை நட்சத்திரங்களின் நிலையை ஆராய்ந்து சுப நாட்கள்,சுபவேளை,சுபஹோரைகள் ஆகியவற்றை கணிக்கும் திறமையைப் பெற்றிருக்கின்றனர்.

இறைவனால் அருளப்பட்ட ஆகமங்களில் தேவைக்கு ஏற்பத்தம் வழித்தோன்றல்களுக்கு உபதேசித்தனர். அத்துடன் ஆலய வழிபாட்டினை செய்வதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றனர். அவர்கள் தென்னகமெங்கும் ஊர்தோறும் உள்ள ஆலயங்களில் உலக நன்மைக்காக சிவவழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

இவர்களே "முப்போதும் திருமேனி தீண்டுவார்" என்று அழைக்கப்படுகின்றனர். ஸ்ரீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. நாயன்மார்கள் வரலாறு (பெரிய புராணத்தில் உள்ளபடியும் வட்டார வழக்குக்கதைகளும்)

திருத்தொண்டர் புராணம் - இரண்டாம் காண்டம் - பத்தராய்ப் பணிவார் சருக்கம்

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம்

எப்போதும் இனிய பிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப் போத நெறி வந்த விதி முறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம் மிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதல் சைவராம் முனிவர். .1

தெரிந்து உணரின் முப்போதும் செல் காலம் நிகழ் காலம்
வருங்காலம் ஆனவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப் பெருமை யாம் புகழும் பெற்றியதோ. .2

நாரணர்க்கும் நான்முகர்க்கும் அறிய ஒண்ணா
நாதனை எம்பெருமானை ஞானமான
ஆரணத்தின் உள்பொருள்கள் அனைத்தும் ஆகும்
அண்ணலை எண்ணிய காலம் மூன்றும் அன்பின்
காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர் தங்கள் கமல மலர்க்
கழல் வணங்கிக் கசிந்து சிந்தைப்
பூரணத்தால் முழு நீறு பூசி வாழும் புனிதர்
செயல் அறிந்தவாறு புகலல் உற்றேன். .3

இப்பாடல்களில் திரண்ட கருத்து :-

முப்போதும் திருமேனி தீண்டுவார்களான அருச்சகர்கள் எப்போதும் இனிய பிரானாக விளங்கும் சிவபெருமானின் மீது அன்புகொண்டு அவன் அருளாலே மெய்யறிவு நெறியான ஆகமவிதி முறைகள் வழுவாமல் அப்போதைக்கப்போது (முன்னிலும் அன்பு அதிகரிக்க) ஆர்வம் மிகப்பெருக மிக அன்பினராய் மூன்று (சந்நிதிகளிலும்) அர்ச்சிக்கும் முதன்மை பெற்ற சைவ முனிவர்களாவர்.

தெரிந்து உணர்ந்த மூன்று காலங்களான சென்ற காலம், நிகழ் காலம், வருங்காலம் ஆகியவற்றில் விரும்பி பெருமானை வழிவழியாக அர்ச்சனைகள் புரிகின்றனர்.

(இங்கு அருச்சனை என்பது பூஜையைக் குறிக்கிறது. பூசையானது நித்திய, நைமித்திக, காம்ய, பிராயச்சித்த பூஜை என நான்கு வகைப்படும். நித்யபூஜை என்பது தினப்பூஜையாகும். நைமித்திகம் என்பது தீக்ஷை கும்பாபிஷேகம் மற்றும் சிறப்புப் பூசைகளான விழாக்களாகும். காம்யம் என்பது தனக்காக மட்டுமே செய்யப்படும் வழிபாடுகளாகும். பிராயச் சித்தம் என்பது தீயபலன்கள் அணுகாதிருக்கச் செய்யப்படும் கழுவாய்ப் பூசைகளாகும்.இத்தகைய பூஜைகளைச் செய்யும் கடமை சிவவேதியர்களான சிவாச்சாரியர்களான (குருக்கள்மார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களுக்கே உரியன). இவர்கள் வழிவழியாக ஆகமவழி பூஜைகளைக் குன்றாமல் போற்றுகின்றனர். சிவவேதியர்களான இவர்களது குலத்தின் பெருமையை நம்மால் விளக்க முடியாது என்பதே உண்மையாகும். வழி வழியாக வருபவர்கள் என்று இவர் களைக் கூறுவதால் இது ஆதிசைவர்களையே குறிக்கும் என்பர்.

சேக்கிழார், திருமாலும் பிரமனும் அறிய முடியாதவனாக இருக்கும் சிவபெருமானை அவன் அருளிய ஞானமயமாக விளங்கும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ள உண்மைப் பொருளை உணர்ந்து, அதன் படியே மூன்று காலங்களிலும் அன்பு மிகுந்த காரணத்தால் அவரை அர்ச்சித்து வழிபடும் சிவமறையோர்களுடைய கமல மலர்க்கழல் வணங்குவதாகக் கூறுகின்றனர். இதன் மூலம் அவர்கள் பெருமானைப் போலவே வீரக்கழல்கள் அணிந்திருந்ததையும் அறிகிறோம்.

இப்பாடல்கள் மூலம் ஆகமங்கள் மெய்யான அறிவால் சொல்லப்பட்டவை என்பதையும், சிவமறையோர் சிவாச்சாரியார்கள் சிவவேதியர் என்றும் முதற்சைவர் என்றும் அருச்சகர் என்றும் நூல்களில்குறிக்கப்படுகின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

பொதுவாக முப்போதும் திருமேனி தீண்டுவார் என்பதற்கு காலை,மாலை,நண்பகல் ஆகிய மூன்றுசந்தியா காலங்களில் அர்ச்சனை செய்பவர்கள் என்று பொருள் கொள்ளுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்தியரைப் பற்றிச் சொல்லும்போது "சந்தி மூன்றிலுந் தாபரம் நிறுத்திச் சகளி செய்திறைஞ்சும் அகத்தியர்" என்றும் கூறுவதால் தினமும் மூன்று சந்திகளில் பூசிப்பதையே முப்போதும் திருமேனி தீண்டுவார் என்று குறிப்பதாகக் கூறுவர்.

சேக்கிழார் பெருமான் தெரிந்து உணர்ந்து மூன்று பொழுதுகளுடன் சென்ற காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் விதிமுறை அர்ச்சிப்பவர் என்பதால் முப்போதும்திருமேனி தீண்டுவார் ஆயினார் என்பார்.

வழி வழியாய்...

மலையில் பிறந்து பெருங்கடலை நோக்கி ஓடும் நதியானது நிலையாக ஓடிக் கொண்டிருப்பதுபோல் தோன்றினாலும்,அதிலுள்ள நீர்த்துளிகள் கணம்தோறும் புதியது. அதுபோல் சிவாச்சாரியார்கள் என்னும் ஜீவநதியில் உயிர்கள் பிறந்து சிவசம்பந்தத்தால் சிவார்ச்சனை புரிந்து மோட்சம் அடைகின்றனர். நதியைப் போல் சிவாச்சாரியார்கள் குலமும் தழைத்து சைவப் பெருவெளியில் ஓடிக்கொண்டே இருக்கிறது.

அதனால் ஆலயங்களில் சைவப்பயிரான சிவபூஜை நன்கு விளைந்து அன்பர்களுக்குப் பயன்தருகிறது. சிவாச்சாரியார்கள் பற்றிய செய்திகளை ஆகம பத்ததி நூல்கள் விரிவாக கூறுகின்றன. இவற்றில் அவர்களது வாழ்வியற் சடங்குகள், கைக் கொள்ள வேண்டிய நடை முறை பழக்க வழக்கங்கள் போன்றவை விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்போதும் திருமேனி தீண்டுவார்

மூன்று காலங்களிலும் சிவபெருமானைத் தீண்டிப் பூசிக்கும் உரிமை பெற்றவர்கள் சிவாச்சாரியர்கள் என்பதால், அவர்கள் "முப்போதும் திருமேனி தீண்டுவார்" என்று அழைக்கப்பட்டனர். சுந்தரர் அந்தச் சொல்லாலேயே அவர்களைப் போற்றியுள்ளார்.

ஆலயங்களில் அமைந்துள்ள தொகையடியார் அறுபத்துமூவர் வரிசையில் அறுபத்து மூன்றாவதாக "முப்போதும் திருமேனி தீண்டுவாரின்" திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

இவர் உலகிலுள்ள அனைத்துச் சிவாச்சாரியர்களின் பிரதிநிதியாக விளங்குகிறார். இவரது திருவுருவத்தைக் குடம், புஷ்பக்கூடை ஆகியவற்றுடன் அமைக்கவேண்டுமென்று கூறுவர்.

புண்ணியம் செய்தார்க்குப் "பூவுண்டு நீருண்டு" என்று கூறப்படுவதால் சிவ பூசைக்கு ஆதாரமான இவற்றைத் தாங்கி நிற்பவராக அமைக்கப்பட வேண்டுமென்று கூறுவர். பெரிய புராணத்தில் பத்தராய்ப் பணிவார்கள் சருக்கத்துள் இரண்டு பாடல்களில் இவர்களது பெருமைகள் கூறப்பட்டு உள்ளன.

பொதுவாக இவர்களது திருவுருவங்கள் பின்குடுமியுடன் உத்திராட்ச மாலைகள் அணிந்தவர்களாக நீண்ட ஆடையை அணிந்தவர்களாக அமைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் முன் கைகளைக் கூப்பி வணங்கும் நிலையில் உள்ளனர். அடுத்து வரும் பக்கத்தில் அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர்ஆலயத்தில் இடம் பெற்றுள்ள மூலவர், உலாத்திருமேனிகளைக் காணலாம்.

மேலே நமது மரபின்படி வரைந்துள்ள ஓவியத்தைக் காண்கிறோம். இதில் அவர் சிரோவஸ்திரம் தரித்தவராக, சிரோவடம், மகரகண்டிகை அணிந்துள்ளார். பஞ்சகச்சமாக அரையாடையைக் கட்டி அதன்மீது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடைக்கச்சையாக ஆடை யை அணிந்துள்ளார். உத்தரியத்தை முறுக்கிப் பூணூலைப் போல அணிந்துள்ளார்.

சிவாச்சாரியார்களின் அடையாளங்களில் முதன்மை பெற்ற ஐந்தான சிரோவஸ்திரம், உபவீதம்,உத்தரியம்,விபூதி, ருத்திராட்சம் ஆகிய ஐந்தும் இதில் காட்டப்பட்டு உள்ளன.

அத்துடன் மணியும் அபிஷேக கலசமும் ஏந்தியவராகக் காட்சி தருகிறார்.

கோயிற் பணியை ஏற்கும்போது அவர்களிடம் உரிமை ஏற்பதன் அடையாளமாக அபிஷேக கலசமும், கை மணியுமே அளிக்கப்படும். அபிஷேக கலசம் என்பது பெருமானை நீராட்டி வழிபடுவதற்கும், கை மணி என்பதுதேவர்களை அழைத்து மகிழ்வதற்கும் அடையாளமாக இருப்பதாகும்.

இவர்கள் பொறுப்பை விட்டு விலகும் போதும் மணி, கலசத்தை பலிபீடத்தடியில் வைத்து விடைபெறுவது வழக்கம். அதையொட்டியே இங்கு அபிஷேக கலசம், மணியுடன் அமைக்கப்பட்டுள்ளார்.

தாராசுரம் சிற்பத்தில் அபிஷேகம் செய்வதற்கான சங்கும் மணியும் காட்டப்பட்டுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கதாகும் ❀

முப்போதும் திருமேனி தீண்டுவார் உலாத்திருமேனியும் மூலவர் திருமேனியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிற்ப ஓவியங்களில் சிவாச்சாரியார்கள்

முன்நாளில் வழிபாட்டிற்கெனத் தெய்வங்களின் உருவங்களை தீட்டி வைக்கும்போது அதில் பூஜை நடந்துகொண்டிருப்பதைக் குறிக்கும் வகையில் அர்ச்சகர் கற்பூரஆரத்தியோ அடுக்கு (ரத) ஆரத்தியோ காட்டும் வகையில் தீட்டும் மரபு கடைபிடிக்கப்பட்டது.

ஆலயமுகப்புகளில் இடம் பெறும் சுதைச் சிற்பங்களிலும் இம்முறை கையாளப்பட்டது. அவ்வகையில் செய்யப்பட்டுள்ள சுதைச் சிற்பத்தினை இங்கே காண்கிறோம். இது திருப்பனந்தாள் அருணஜடேசுவரர் ஆலயத்தின் முகப்பில் உள்ள இடபாரூடர் சிற்பமாகும்.

மகாமண்டபத்தின் முகப்பில் பஞ்ச மூர்த்திகள் தத்தம் வாகனங்களில் வீற்றிருந்து காட்சியருளும் சிற்பத் தொகுதி உள்ளது. அதில் நடுவில் இடம் பெற்றுள்ளது இந்த இடபாரூடர் வடிவமாகும்.மேலே ஒருவர் குடைபிடிக்க பெண்கள் இருவர் சாமரம் வீசுகின்றனர். இடதுபுறம் ஒருவர் பலிப் பாத்திரத்தை (நிவேதனத்தை) தலையில் ஏந்தி இடது கரத்தில் தண்ணீர் கெண்டியை வைத்துக் கொண்டுள்ளார். வலதுபுறம் அர்ச்சனை இடது கையில் கைமணியை அடித்தவாறு வலது கையால் அடுக்கு ஆரத்தியை உயரத் தூக்கிக் காட்டுகிறார்.



இது போன்று முகப்புச் சுதைச்சிற்பங்களில் அருச்சகர்களையும் சேர்த்தே அமைக்கும் வழக்கம் இருந்து வந்தது. பின்னாளில் இம்முறை கைவிடப்பட்டுள்ளது. காரணம் பொருளாதார நிலையும் பழமையை கடைப்பிடிக்க செய்யப்படாததுமேயாகும்.

விநாயகருடன் அவரைப் பூசை செய்யும் அர்ச்சகர்கள்

எதிர் பக்கத்திலுள்ள திருமேனிகளின் விளக்கம்:

இவர்கள் தலைமீது கிரீடம் போன்ற அமைப்பு உள்ளது. அது சிவபெருமானின் சடைமுடிபோல் செய்யப்பட்டுள்ளது. கீழ் விளிம்பு சிரோவடமான உத்திராட்சத்தின் மீது உள்ளது. இடது கையில் மலர் மாலை ஒன்றை வைத்துள்ளார். பூவினால் செய்யப்படுவது பூசை என்ற அடிப்படையில் பூசைக்குரிய மலர் மாலையை ஏந்தி கும்பிட்டவாறு உள்ளார். இடையில் நீண்ட ஆடையும் அரைக்கச்சும் அணிந்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. சிற்ப ஓவியங்களில் நாயன்மார்கள்



தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்திலுள்ள அறுபத்துமூவர் தொடர்வரிசையில் முப்போதும்திருமேனி தீண்டுவார் என்னும் தலைப்பில் மூவரைக் கொண்ட தொகுதி செதுக்கப்பட்டுள்ளது.இதில் மூன்று லிங்கங்கள் மூன்று சிவாச்சாரியார்கள் இடம் பெற்றுள்ளனர்.

முதலில் ஒருவர்அமர்ந்திருக்க அவர்முன்னே அழகிய சிவலிங்கம் உள்ளது.சிவலிங்கத்தின் முன்னே ஒரு முக்காலிமீது சங்கு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதற்கு நேர்மேலே விட்டத்தில் பெரிய மணி ஒன்று கட்டித் தொங்க விடப்பட்டுள்ளது. இது அவர் பூஜை செய்து கொண்டிருப்பதைக் குறிக்கின்றது. அடுத்து ஒருவர் அமர்ந்திருக்க அவர் முன்னே சிவலிங்கம் உள்ளது. அடுத்து மூன்றாவதாக ஒருவரும் அவர் முன்னே சிவலிங்கமும் உள்ளது.

இந்த இலிங்கங்கள் மூன்று சந்தியா காலங்களைக் குறிக்கும் இலிங்கங்கள் என்பர். மேலும் இந்த லிங்கங்கள் பூத, வர்த்தமான,பௌஷ்ய (கடந்த காலம்,நிகழ்காலம், எதிர் காலம்) ஆகிய மூன்று காலங்களைக் குறிக்கும் லிங்கங்கள் என்றும் அந்த மூன்றுகாலங்களி லும் அழிவற்றவர்களாக இருந்து பூஜை செய்து வருபவர்கள் அர்ச்சகர்கள் என்பதையும் இது குறிக்கிறது என்பர். இப்படி காலங்கள் தோறும் இலிங்கங்களை பூசித்துக் கொண்டிருக்கும் காரணத்தால் ஆதிசைவ சிவாச்சாரியர்களான இவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவார்கள் என்று அழைக்கப்படுகின்றனர்

4. நாயன்மார்களுக்கான விழாக்கள்

முப்போதும் திருமேனி தீண்டுவார் என்பவர்கள் முக்காலத்தும் வாழும் கூட்டத்தினரின் குறியீடு என்பதால் அவருக்கென குரு பூஜை விழாக்கள் இல்லை. அதனால் தனியே புறப்பாடும் இல்லை.

அறுபத்துமூவர் விழாவில் இவர்கள் கூட்டத்துடன் எழுந்தருளுகின்றனர். சில தலங்களில் பங்குனி இறுதிநாளில் ஒன்பது தொகையடியாரையும் எழுந்தருளச் செய்து விழா நடத்துகின்றனர்.

அதிலொன்றாக இவர்கள் இடம்பெறுகின்றனர். இவர்களுக்கு என தனி விழாக்கள் ஏதும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம வடிவே போற்றி! அருள்நிறை ஆச்சார்ய திருவே போற்றி!!
ஐயாறதனில் சைவனாகிய அண்ணலே போற்றி! போற்றி!!



சிவாகமச்செல்வர்களான

சிவாச்சார்யார்கள்

உயர்ந்த நல்ல மரத்தின் வேரில் ஊற்றப்படும் நீரானது அடிமரம், கிளைகள், இலைகள், மலர்கள், பழங்கள் ஆகியயா வற்றுக்கும் பயனாவதுபோல் உலகநலன் வேண்டிச் செய்யப்படும் சிவபூஜையானது, உலகிலுள்ள சகல ஜீவ ராசிகளுக்கும் நன்மையைத் தருகிறது.

உலகிலுள்ள உயிர்கள் யாவும் நலம் பெற்றுச் சுகமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே ஊர்கள்தோறும்ஆலயங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் தடையின்றி பூஜைகள் நடைபெறத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தில் முறையாகச் செய்யப்படும் பூசைகள் இறைவனை அடைந்து அவன் அருளை உலக உயிர்கள் யாவும் அடையும்படிச் செய்கின்றது.

எனவே,சிவபூசையை உயிரில் கலந்த உணர்வோடும்,பக்தியாகவும் முறையாகவும் செய்யவேண்டும்.

அதனை எல்லோராலும் செய்ய இயலாது என்பதால் இறைவனே அதற்காகச் சிலரைத் தோற்றுவித்து அவர்கள் முறையாகச் செயல்பட அவர்களுக்கு ஆகமம் என்ற விதி முறை நூல்களையும் வகுத்தளித்துள்ளான்.

நாடு நலம் பெற ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளபடி பரார்த்த சிவபூசை (பர+ அர்த்தம்: உலகநன்மையின் பொருட்டு) செய்ய வேண்டும். ஆகம நெறியில் வந்து தீக்ஷை பெற்ற சிவாச்சாரியார்கள் மட்டுமே அதற்கு உரிய தகுதி படைத்தவர்கள் என்று புராணங்கள், திருமுறைகள், ஆகமங்கள், திருமூலரின் திருமந்திரம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் பூசை செய்பவர்கள் அர்ச்சகர், குருக்கள், சிவாச்சாரியார், பட்டர், நம்பியார் என்னும் பலபெயர்களால் அழைக்கப்படுகின்றனர். சிவாச்சாரியார்கள் என்பது பொதுப் பெயர். இவர்கள் உபநயனம் ஆன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு வேதத்தின் சிலபகுதிகளையும் ஆகம நெறி வழிபாட்டையும் முறைப்படி கற்கின்றனர்.சிவதீக்ஷை பெற்று தினமும் ஆத்மார்த்த (ஆன்ம நலன் பொருட்டு) பூசை செய்கின்றனர்.பின்னர் இல்லறம் ஏற்றுச் சில காலம் ஆனபின் சிவாச்சாரியார் ஆவதற்கான தகுதியை அடைய ஆசார்ய அபிஷேகம் செய்து கொள்ளுகின்றனர். அதன் பிறகே சிவாச்சாரியார் என்று அழைக்கப் படுகின்றனர்.

இத்தகைய சிறப்புப் பெற்ற சிவாச்சாரியார்களைச் சிவமாகவே போற்றி வழிபட வேண்டுமென்றுப் பெரியோர்கள் கூறுகின்றனர். சிவமஞ்சரியின் இந்தமலர் சிவாச்சார்யர்களின் பெருமைகளைப் பேசுவதாக மலர்கிறது.

இதில், சிவபெருமான் சிவாச்சாரியார்களை தோற்றுவித்தது. அவர்களுக்கு ஆகமங்களை அருளியது போன்றவை சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டுள்ளன. மேலும் சிவாச்சாரியார்களின் கடமைகள், செயல்பாடுகள் முதலிய பலசெய்திகளும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, காலப்போக்கில் மன்னர்கள் வடநாட்டிலிருந்து சிவாச்சாரியர்களைக் குடியேற்றியது. அவர்கள் அரசசெல்வாக்கைப் பெற்று கோயில் பணிகளில் ஈடுபட்டது போன்றவைகளும் விளக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் தானே, மண்மேல் சிவாசாரியராகத் தோன்றிச் சிவபூசை செய்து அன்பர்களுக்கு அருள்புரிந்தது,சிவாச்சார்ய குடும்பத்தினருக்கு அருளியது முதலான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

ஐயாறதனில் ஆதிசைவனாகி சிவபூஜை செய்த அம்தண் கபாலியும் அவன் பங்கில் வளர் கற்பகவல்லிதேவியும் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வை அளிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகிறோம்.

-சிவசுந்தரி

அன்பர்களின் கவனத்திற்கு....

இந்நூலுக்குச் சிவாச்சாரியர்கள் என்ற பெயரிடப்பட்டிருந்தாலும், இந்நூலில் சிவாச்சாரியார்களின் பெருமைகளைப் பேசுவதுடன், சிவாலயங்களில் வேதநெறியில் பணிபுரிந்த வேதியர்கள், சமய தீக்ஷைகளைப் பெற்று அதன்மூலம் சிவாச்சாரியார்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் ஆகியோரைப் பற்றியுமான செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

நூலின் முதற்பகுதியில் சிவாச்சாரியர்களின் பெருமைகள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதி,சிவாலயங்களில் அருச்சனை புரிந்த வேதியர்களின் சிறப்புக்களை விளக்குகிறது. மூன்றாம் பகுதியில் தென்னகத்தில் பெருமை பெற்று விளங்கிய பாசுபத ஆசாரியர்களைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் சிந்தனைக்கினிய சிறுசிறு செய்திகளும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமயநூல்கள் சொல்லும் பல்வகை சிவாச்சாரியார்கள்

சிவபெருமானை வழிபடுவோர்அனைவரும் சைவர் ஆவர். இவர்களில் சிவதீக்ஷைகளைப் பெற்றவர்கள் சிவர் என்றும், சிவாச்சாரியார் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிறப்புகருதி இவர்களை,அநாதி சைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர்,பிரவரசைவர், அந்திய சைவர் என்று சிவமகாபுராணம் வகைப்படுத்துகிறது. இவர்கள் எல்லோருமே ஆத்மார்த்த பூஜை செய்வதற்கான தகுதி படைத்தவர்களாவர். இவர்களைச் சப்த சைவர்கள் என்பர்.

இவ்வரிசையில் முதலிலுள்ள அநாதி சைவன் என்பது சிவபெருமானை மட்டுமே குறிக்கும்.

அடுத்தான ஆதிசைவர்கள் என்பவர்கள் சிவாலய வழிபாட்டை செய்வதற்கென்றே சிவபெருமானால் படைக்கப்பட்டவர்கள். இவர்கள் சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்திலிருந்து தோன்றியவர்கள், சதா சிவமூர்த்தியால் தீக்ஷிக்கப்பட்டவர்கள்.

காமிகாகமம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களை அவரிடமிருந்து பெற்று, அதில் சொல்லியுள்ளபடியே சிவபெருமானைப் பூசித்து வருபவர்கள். இவர்களைச் சிவபுத்திரர் என்றும் கூறுவர்.

புராணங்கள் இவர்களை சிவத்துவிஜர் என்று அழைக்கின்றன. சிவாச்சாரியர்களில் ஆசாரிய அபிஷேகம் செய்யப் பெற்றவர்களே பிரதான ஆச்சாரியராக இருந்து கும்பாபிஷேகங்களில் பூசை செய்யவும், பிறர்க்குத் தீக்ஷை செய்து வைக்கவும் உரிமையும் தகுதியும் படைத்தவர்கள் ஆவர். சிவாலயங்களில் பூசை செய்யவும் அபிஷேகம் அலங்காரம் நடத்தவும் தகுதி பெற்றவர்கள்.

வேதநெறியைப் போற்றும் பிராமண குலத்தில் தோன்றி சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த பூஜையுடன் சிவநெறியில் நிற்பவர்கள் மகா சைவர்கள் எனப்படுவர்.

போர்நெறியில் வல்ல க்ஷத்ரியர்களும், வியாபாரம் செய்யும் வைசியர்களும் நான்காம் நிலையிலான அனுசைவர்களாவர். தொல்குடியான விவசாய நற்குடியில் பிறந்தவர்கள். சிவதீக்ஷை பெற்றுச் சிவநெறி நிற்பவர்கள் அவாந்தர சைவர் ஆவர்.

இவர்களைத் தவிர்த்து வண்ணார், குலாலர் முதலியோர் ப்ரவர சைவராவர். அந்நிய (வேறு)மதத்தில் இருந்துகொண்டு சிவபெருமானை வழிபடுபவர்களும், அண்டை நாட்டினைச் சேர்ந்த சிவபக்தர்களும்,அந்திய சைவர் என்று அழைக்கப்படுகின்றனர்.

இவர்களுடைய ஒவ்வொரு பிரிவிலும் தனித்தன்மை பெற்ற குருமார்கள் தோன்றி, ஆகமம் கூறும் தீட்சைகளைப் பெற்று சிவ வழிபாடு செய்து வருவதுடன் உயர்ந்த மாணவர்களையும் அன்பர்களையும் உருவாக்கிச் சைவப்பயிரைக் காலங்காலமாக வளர்த்து வருகின்றனர்.

இவர்கள் எழுவரில் ஆதிசைவர்கள் மட்டுமே சிவாலயங்களில் (உலக நன்மைக்காக சிவவழிபாடு செய்வதெற்கென கட்டப்பட்டுள்ள பரார்த்த சிவாலயங்கள்) பூசை செய்யும் தகுதியைப் பெற்றிருக்கின்றனர்.

மற்றவர்கள் அன்பினாலும், உரிய முறையில் தீக்ஷைகளைப் பெற்றும், ஆத்மார்த்த பூஜைகளைச் செய்வதுடன் சிவாலய தரிசனத்தையும் ,சிவப்பணிகளை யும் மேற்கொண்டு சிவனருளில் திளைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரலாற்று வெளியில் சிவாச்சார்யார்கள்

ஆகமங்களும் புராண நூல்களும் கூறும் ஏழுவகை சைவர்களை முதன் கட்டுரையில் கண்டோம். இப்போது கால வெளியில் பேசப்படும் சிவாச்சார்யார்களைக் காணலாம்.

ஆலயங்களில் சிவபூஜை செய்வதற்கென்றே சிவபெருமானால் படைக்கப்பட்டவர்கள் ஆதிசைவ சிவாச்சார்யர்கள்.

இவர்களுக்கு அடுத்தபடியாக சைவ சமயத்தை ஆராய்ச்சி செய்து அதில் படிப்படியாக பலதீக்ஷைகளைப்பெற்று சிறப்புப் பெற்று ஆச்சார்ய அபிஷேகம் செய்து கொண்டு சிவாச்சார்யார்களாக இருப்பவர்களைக் காண்கிறோம். இவர்கள் ஆலய வழிபாட்டில் துணை நின்றாலும் கருவறையில் செய்யப்படும் பூசைகளைச் மேற்கொள்பவர்களாக இல்லை.

இந்த சிவாச்சாரியர்கள் தனது அன்பர்கள் கூட்டத்திற்கு சிவஞானத்தை போதிப்பதும் ஆகம நூல்களை பயிற்றுவிப்பதும் தீக்ஷைகளைத் தந்து ஆத்மார்த்த பூஜைகளைச் செய்விப்பவர்களாகவுமே இருப்பவர்கள்.

மூன்றாவதாக வடநாட்டில் இருந்து தென்னகத்திற்கு வந்து குடியேறி இங்குள்ள பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொண்டு சிவாச்சார்யர்கள் ஆனவர்கள். குறிப்பாக பாசுபதம் என்னும் பிரிவினர் இதில் முதன்மைபெறுகின்றனர். இவர்கள் தனிமடங்களைத் தோற்றுவித்து சைவம் வளர்த்தவர்கள் ஆவர்.

நான்காவதாக இருப்பவர்கள் தங்கள் மகிமையாலும் சிவபக்தியாலும் மேன்மை பெற்றவர்களாக இருப்பவர்கள். இவர்கள் பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தியவர்கள். சிவபெருமானின் மகிமைகளைப் பேசும் நூல்களை இயற்றியவர்கள்.இவர்கள் பிறப்பாலன்றி தமது மகிமையால் சிவாச்சாரியார்கள் என்று அழைக்கப்படுகின்றனர்

இப்படி நான்கு வகையினராக சிவாச்சாரியார்கள் இருந்தாலும் இவர்களுக்கு அடிப்படையாக இருப்பது சிவபக்தி, சிவ பூஜை, சிவாகமங்கள் என்பனவே ஆகும். இவர்களில் பலர் ஆகமங்களை நன்கு பயின்றனர்.

ஆகமங்களிலுள்ள சுலோகங்களில் லட்சத்திற்கும் மேலானவற்றை அறிந்திருந்தனர். இப்படி லட்சத்திற்கும்மேற்பட்ட சுலோகங்களில் தேர்ச்சி பெற்று அவற்றை மனதுள் இருத்தியவர்கள் " லட்சத்தியாயி " என்று அழைக்கப்பட்டனர்.

இப்படி பலவகை சமூகத்தினரும் சிவ தீக்ஷை பெற்று சிவாச்சாரியர்கள் ஆனதால் ஆகம வழி அந்தணர்கள் தம்மை ஆதிசைவர்கள் என்று அழைத்துக்கொண்டனர்.

எனவே சிவாச்சாரியார்கள் ஆதிசைவ சிவாச்சாரியார்கள், சிவாச்சார்யர்கள் என்று இருபிரிவாக உள்ளனர்.

இதில் ஆதிசைவர்கள் மட்டுமே பரார்த்த பூஜையான சிவாலயங்களில்செய்யப் படும் பூசைகளை நடத்துவதற்கு உரியவர் களாவர். மற்றைய வகுப்பார் ஆத்மார்த்த பூஜையும் சீடர்களுக்கு சிவஞானத்தை உபதேசிப்பவர் களாகவும் செயல்படுகின்றனர்.

❀❀❀❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியார்களின் தோற்றம்

சிவபூசை செய்வது உயிருக்கு நன்மை தருவதாகும்.அது இகவாழ்விலும் பர வாழ் விலும் மேன்மையை அளிக்கிறது. அதனால் எல்லோரும் முறையாகச் சிவ தீக்ஷை பெற்று சிவபூசை செய்ய வேண் டும். அது ஆத்மார்த்த பூஜை எனப்படும். (ஆத் மார்த்தம் என்பது ஆன்மாவின் நலன் பொருட்டு செய்யப்படுவதாகும்)

அதுபோலவே உலகிலுள்ள அனைத்து உயிர்களும் நலமும் வளமும் பெறச் சிவா லயங்களை அமைத்துச் சிவபூசை செய்யப் படுகிறது. ஆலயங்களில் செய்யப்படும் பூசையானது பரார்த்த பூசை எனப்படும். மரத்தின் வேரில் ஊற்றப்படும் நீர் மரம், கிளை, கப்பு, இலை, மலர், பழம் எல்லா வற்றிற்கும் பயனாவது போல் முறையாகச் செய்யும் சிவாலய பூசையின் பயன் உலகி லுள்ள அனைத்து உயிர்களையும் சென்ற டைகிறது.

எனவே, சிவாலய பூசையை ஆகம நூல்களில் விதித்துள்ளபடி முறையாகச் செய்ய வேண்டும். சிவபெருமான் ஆகமங் களின்படி பூசிப்பதற்காக ஐந்து முகங் களில் இருந்தும் ஐந்து ரிஷிகளை உண் டாக்கினார். (இவர்களை ஊர்த்துவ முகத் திலிருந்து தோற்றுவித்தார் என்று சிவமகா புராணம் கூறுகிறது) இவர்கள் அகஸ்தியர், கௌசிகர், காஸ்யபர்,பாரத்வாஜர், கௌதமர் என்பவர்களாவர். இவர்களுக்கு பெருமான் முறையே தனது ஐந்து முகங்களால் தீக்ஷை அளித்தார்.

பெருமான் அவர்களுக்கு தீக்ஷை அளித்து ஆகமத்தை உபதேசித்து சிவாலய பூசைகளைச் செய்யும் அதிகாரத்தையும் வழங்கினான்.

அவர்கள் வம்சம் பல்கிப் பெருகிவளர, மனைவியரையும் படைத்தளித்தான். மேற் குறித்த ஐந்து ரிஷிகளின் பெயரால் சிவாச் சாரியார்கள் ஐந்து கோத்திரத்தார்களாக இருந்து வருகின்றனர். இவர்களிடமிருந்து சில உபகோத்திரங்களும் தோன்றியுள்ளன.

பொதுவாக இவர்களைக் குருக்கள் என்றும் சிவா சாரிய தீக்ஷை மேற்கொண்ட பின் சிவாச்சாரியார்கள் என்றும் அழைக் கின்றோம்.

காமிகாகமம் இவர்களுக்குப் பெரு மான் சிவதீக்ஷயால் அருள்புரிவதற்கும், பிரதிஷ்டை, உற்சவம், ஸ்நபனம், ப்ரோ க்ஷ ணம், பிராயச்சித்தம் அபிஷேகம் முதலான சடங்குகளைச் செய்துவைப்பதற்கும் அதிகா ரம் வழங்கினார் என்று கூறுகிறது. இவர்கள் அன்பர்களுக்கு சிவதருமங்களை விவரித் துக் கூறி சைவத்தை மேன்மைப்படுத்துகின் றனர்.

இவர்கள் தமது கோத்திரத்திற்கேற்ப பல்வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக் கின்றனர்.

(சிலதலங்களில் மட்டும் அத்தலத்து சிவலிங்கத் திருமேனியைத் தொட்டுப் பூசிக் கும் உரிமை அத்தலத்துச் சிவாச்சார் யர்க ளுக்கு மட்டுமே உரியதாக இருந்து வருகி றது. அவ்வூரில் பெண்ணெடுத்தவர்கள் சுவீ காரம் வந்தவர்கள் முதலானவர்கள் சுற்றுக் கோயில்களை மட்டுமே பூசிக்க லாம். மற் றைய உறவினர்கள் தீபாராதனை செய்ய வும் அருச்சனை செய்யவும் மட்டுமே அனு மதிக்கப்படுகின்றனர்.) ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சார்யர்களும் பஞ்ச ரிஷிகளும்

சிவபெருமான் ஆதியில் தம் ஐந்து முகங்களில் இருந்தும் அகஸ்தியர், கௌசிகர், காஸ்யபர், பாரத்வாஜர், கௌதமர் என்ற ஐந்து ரிஷிகளைத் தோற்றுவித்தார். இவர்களைப் பஞ்சரிஷிகள் எனஅழைப்பர். இவர்கள் சிவபெருமானிடமிருந்து ஆகம நூல்களைப் பெற்றதுடன் பூசை முறைகளையும் அறிந்துகொண்டனர்.

இவர்கள் வம்சத்தில் வந்தவர்களே வாழையடி வாழையென வந்து சிவாலயங்களில் உலக நலன் வேண்டி முறையாகப் பூசைகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் ஐவருக்கும் மற்றுமுள்ள ரிஷிகளுக்கும் நித்திய அனுஷ்டானத்தில் தர்ப்பணம் செய்யப்படுகிறது. இதற்கு ரிஷி தர்ப்பணம் என்பது பெயர்.

இதேபெயரில் வேதங்களிலும் புராணங்களிலும் பல ரிஷிகள் உள்ளதையும் காணலாம்.அவர்கள் இவர்களிலிருந்து வேறானவர்கள். இவர்கள் மட்டுமே ஆலயங்களில் சிவபூசைசெய்யும்உரிமை பெற்றவர்களாவர். சிவனருளால் தோன்றிய ரிஷிகளைச் சிவசிருஷ்டி ரிஷிகள் என்றும், வேத வழிபட்ட ரிஷிகளை ப்ரம்மசிருஷ்டி ரிஷிகள் எனவும் அழைக்கின்றனர்.

இந்த ரிஷிகளிடமிருந்து தோன்றிய வர்கள் பல கோத்திரங்களை உருவாக்கியுள்ளனர். அதனால் கோத்திரப் பிரவர்த்தம் உண்டாகி பலப்பல கோத்திரங்கள் உண்டாயின.

கோவை மாவட்டக் கல்வெட்டுக்களில் பலவிதமான கோத்திரர்களைக் காண்கிறோம்.ஈரோடுமாவட்டம் அனுமீசர் கோயில் கல்வெட்டு இக்கோயிலில் காணி உடைய சிவப்பிராமணரில் கௌசிக கோத்திரத்து திருவம்பல நம்பியைக் குறிக்கிறது. மேற்படி மாவட்டம் சிவகிரியில் தலைய நல்லூரில் ஆதிசைவ தேவகன்மிகளில் கௌசிக கோத்திரம் உத்தம நம்பியைக் குறிக்கிறது.முருங்கைத் தொழுவு பிரம்ம லிங்கேசுவரர் கோயில் கல்வெட்டு காணியுடைய சிவப்பிராமணரில் கௌணியகோத்திரத்து உய்ய வந்த பட்டனைக் குறிக்கிறது.

மடவிளாகம் பச்சோட்டு ஆவுடையார் கோயிலில் காணி உடைய சிவப்பிராமணரில் காசிபகோத்திர சூரிய தேவரைக் குறிக்கிறது. உலகடம் உலகேசுவரர் கோயில் கல்வெட்டு சிவப்பிராமணின் பாலாசிரிய கோத்திரத்து ஆதிமூலம் என்பவனையும் அவிநாசி கல்வெட்டு காணி உடைய சிவப்பிராமணர் சாலங்காய கோத்திரத்து உடையான் சைவபுரந்தர சக்ரவர்த்தியேன் என்பவரையும் அவிநாசியை அடுத்த நடுவச்சேரி கோதைப் பிராட்டீசுவரர் கோயில் கல்வெட்டு சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்து எதிரிலாதான் நாயகன் காப்பிய கோத்திரத்து விம்ப நாயகனும் குறிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல் பஞ்ச ரிஷிகள் வழி வந்தவர்களால் அனேக கோத்திரங்களாச் சிவாச்சாரியார்கள் பெருகி நிலை பெற்றுள்ளனர் ❀

சிவபெருமானால் நேரடியாகப் படைக்கப்பட்டவர்கள் என்பதால் சிவாச்சாரியார்கள் கலம் என்றும் மற்றவர்கள் பிரம்தேவன் வழிவந்த ரிஷிகளால் படைக்கப்பட்ட ரிஷிகளின் மூலமாக வந்ததால் அகலம் என்றும் அழைக்கப்படுகிறார்கள் ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாச்சாரியார்கள்

சிவாலயங்களில் பணிபுரிவோரைப் பற்றிக் குறிப்படும் கல்வெட்டுக்கள் சில வற்றில் "ஸ்ரீபாதமூலப்பட்டுடையார்களும் பஞ் சாச்சார்யம் செய்வார்களும்" என்ற தொடரைக் காண்கிறோம். ஸ்ரீபாத மூலப்பட்டுடையார் கள் என்பவர்கள் ஆகம ஞானத்தில் தேர்ச்சி பெற்று சிவாலயப் பணிகளைத் தலைமை யேற்று நடத்துபவர்களாகவும் அவர்களுக் குத் துணையாக பணிபுரிவார் பஞ்சாச்சாரி யம் செய்வோர்களாகவும் விளங்கி வந்ததாக அறிகிறோம்.

பஞ்சாச்சாரியர்கள் என்போர் "ஆசாரி யர், அர்ச்சகர், அலங்கிருதர், சாதகர்,வாசகர்" என்பவர்களாவர்.

இவர்களில் ஆசார்யர் என்பவர் விசே ஷித்த சிறப்புப் பூசைகளைத் தலைமை யேற்று நடத்துவதுடன் ஆகம நூல்களில் கூறியுள்ள விஷயங்களைத் தமது உதவியா ளர்களுக்குக் கற்பிப்பவர் அறிவுறுத்துபவர்.

"அருச்சகர்" தினப்பூசைகளை முறைப் படி செய்பவர்."அலங்கிருதர் "சுவாமிக்குச் சிறப் பான அலங்காரங்களைச் செய்பவர்.

"சாதகர் "என்பவர் பூசைக்கு அவ்வப் போது தேவையான பொருட்களை முறைப் படுத்தி எடுத்துத்தருபவராவர்."வாசகர்கள்" என்பவர்கள் தினமும் பூசை வேளையில் வேத, ஆகமங்களை ஓதுவதுடன், மற்றவர் களுக்கும் விரித்துரைப்பவர்களாவர்.

பின்னாளில் மற்றவர்களின் பணியை யும் பட்டுடையார்களே மேற்கொண்டனர். இதனால் எல்லா சிவாசாரியார்களும் பட்டு டையார் (அ) பட்டர் என்று அழைக்கப்படு கின்றனர்.

மேற்குறித்த ஐவகைப் பணிகத் தவிர கட்டியம், பராக், திருவாசல் முதலான பணி களையும் சிவாசாரியர்கள் மேற்கொண் டிருந்ததை அறிகிறோம்.

சிவாச்சார்யர்களுக்குரிய சின்னங்கள்

சிவாச்சார்யர்களுக்குரிய சின்னங் கள் ஐந்தாகும். அவை விபூதி, உருத்தி ராட்சம் ,உபவீதம்,உத்தரியம், தலைச் சீலை என்பனவாகும்

ஆசாரிய இலக்கணம்

வேதங்கள், அவற்றின் அங்கங்கள், பலவிதமான மந்திர சாஸ்திரங்கள், தந்திர சாஸ்திரங் கள், முத்திரைகள், கிரியைகள், சிற்பசாஸ்திரங்கள், அவற்றில் மறைத்துக் கூறப்பட்டுள்ள இரகசியங்கள் என்னும் இவற்றை அறிந்தவராயும், ஒழுக்கமுடையவராயும், நற்குணமுடை யவராயும், இனிய வாக்கு உடையவராகவும் நல்ல வடிவமுள்ளவராயும், மங்களத்தைச் செய்பவராயும் இருக்கிற ஆதிசைவரையே ஆசாரியரெனப் பெரியோர் கொள்கின்றனர்.

தத்துவ ஞானத்துடன் கூடியவராயும், ஆறு அத்துவாக்களின் உண்மைகளை உணர்ந்து சிந்திப்பவராயும், பரதசாஸ்திரம், அஷ்டாங்க யோகம் என்னுமிவற்றை அறிந்தவராயும், சிவ ஞானத்தை உபதேசிப்பவராயும், ஆசாரியாபிஷேகத்தால் சுத்தமான ஆன்மாவை உடைய வராயும், சோதிட சாஸ்திரங்களைக் கற்றவராயும், வாக்கு வன்மையால் சுபத்தைச் செய்பவ ராயும் உள்ள ஆதிசைவர் ஆசாரிய சிரேஷ்டரென்று நூல்களிற் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்

சிவாலய வழிபாட்டை சிவாச்சார்யார்கள் குலத்தில் பிறந்தவர்கள் மட்டுமே முறையாகப் பயின்றுதகுதிகளைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்பது ஆகமங்கள் கூறும் செய்தியாகும். ஒரு சிவலிங்கமூர்த்திக்கும் அதனை பூஜை செய்யும் அர்ச்சகருக்கும் உள்ளது ஆண்டான் அடிமைஎன்னும் உறவாகும்.அதுவும்வழிவழி அடிமை என்னும் உறவாகும். அதனால் ஆகம வழிவந்த சிவாச்சாரியார்கள் குலத்து உதித்தவர்கள் மட்டுமே சிவாலய வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் என்பது விதியாக உள்ளது. ஆனாலும் அதிகார பலத்தாலும், அறியாமையாலும் ஆர்வக்கோளாறினாலும் பலர் தாமும் சிவபூஜைகளை மேற்கொள்வோம் என்றுமுன்வந்தனர். இவர்களைத் திருமூலர் பேர் கொண்ட பார்ப்பான் என்கிறார். இவர்கள் பூஜைகளை மேற்கொள்வதால்நன்மைக்கு பதில் தீமையே விளையும் என்பது அவரது கருத்தாகும். இதனை அவர்,

" பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்க்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே."

எனும் பாடலால் குறிக்கின்றார். வடிவத்தால் மட்டும் பிராமணனாக இருந்து கொண்டு தனது சாமார்த்தியத்தால் சிவாச்சாரியாராக நடித்து பூஜையை மேற்கொள்பவனைப் பேர் கொண்ட பார்ப்பான் எனப்படுகிறான். அவன் பூஜை செய்வதால் மிகுந்த வலிமை மிக்க அந்நாட்டை ஆளும் அரசர்களும் அல்லல் படுத்தும்என்பதாகும். அவர் செய்யும் பூஜையால் நன்மை உண்டாவதற்குப் பதிலாகத் தீமையே உண்டாகும்.கடும் பொல்லாத வியாதியை அடைவர். நாட்டில் பஞ்சம் உண்டாகுமென்று சிவபெருமானே சொன்னதாகத் திருமூலர் கூறுகிறார். ❀

தலபுராணங்களில் சிவாச்சாரியார் துதிகள்

சில தலபுராணங்களில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் விநாயகர், சிவபெருமான் என்று வரிசையாகத் தொடங்கி நாயன்மார்கள், தல அடியவர்கள் ஆகியோரை வாழ்த்தி வணங்குவதுடன் ஆதிசைவர்களையும் துதித்துப்பாடல் அருளிச் செய்திருப்பதைக் காணலாம். திருமயிலைத் தல புராணத்தில் இடம் பெற்றுள்ள ஆதிசைவர் துதியை இங்கே காணலாம்.

புத்தமுது, அனைய தமிழ்பொலியுமிசை
வளர்மயிலாபுரியென்றோது
முத்தி நகரைத் தினமும்நான் மறையாக மந்
தெரிந்தமூதூர் வைகுஞ்
சுத்தசிவவேதியரைப் பரசிவகாரிய
பரராய்த் துகளற்று ஓங்கு
முத்தமசைவத் தவரைத் தொழுதவர்
தாட்கமலம்எமது உளத்தில் வைப்பாம்.

❀ மேலும் துதிகளை பக்கம் 51ல் காண்க

புதிய அமுதம் போன்ற தமிழ் அன்னை பொலிவுடன் வீற்றிருக்கும் மயிலாபுரி என்று சொல்லப்படும் முக்திதரும் மயிலைத் திரு நகரில் தினமும் நான்கு வேதங்களையும் ஆகமங்களையும் தெரிந்தவர்களாய் வசிக்கும் சுத்த வேதியர்களாகவும், பரமசிவத்தின் காரியங்களைச் செய்பவராய் அறியாமையையும் ஓங்கியுள்ள உத்தம சைவர்களாக விளங்கும் சிவாச்சாரியார்களைத் தொழுபவர்களின் திருவடிகளை எனது உள்ளத்தில் வைத்துப் போற்றுவோம் என்பதாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சார்ய தீக்ஷை

(ஆச்சார்ய அபிஷேகம்)

ஆச்சார்யஅபிஷேகம் என்பது குருக்கள்மார்களுக்குரிய முக்கியமான வாழ்வியற் சடங்காகும். இது சிவாச்சார்யராகத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ளவும். ஆச்சார்ய தன்மை பெற்றதைக் குறிக்கும் வகையிலும் நடத்தப்படுவதுமான சடங்காகும். வழக்கம்போல் உபநயனம், சமய தீக்ஷைளைச் செய்து கொண்டு ஆகமங்களைக் கற்றும் தந்தையாருக்கும் குருபிரானுக்கும் உடனிருந்து பூஜை நடைமுறைகளைக் கற்றுத் தேர்ந்து வருபவர் திருமணம் செய்து கொண்டபின் விசேஷதீக்ஷை, உடையவர் பூஜை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு வழக்கமான பூஜைகளைத் தொடர்வர்.

அவர் ஆலய வழிபாட்டில் சிறப்பாகச் செய்யப்படும் சிறப்பு வேள்விகள், கொடியேற்றிச் செய்யப்படும் திருவிழாக்கள் ராஜ ரீக ஹோம பூஜை விழாக்கள், குட முழுக்கு வைபவங்கள் போன்றவற்றை நடத்தும் தகுதியும் நிர்வாகத் திறமையும் கொண்டவராக ஆனபின் ஆச்சார்ய அபிஷேகம் என்னும் சிறப்பான சடங்கை செய்து கொள்வார். இதன்பிறகு அவர் சிவாச்சாரியார் என்று அழைக்கப்படுவார்.

ஆச்சார்ய அபிஷேகம் என்பது திருமணம் ஆனபிறகே செய்யப்படும். இதில் கணவனுக்கும், மனைவிக்கும் சேர்ந்தே ஆகமவிதிப்படி தீக்ஷை அளிக்கப்படும். இதனை அவர் வழிவழியாக பூஜை செய்து வரும் சிவாலயத்திலேயே நடத்திக் கொள்ள வேண்டும் என்பதும், ஆச்சார்ய அபிஷேகத்தை சிவசந்நிதியில் சிவமூர்த்தியின் எதிரிலேயே நடத்த வேண்டும் என்பதும், அன்று உச்சிகாலத்திலும் மாலையிலும் மனைவி எடுத்துக் கொடுக்க சிவாச்சார்யார் மூலவருக்குப் பூஜைசெய்ய வேண்டும் என்பதும் நடைமுறையாகும்.

அரசனுக்கு நாட்டைஆளப் பட்டாபிஷேகம் செய்வதுபோல சிவராஜதானியில் சிவபூஜை செய்ய அளிக்கப்படும் அங்கீகாரமே ஆச்சார்ய அபிஷேகமாகும்.இந்த நிகழ்விற்குப் பின்னர் சிவாச்சாரியாரைச் சிவமாகவே போற்றுகின்றனர். ❀

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் சுவாமி சந்நிதி அம்மன் சந்நிதி ஆகியவற்றின் முன்னுள்ள ஆறுகால் மண்டபம் தனிச்சிறப்பு மிக்கதாகும். மீனாட்சியம்மன் சுந்தரரேசர் பட்டாபிஷேக விழாக்கள் இங்கு வைத்தே நடத்தப்படுகின்றன.

இக்கோயிலில் பணிபுரியும் சிவாச்சாரியாருக்குரிய ஆச்சார்ய அபிஷேகத்தை இந்த ஆறுகால் பீடத்தில் வைத்துச் செய்வதே வழக்கம். காலையில் நடைபெறும் ஆச்சார்ய அபிஷேகத்தை அடுத்து உச்சிகாலத்தில் அவர் கருவறையில் சோமசுந்தரரை பூசிக்கச் செல்வார்.

அப்போது அவர் மணியை ஏந்தி ஒலித்தவாறு முன்னே செல்ல, அபிஷேக கலசத்தை ஏந்தியவாறு அவரது மனைவி பின்னே செல்வார். கருவறையில் அம்மையார் அந்த கலசத்தில் நீரை முகந்து கொடுக்க ஆச்சாரியார்ய அபிஷேகம் செய்வார். பின்னர் அம்மையார் அடுக்காரத்தியை ஏற்றிக் கொடுக்க அருச்சகர் ஆராதனை செய்வார். இது ஆச்சார்யருக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியார்களின் பல்வேறு பட்டப் பெயர்கள்

திருக்கோயில்களில் இறைவனைத் தொட்டுப் பூசிக்கும் உரிமை பெற்றவர்கள் ஆதியில் திருமேனி தீண்டுவார் என்று அழைக்கப்பட்டனர். சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களை "முப்போதும் திருமேனி தீண்டுவார்" என்று சிறப்பித்துள்ளார்.

கேரளாவில் இறைவனைத் தொட்டு அருச்சனை புரிபவர்கள் இப்போதும் நடைமுறையில் திருமேனிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் இவர்கள் அருச்சகர், சிவாச்சாரியார், பட்டர் என்று பலவாறு பட்டப்பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். கல்வெட்டுகளில் சிவப்பிராமணர்,மகேசுவரர்,பட்டுடையார் என்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் இத்தகைய பட்டப் பெயர்களில் சிலவற்றின் விளக்கத்தைக் காணலாம்.

அர்ச்சகர்கள்

சிவவழிபாடு செய்வதை அர்ச்சனை என்று அழைப்பர். அம்பிகை சிவபெருமானை வழிபட நினைந்து அவரிடம் வேண்டுவதை"ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனைபுரியபொங்குகின்றது என் ஆசை" என்று கூறுவதாகப் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம்அர்ச்சனை என்பது சிவவழிபாட்டைக் குறிக்கும் சொல்லாக இருப்பதை அறிகிறோம்.

சுந்தரர் வரலாற்றில் சிவவழிபாட்டை, சிவபெருமான் வாயிலாக அருச்சனை பாட்டேயாகும். என்று சேக்கிழார் கூறுகின் றார். ஆதலின் வழிபாட்டைச் செய்யும் அந்தணர்கள் அருச்சகர் எனப்பட்டனர். இந்நாளிலும் ஆலயப் பணிபுரிபவர்களை அருச்சகர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கின்றோம். இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அர்ச்சனா போகம் என்றழைக்கப்படுகிறது. இவர்கள் கூட்டமைப்பானது ஆலய அர்ச்சகர் சங்கம் என்று பெயர் பெற்றுள்ளது.

மாகேசுவரர்கள்

அருச்சகர்கள் மாகேசுவரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சிவபெருமான் உருவமற்ற நிலையில் இருந்து அருவுருவ நிலையான லிங்கவடிவாகத் தோன்றி அருள் பாலிப்பதுடன் உருவம் தாங்கியும் அருள் பாலிக்கிறான். அவ்வுருவங்கள் மாகேசுவர வடிவங்கள் எனப்படுகின்றன.

அவ்வடிவங்களில் மனதைப் பதித்து வழிபடுபவர்கள் மாகேசுவரர்கள் எனப்பட்டனர். ஆலயங்களில் மூலவராக லிங்கத்தைத் தவிர உருவமாக அருள்பாலிக்கும் வடிவங்களைப் பூசித்த அர்ச்சகர்கள் மாகேசுவரர்கள் எனப்பட்டனர் என்று சிலர் கூறுகின்றனர். கல்வெட்டுக்கள் மூலம் சிவாலயத்தில் பணிபுரிபவர்களுக்குத் தலைமை தாங்கி அவர்களின் பணிகளைக் கண்காணித்தவர்கள் மாகேசுவரக் கண்காணிகள் எனப்பட்டதையும் அறியமுடிகிறது.

இவர்கள் கோயிலைக் காக்கும் வீரர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் ஏந்தி இருந்த ஆயுதம் மாகேஸ்வர பத்திரம் என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டு கூறுகின்றது.

கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகளை இவர்கள் பரிபாலித்து வந்ததுடன் அனைத்து வழிபாடுகளையும் நடத்தி வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கல்வெட்டுகளின் முடிவில் இது பன்மாகேசுவர ரக்ஷை என்று இவர்கள் பெயரால் அந்த தர்மத்திற்குக் காப்பும் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்கள் ஆலயங்களில் நிலையாகத் தங்கியிருந்ததுடன், அருகிலுள்ள கோயில்களில் விழாக்கள் நடக்கும் வேளைகளில் அங்கு சென்றும் தொண்டாற்றினர்.

திருக்கோயில் கல்வெட்டுக்களில் மாகேசுவரர்களைப் பற்றிய குறிப்புகள் நிறையவே உள்ளன.

பட்டர்

தென்மாவட்டங்களில் அருச்சகர்களை பட்டர் என்று அழைக்கின்றனர். இப்போதும் வைணவ ஆலயங்களிலும் தென் மாவட்டங்களிலும் அருச்சகர்கள் தம்மை பட்டர் அல்லது பட்டாச்சாரியார்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். பட்டன் என்பது பட்டறிவு உடையவன் (அனுபவ ஞானம் உடையவன்) என்பதைக் குறிக்கின்றது. சிவபெருமானை "ஆலநீழல் பட்டனே" என்று தேவாரம் அழைக்கிறது.அதனை யொட்டி இவர்கள் பட்டர்கள் எனப் பெயர் பெற்றனர்.

மதுரை மீனாட்சியம்மன் முதலான ஆலயங்களில் பூசித்து வரும் அருச்சகர்கள் தம்மை பட்டர் என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் தலையில் தலைப்பாகை நீண்ட அங்கவஸ்திரம் ஆகியவற்றை அணிந்து பூசிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இந்நாளில் முக்கியமான திருவிழாக்களில் மட்டும் இவற்றை அணிகின்றனர்.

திருவண்ணாமலை ஆலயத்திலும் அண்ணாமலையாரைப் பூசிப்பவர்கள் பட்டால் சரிகை வைத்து தைத்த கிரீடங்களை அணிந்து கொண்டு பூசிக்கும் வழக்கம் இருந்தது என்பர். இந்நாளில் ரிஷப வாகனக் காட்சியன்றும் சில விழாக்களில் மட்டும் கிரீடம்உருத்திராக்க மகரகண்டிகை அணிந்து வாகன பீடத்தில் அமர்ந்து ஆச்சாரியார்கள் பவனி வருகின்றனர்.

(சிவவேதியர்கள்) சிவமறையோர்

இச்சொல் இப்போது வழக்கில் இல்லை. பெரியபுராணத்தில் சேக்கிழார் ஆலயத்துள் அருச்சனை புரிந்து வந்த முருக னாயனாரை "மானமறையோர் குல மரபின்" வந்தார் என்று போற்றுகின்றார். திருநீலநக்கரைப் போற்றும் வேளையில் "மங்கல மறையவர் என்றும் திருமறையோர்" என்றும் குறிக்கின்றார். ஆலய அர்ச்சகர்களைச் சிவ மறையோர் என்று கொள்ளும் வழக்கம் இலக்கியங்களில் மட்டும் ஆங்காங்கு உள்ளது.

சிவப்பிராமணர்கள்

சிவநெறிவந்த அருச்சகர்கள் பல இடங்களில் சிவப்பிராமணர் என்று தம்மைக் குறித்துக் கொண்டனர். கல்வெட்டுக்ளில் இச்சொல் அதிகம் பயிலப்பட்டுள்ளது. வேதவழி வந்த பிராமணர்கள் சுமார்த்த (சுருதி:வேதம் அதன் வழிந்தவர்கள்) பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

ஆகமநெறி வந்த அந்தணர்கள் தம்மைச் சிவப்பிராமணர்கள் என்று அழைத்துக் கொண்டனர். இவர்களே ஆலயத்தை நிர்வாகம் செய்து வருகின்றனர். ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களை ஏற்றுக் கொண்டு முறையாக நடத்துவோம் என்று உறுதி கூறும் கல்வெட்டுகளில் இக்கோயில் "சிவப்பிராமணரோம்" என்று குறித்துள்ளதைக் காணலாம்.

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் காணிஉடைய சிவப்பிராமணர் குறிக்கப் படுகின்றனர் " காணி உடைய சிவப்பிராமணர் " என்பது சிவாச்சாரியார்கள் பரம்பரை உரிமை பெற்றவர்களாக இருந்ததைக் குறிப்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியார்கள்

நம்பி என்ற சொல்லுக்கு அழகன் என்பது பொருள். ஆகம அறிவு நிறையப் பெற்று சிவயோக சாதனையால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அருச்சகர்கள் நம்பிமார் என்று அழைக்கப்பட்டனர். திருவாரூர் முதலிய தலங்களிலுள்ள சிவாலய அருச்சகர்கள் நம்பிமார் என்று அழைக் கப்படுகின்றனர். திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள் ஆலயத்தில் பணிபுரிந்து வந்த நம்பிமார் வம்சத்தவர். நம்பிமார் என்பது நம்பியார் என்று மருவி விட்டது.

கல்வெட்டுக்களில் ஆலயப் பணியாளர்களைக் குறிக்கும்போது நம்பிமுதல் திருவலகுவரை என்றும் நம்பி முதல் மெய்க் காவல் வரை என்னும் தொடர் குறிக்கப் படுகிறது. இதில் நம்பி என்பது அர்ச்சகரையும் திருவலகு என்பது ஆலயத்தையும் சந்நிதியையும் சுத்தம் செய்யும் பணியாளரையும் குறிப்பதாகும். சோழன்பூர்வபட்டையத்தில் அருச்சகர் பணி செய்பவர் நம்பி என்றே குறிக்கப்படுகிறார்.

நாயகர்

நாயகன் என்பதற்குத் தலைவன் என்று பொருள். சிவபெருமானைப் போற்றிக் குறிப்பிடும் வகையில் பள்ளியறை நாயகர், பிரதோஷ நாயகர் என வழங்குகின்றனர்.

சோமாஸ்கந்த மூர்த்திக்கு "இமையவர் நாயகன்" (தேவர்களால் துதிக்கப்படுபவர்) என்பது பெயர். திருவிடைமருதூரிலுள்ள சோமாஸ்கந்தர் "ஏகநாயகர்" என்று அழைக்கப்படுகிறார். திருமுறைகள் அவரை ஆதி நாயகன், பூதநாயகன், வேதநாயகன் என்று பலவாறான பெயர்களால் அழைக்கின்றது. இதையொட்டி உற்சவரான சோமாஸ்கந்தரைப் பூசிப்பவர்கள் நாயகர் எனப்பட்டனர். காஞ்சிபுரத்தில் சோமாஸ்கந்தரைப் பூசித்து வந்தவர்களுக்கு நாயகர் பட்டம் வழங்குகிறது. இதற்கு வேறு காரணம் ஒன்றும் கூறப்படுகிறது. இவர்களின் முன்னோர்கள் அரசியலில் ஈடுபட்டு சாளுவ திம்மப்ப நாயக்கன் என்பவர் பட்டத்துக்கு வரத் துணை நின்றனர். அவன் பட்டத்துக்கு வந்ததும், இவர்களுக்கு சாளுவ நாயக்கன் என்ற பட்டத்தைப் பெயருடன் சேர்த்துக் கொள்ளும்படி அனுமதியளித்து அரசியல் செல்வாக் கையும் அளித்தான். அதுமுதல் இவர்கள் சாளுவ நாயக்கர் என்ற பட்டத்தைத் தரித்து வருவதாகக் கூறுகின்றனர்.

தேவகன்மியர்

கன்மியர் என்பவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை நுண்ணிய கலைவேலைப்பாடுடன் செய்பவர்களாவர். மரவேலை, ஆபரணவேலை போன்றவற்றைச் செய்வோர் கன்மியர் எனப்பட்டனர். பேச்சு வழக்கில் கம்மாளர் என்கின்றனர்.

இவ்வகையில் மனம், மொழி, மெய்களால் உலக நன்மை கருதி தெய்வத்தினை மகிழ்விக்கும் வகையில் பூசைகளைச் செய்வோர் தெய்வ கம்மியர் எனப்பட்டனர்.

கல்வெட்டுகளில் குருக்கள்மார் தெய்வ கம்மியர் தேவகம்மியர் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஈரோடு மாவட்டம் திங்களூர் சந்திர புரீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு நம்பிமார்,தேவகன்மியர் ஆகியோரை நியமித்ததைக் கூறுகிறது. அரசன் இவர்களுக்கு ஓலையின் மூலம் கோயிலுக்கு அளித்தகொடைகளை தெரிவித்ததையும் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இதுபோன்று தீக்ஷிதர், நயினார் முதலான பல்வேறு பட்டப் பெயர்களை சிவாலய அர்ச்சகர்கள் சூடியுள்ளனர். இந்தப் பெயர் ஆய்வு பல்வேறு வரலாறுகளைத் தெரிவிப்பதாக அமைகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குச்சியும் குடமும் கொண்டு கோயில்புகுவார்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் காணிஉடைய சிவப்பிராணர்கள் குறிக்கப்பட்டுள் ளனர். அவர்களுடன் இருப்பவர்கள் குச்சியும் குடமும் கொண்டு கோயில் புகுவார் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்.

கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் கோயில் துணைப் பணிகளையும் நிர்வாகத்தையும் கவனித்தவர்கள் **"குச்சியும் குடமும்கொண்டு கோயில் புகுவார்"** என்று அழைக்கப்பட்டனர்.

இவர்களில் சிவபூசனை செய்ய உரிமையும் நிலபுலன்களையும்உடையவர்கள் காணி உடைய சிவப்பிராமணர்கள் எனப்பட்டனர். எடுத்துக்காட்டாக ஈரோடு மாவட்டத்திலுள்ள ஆதியூர் ஆதீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒரு வியாபாரி சந்தியா விளக்கு வைக்க கொடையளிக்கின்றார் இதனை காணி உடைய சிவப்பிராமணரில் வாச் சியன் ஆதிமுத்தி சங்காண்டாரும், பிள்ளான் கடைக்குறிச்சி ஆண்டவனும் காசைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்விளக்கை குச்சியும் குடமும் கொண்டு கோயில் புகுவாரான இவர்கள் சூரிய, சந்திரர் இருக்கும் வரை ஏற்றுவதாக ஒப்புக் கொள்கின்றனர். இது பன்மாகேஸ்வர ரகைக்ஷ என்று நிறைவுபடுகிறது.

இதன்மூலம்கோயில் பணிபுரியும் வேதியர்கள் குச்சியும் குடமும் கொண்டு கோயில் புகுவார் என்று அழைக்கப்பட்டதையும் காண்கிறோம். நூற்றுக்கணக்கான மேற்பட்ட கல் வெட்டுக்களில் இவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

சைவ புரந்தர சக்ரவர்த்தி



சைவ சமயத்தைப் பேணிக் காத்து வருவதுடன் சீடர்களை உரு வாக்கி அதனை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியைச் செய்த சிவாச்சார்யர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த வர்கள் சைவ புரந்தர சக்ரவர்த்திகள் என்றே அழைக்கப்பட்டனர். கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் இவர்களைப் பற்றிய செய்தி களைத் தெரிவிக் கின்றன.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் ஆதியூர் ஆதீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள பதிமூன்றாம் நூற்றாண்டு (கி.பி.1276) கல்வெட்டு குறுப்புநாட்டு விஜய மங்கலம் தான் தோன்றீசுவரர்கோயில் காணிஉடைய சிவப்பிராமணரில் ஆலம்பாயன் உடையான் முதலி யான **சைவபுரந்தரச் சக்ரவர்த்தி** என்பவர் கோயிலுக்கு நிலைக்கால் அளித்த செய்தியைக் குறிப் பிடுகிறது.

சிவப்பிராமணர்களின் கூட்டத்திற்கு தலைமை வகித்ததால் சைவபுரந்தர சக்ரவர்த்தி என்று அழைக்கப்பட்டார் என்கின்றனர். இவரது இயற்பெயர் ஆலம்பாயம் உடையான் என் பதாகும் முதலியான என்பது கூட்டத்தலைவன் என்பதைக்குறிக்கிறது. சைவபுரந்தர சக்ர வர்த்தி என்பது கொங்குமண்டலத்தில் சைவத்தை நிலைநாட்டி காத்ததால் ஏற்பட்ட பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னை மூன்று வேளைகளிலும் தொட்டுத் தாயினும் சாலப்பரிந்து பூசிக்கும் சிவாச்சாரியர்களுக்குத் துன்பம் நேர்ந்த வேளைகளில் அவற்றைநீக்கி அருள்புரியச் சிவபெருமான் தானே வேண்டிய வடிவத்தினை எடுத்துக் கொண்டு நேரில் விரைந்து வருகிறான். அப்படி அவன் உவந்து வந்து அருள் புரிந்த வரலாறுகளில் சிலவற்றை இங்கே சிந்திக்கலாம்.

ஐயாறதனில் சைவனாகியும்.....

திருவையாற்றில் ஐயாறப்பனைத் திருமேனி தீண்டிப் பூசிக்கும் காணி வட்டத்தார் இருபத்து நான்குபேர் ஆவர். அவர்களில் ஒருவர் காசிநகர் சென்று கங்கையில் நீராடி விசுவநாதரைத் தரிசித்து வர விரும்பினார்.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் பயணத்தினை மேற்கொண்டார். அவர் குறித்த தேதியில் திரும்பி வரவில்லை. அவருடைய தாயாதியர் அவருடைய சொத்துக்களைக் கவர்ந்து கொண்டதுடன், பூசை முறையையும் கைக்கொள்ள முயன்றனர்.

அருச்சகரின் மனைவியும் மக்களும் ஐயாறப்பனிடம் அழுது முறையிட்டனர்.

மறுநாள்....

இறைவன் காசி சென்ற அருச் சகரின் வடிவை எடுத்தார். அவர் வீட்டிற்குச் சென்று எல்லோரையும் நலம் விசாரித்தார். உறவினர்

கவர்ந்த அருச்சகரின் உரிமைகளைத் திரும்பப் பெற்றார். சில காலம் தனி மடத்தில் தங்கிச் சிறப்புப் பூசைகளைத் தாம் மேற்கொள்ளப் போவதாகக் கூறினார்.

அதன்படியே கோயிலுக்குச் சென்று உரிய பூசைகளை முறையாகச் செய்துவிட்டு தனி மடத்தில் தங்கியிருந்தார். மக்கள் அவர் செய்துவரும் சிவபூசையைக் கண்டு மகிழ்ந்தனர்.அதைக்காணும்போதெல்லாம் பெரிய இன்பத்தைப் பெற்றனர்.

நாட்கள் சென்றன. யாத்திரையை முடித்துக் கொண்டு அர்ச்சகர் ஊர் திரும்பினார். தம்மைப் போலவே ஒருவர் தமக்குரிய பூசைகளைச் செய்வது கண்டு அதிசயித்தார். தாமே உண்மையான அருச்சகர் என்று எல்லோரிடமும் கூறினார். அவர்கள் இருவரையும் ஒருசேரக் கண்டவர்களால் யார் உண்மையானவர் என்று அறிய முடியவில்லை.

இறைவன் திருவிளையாடல் புரிய விரும்பினார். தாமே உண்மையான அருச்சகர் என்று வாதிட்டார். அருச்சகரும் சளைக்காமல் வாதிட்டார். இவர்களுடைய வாதங்களைக் கேட்டவர்களால் யார் உண்மையானவர்? என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியில் உண்மையான அருச்சகர் சில ஏதுக்களைக் காட்டி வென்றார். அந்த மகிழ்ச்சியால் ஆடிப் பாடினார். இறைவனாக வந்த அருச்சகர் மறைந்தார்.

விண்ணில் விடைவாகனத்தில் உமையொடும் பெருமான் காட்சியளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக்கண்டு எல்லோரும்மகிழ்ந்து வணங்கினர்.

அன்று முதல் அநாதிசைவனான ஐயாறப்பனும் ஆதிசைவனாகப் போற்றப்படுகிறார். இந்த வரலாற்றை நினைவுகூறும் வகையில் மணிவாசகப் பெருமான் " ஐயாறதனில் சைவன் ஆகியும் " என்று திருவாசகத்தில் குறித்துள்ளார்.

ஐயாறப்பன் சைவனாக வந்து சிவபூசை செய்து எல்லோரையும் மகிழ்வித்ததை நினைவூட்டும் வகையில் ஐதீக விழா நடத்தப்படுகிறது. இது "தன்னைத்தான் பூசித்தல் " என்னும் ஐதீக விழாவாகப் பெருந்திரு விழாவின் ஐந்தாம்நாளில் நடைபெறுகிறது. அன்று சப்தஸ்தானத்திற்கு உரிய மற்றைய ஆறுஊர்களிலும் உள்ள மூர்த்திகளும் இங்கு வந்து ஒரே இடத்தில் எழுந்தருள்கின்றனர்.

அருச்சகர் ஸ்படிக, வெள்ளி சிவலிங்கத்திற்குப் பூசை செய்வார். அதுவே தன்னைத் தான் பூசிக்கும் சிவபூசைக் காட்சியாகும். இதில் ஏராளமான அன்பர்கள் மகிழ்வுடன் கலந்து கொள்வதுடன், அவ்வேளையில் தமது ஆத்மார்த்த சிவபூசையையும் இங்கு செய்கின்றனர்.

சிவபெருமான் ஆதிசைவராய்ப் பூசை செய்த திருவையாற்றுத் தலத்தில் மட்டுமே சிவகலை அர்த்தசாம பூசைக்குப் பிறகும் அகலாமல் அவ்விடமே இருக்கும். ஏனையே திருக்கோயிலுள்ள சிவகலைகள் அர்த்த சாம பூசைக்கு தில்லைச் சிற்றம்பலத்தில் ஒடுங்கும் என்கின்றனர்.

ஞானக்கூத்தர் என்பவர் பாடியுள்ள திருவையாற்றுப் புராணத்தில் சைவச் சருக்கம் என்னும் தலைப்பில் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது. ❀

சிவாச்சாரிய குமாரனாக வந்த பிரம தேவன்

மண்மேல்வந்து சிவபூசை செய்ய விரும்பிய தேவர்கள் முனிவர்கள் சிவாச்சாரியார் குலத்தில் பிறந்து தீக்ஷைளைப் பெற்று சிவபூசை செய்ததைப் புராணங்கள் பல விரிவாகக் கூறுகின்றன. அவற்றில் ஒன்று பிரம்மதேவன் விரிஞ்சிபுரத்தில் சிவாச்சாரி யார் குலத்தில் பிறந்து சிவபூஜை செய்து மேன்மை பெற்றதாகும்.

வேலூர் - குடியாத்தம் சாலையில் விரிஞ்சிபுரம் உள்ளது. விரிஞ்சன் என்பது பிரம்மனுக்குரிய பெயராகும். அவன் வழிபட்டுப் பேறு பெற்றதால் இத்தலம் விரிஞ்சிபுரம் எனப்படுகிறது.

இத்தலத்தில் வாழ்ந்துவந்த சிவாச்சாரியர் சிவநாத்ன். அவருடைய மனைவி நயன நந்தினி அவர்கள் செய்த தவத்தால் பிரம்ம தேவன் மகனாக வந்து பிறந்தான் .சிறு வயதிலேயே தந்தை காலமானான். அவர் களது பங்காளிகள் சிவநாதனுக்குரிய பூஜை உரிமைகளையும் அதற்கான காணி உரிமை களையும்பறித்துக் கொண்டனர். மேலும் இன்னும் பூணூல் கூட அணிவிக்கப்படாத அவனை பூசை செய்ய ஒட்டோம் என்று கூறினர்.

அவர்களது அடாத செயலால் வருந்திய சிவசர்மனும் அவனது தாயாரும் வழித்துணை நாதனை வழிபட்டு தம்மைக்காத்து ஆதரவளிக்க வேண்டும் என்று அழுது தொழுது பிரார்த்தித்தனர்.

அவர்கள் கனவில் தோன்றிய சிவபெருமான் "அஞ்சாதீர், உமக்கு எமது அருள் நிச்சயமுண்டு. பெண்ணே உனது பாலகனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னே மத்தளம் முழங்க யானை நடக்க அரசனும் சேவகனும் முன்னேசெல்ல பல்லக்கில் சிவசர்மன் பூஜைக்குச் செல்லுதல் விரிஞ்சிபுரம் தலவரலாற்றுத் தொடர் சிற்பம்

நீராட்டி பிரம்ம தீர்த்தத்திற்கு அருகிலுள்ள மண்டபத்திற்கு அழைத்து வா அங்கு நடப்பதைப் பார்" என்று சொல்லி மறைந்தார். அத்துடன் அக்கம்பக்கத்திலிருக்கும் கன தனவான்களுக்கும் அரசப் பிரதிநிதிகளுக்கும் "நாளை காலை வந்து சேர்க" என்று கனவில் தோன்றி உரைத்தார்.

காலையில் நயனநந்தினி தனது குமாரனை அழைத்துக் கொண்டு குளக்கரைக்கு வந்தாள். அங்கே ஒரு அந்தணர் தன் குழுவுடன் உபநயனம் செய்து வைக்கும் ஏற்பாடுகளுடன் காத்திருந்தார். நயனநந்தினியும் குமாரனும் அதைக் கண்டு அதிசயித்துப் பெருமானின் திருவருளை எண்ணிப் போற்றினர்.

புதிய அந்தணர் அந்த சிவசர்மனுக்கு சிறப்பான முறையில் உபநயனம் செய்து வைத்து சிவதீக்ஷையும் அளித்தார். அவ்வேளையில் இறைவன் சொற்படி தனகன வான்களும் அரசியல் அதிகாரிகளும் பல்லக்கு பரிவாரங்களுடன் அங்கு வந்தனர். நடப்பதை அறியாத பங்காளிகள் கோயிலை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு பக்கத்து ஊர்களுக்குச்சென்றனர்.

சிவதீக்ஷை முடிந்ததும் அங்கிருந்தவர்கள் அவனை பல்லக்கில் ஏற்றிக் கொண்டு ஆலயத்தை அடைத்தனர். கோயில் கதவுகள் தாழ்பட்டிருந்தது. அப்போது எல்லோரும் அதிசயக்கும்படி பூட்டுக்கள் கழன்று விழ கதவுகள் திறந்தன. எல்லோரும் சூழ சிவசர்மன் ஆலயத்தினுள் சென்றான். அபிஷேக கலசத்தை எடுத்து நீராட்டச் சென்றான்

அப்போது பெருமானின் முடியானது சற்று உயரமாக எட்டினாலும் தொடமுடியாதபடி இருந்தது. எட்டிஎட்டிமுயன்றான். அவனால் முடியை எட்டமுடியவில்லை. "பெருமானே தழல் வடிவாய் நின்றபோது தான் உமதுமுடியைக் காணாது தோற்றேன். இப்பிறவியிலும்அப்படி ஆகவேண்டுமா?" என்று கசிந்து உருகினான்.

பெருமான் அவனுக்காக எட்டி நீர் விட்டு திருமஞ்சனமாட்டும்படிச் சற்றுத் தலையை வளைத்தார். அவன் அபிஷேகத்தைச் செய்தான். பெருமானுக்கு சிறப்பான பூசைகள் செய்தான். அதை நினைவூட்டும் வகையில் இப்போதும் தலைசாய்த்த பிரானாகவே இருக்கின்றார்.

இவற்றை அறிந்த உறவினர்கள் அவனிடம் வந்து தம்மை மன்னித்து அருளும்படி வேண்டியதுடன் அவனுக்குரிய உரிமைகளையும் காணி களையும் அளித்தனர்.

பிரம்மதேவன் சிவாச்சாரியார் மரபில் தோன்றி ஆகம வழியில் அர்ச்சித்துப்பேறு பெற்றதைதிருவிரிஞ்சிபுரம் தலவரலாற்றில் காண்கிறோம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவசர்மன் விநாயகரை வழிபடுதல்சிவபூஜைசெய்தல் விரிஞ்சிபுரம் தலவரலாற்றுத் தொடர் சிற்பம்

சிவாச்சாரியார் மகனாக வந்து பிறந்த பிரம்ம தேவனுக்கு இறைவன் பூணூல் அணிவித்து உரிமைகளைப் பெற்றுத் தந்து உடனிருந்து சிவபூசை செய்வதை விரிஞ்சிபுரத் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது. இதை சித்தரிக்கும் தொடர் சிற்பங்களும் அங்கு உள்ளன.

கார்த்திகை மாதத்தில் சிவசர்மனாக வந்த பிரம்மனுக்குச் சிவபெருமான் உபநயனம் செய்விப்பது ஊர்வலமாக அழைத்துவந்து கருவறையுள் சிவவழிபாடு செய்யவைப்பது போன்றவை ஐதீக விழாவாக நடத்தப்படுகின்றன. இங்கே சிவசர்மன் உலாத்திருமேனி கையில் அபிஷேக கலசத்துடன் உள்ளது.

பொற்காசு பெற்ற சிவாச்சாரியார்

அன்புடன் பூசிக்கும் சிவாச்சாரியார் களுக்கு இறைவன் தாமே உவந்து படிக்காசு வைத்து அருள்பாலித்ததைப் பின்வரும் வரலாறுகளில் காணலாம்.



புகழ்த்துணையார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான புகழ்த்துணை நாயனார், சிவாச் சாரியார் குலத்துப் பிறந்தவர். செருவிலி புத்தூர் எனும் ஊரில் தோன்றி அவ்வூரி லுள்ள சிவாலயத்தில் பணிசெய்து வந்த வர்.

ஒரு சமயம் பஞ்சம் தோன்றியதால் விளைவு இல்லை. மக்கள் உண்பதற்கு எது வும் கிடைக்கவில்லை.எல்லோரும் பெருந் துன்பம் அடைந்தனர். நாயனாரும் பல நாட்கள் பட்டினி கிடந்து பசியால் துன்ப மடைந்த ர், என்றாலும் சிவபூசை செய்வ தைக் கைவிடாமல் முன்னிலும் சிறப்பாகச் செய்து வந்தார்.

ஒரு நாள் சிவலிங்கத்தை நீராட்டி (திரு மஞ்சனம் செய்து)க் கொண்டிருந்தார். பசிப் பிணியால் வருந்தித் தளர்ந்திருந்த அவர், மயக்கமெய்தி தண்ணீர்க் குடத்தைத் தாங்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியாது அதைச் சிவலிங்கத்தின் மேலே யே போட்டுவிட்டுத் தானும் வீழ்ந்தார்.

அப்படியே மயங்கி விட்டார். மயக்கம் அதிகரித்து உறக்க மானது. அவர் கனவில் சிவ பெருமான் தோன்றினார்.

"அன்பனே! வருந்தாதே இந்தப் பஞ்சகாலம் தீரும் வரை பலிபீடத்தின் மீது நாம் ஒரு பொற்காசு வைத்தருள்வோம். அதை எடுத்துப் பயன்பெறுக " எனக்கூறி மறைந்தார்.

துயில் நீங்கி எழுந்த நாயனார் இறைவன் அருளியபடி பொற்காசு இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். அன்று முதல் பஞ்சகாலம் முழுவதும் இறைவன் பொற்காசை அளித்து வந்தார். நாயனார் மிகுந்த அன்புடன் பூசை செய்து வந்தார். நீண்ட நாள் மகிழ்வுடன் சிவபூசை செய்து வந்த நாயனார் ஓர் "ஆவணி ஆயில்ய நன்னாளில்" சிவகதி அடைந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சம்பந்தரும், இந்நாயனாரின் பக்தி திறத்தையும், படிக்காசு பெற்றமையையும் பாடியுள்ளார்கள்.

பெரிய புராணத்துள் பத்தாவது சருக்கமான கடல் சூழ்ந்த சருக்கத்துள் ஏழு பாடல்களில் இவருடைய வரலாறு கூறப் பட்டுள்ளது. செருவிலிபுத்தூர் மூவராலும் பாடப்பட்ட பதியாகும். அது இந்நாளில் அரிசிற்கரைபுத்தூர் என்றும், அழகார்புத் தூர் எனறும் அழைக்கப்படுகிறது. இறைவன் படிக்காசு வைத்த நாதர் என்றும், அம்பிகை அழகம்மை என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இதே போன்ற நிகழ்ச்சி மற்றொன்றும் வரலாற்றில் உள்ளது.ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரில் மடவார் வளாகத்தில்

புகழ்த்துணையார் மனைவியுடன்

புகழ்பெற்ற சிவாலயம் உள்ளது. இதில் வீற்றிருக்கும் பெருமானின் பெயர் வைத் தீசுவரர் என்ப தாகும். இவரைக் கல்வெட்டுகள் படிக் காசு வைத்தருளிய நாயனார் என்று குறிக்கின்றன.

நெடுங்காலத்திற்கு முன்பு நாகநம்பி என்பவர் இங்கே அர்ச்சகராக இருந்தார். மிகுந்த அன்புடன் நாளும் சிவபெருமானைப் பூசித்து மகிழ்ந்தார். மெலிந்த உடலும் உறுதியான உள்ளமும் கொண்டவர். ஒருசமயம் இப்பகுதியில் பஞ்சம் தலை விரித்தாடியது. அப்பஞ்சம் நம்பியாரையும் வாட்டியது. பல நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது.

என்றாலும் தளராத உள்ளத்துடன் அவர் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் சிவனை நீராட்டிக் கொண்டிருந்த வேளையில் பசி மயக்கத்தால் குடத்துடன் சிவலிங்கத் தின் மீது விழுந்து விட்டார்.

சிவபெருமான் அவரிடம் தினமும் படியில் ஒரு காசு வைக்கின்றேன். அதை எடுத்து விற்றுப் பூசைகளைச் செய்து வருக என்று அருளிச் செய்தார். அதன்படியே தினமும் காசு வைத்தார். அதையொட்டியே படிக் காசு வைத்த தம்பிரான் என்று அழைக்கப் படுகிறார்.

நம்பியார் தினமும் இறைவன் அளித்த காசை எடுத்துச் சென்று வியாபாரியிடம் கொடுத்து வந்தார். அவன், அது மாற்றுக் குறைவானதென்று கூறி குறைவாகப் பணம் கொடுத்தான்.

இறைவன் அவனுக்கு நேரில் வந்து பாடம் புகட்டியதாகக் கூறப்படுகிறது. இவ்வூருக்கு அருகில் படிக்காசு வைத்தான் பட்டி என்னும் ஊர் உள்ளது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொற்காசு பெற்ற சிவாச்சாரியார் மனைவி

சிவாச்சாரியர்களுக்குப் படிக்காசு அருளியதைப் போலவே சிவாச்சாரிய குலப் பெண்களில் சிலருக்கும் பெருமான் காசளித்து அருள் பாலித்ததைக் காண்கிறோம். கீழ்வேளூரில் நடைபெற்ற அத்தகைய வரலாறு ஒன்றை இங்கே காணலாம்.



கீழ்வேளூர் எனும் தலத்தில் மிகுந்த சிவபக்தியும் அன்பும் கொண்ட சிவாச்சாரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் அவர் வடநாட்டிற்கு யாத்திரை மேற்கொண்டார்.

அவர் பயணம் மேற்கொள்ளும் முன்பாக குடும்பத்தை நடத்தத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த பின்னரே பயணம் மேற்கொண்டார். அவருடைய மனைவி சிக்கனமாகச் செலவு செய்து வந்த போதிலும் சில காலத்தில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. அவள் பெருமானிடம் வந்து நின்று தம்முடைய வறுமையைப் போக்கி அருளுமாறு வேண் டினாள்.

பெருமான் அவளிடம் தினமும் பலிபீடத்தில் ஒரு பொற்காசினை வைத்து எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். அதன் படியே காசினைப் பெற்ற அவள் வளமாக வாழ்ந்து வந்தாள்.

அவளுடைய வளமையைக் கண்டு உறவினர் பொறாமை கொண்டனர். பல நாட்கள் கழிந்தபின் கணவன் ஊர் திரும்பினான். அவனிடம் உறவினர்கள் உனது மனைவி தகாத வழியில் சென்று வளமாக வாழ்ந்தாள் என்றனர். அதைக் கேட்டு அவன் வருந்தினான். மனைவியிடம் உண்மை யென்ன? என்று கேட்டான்.

அவள் நேரே சிவபெருமானிடம் சென்று உண்மையை உரைத்துத் தமக்கு அருள் புரியுமாறு வேண்டினாள்.

பெருமான் விண்ணொலியாக நடந்ததைக் கூறியதுடன், அவதூறு கூறிய உறவினர்களை அழித்து வரும்படி தமது மழுவை வீசினார். அது கரகரவென்று சுழன்று ஓடி தீமை செய்த உறவினர்களை அழித்தது. அது சென்ற போது நந்தியம் பெருமான் சற்று விலகி வழிவிட்டாராம். அவர் அதே கோலத்தில் இன்றும் இருப்பதை இத்தலத்தில் காணலாம். இதுபோன்று பல வரலாறுகளை ஆங்காங்கே காணமுடிகிறது. ❀

ஸ்ரீவில்லிபுத்தூரில் புழுங்கலரிசிப் பிள்ளையார் கோயில் என்னும் கோயில் உள்ளது. இங்கு ஒரு காலத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது அவரது துன்பம் நீங்க இகோயில் அர்ச்சகருக்கு தினமும் பிள்ளையார் இரண்டு மரக்கால் புழுங்கலரிசி அளித்து வந்ததால் இப்பெயர் பெற்றார் என்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியார் மனைவியின் மானங்காக்க மழு எறிந்தது

கீழ்வேளூர் உலா என்னும் நூலில் சிவபெருமான் வேறு ஒரு அந்தணப் பெண்ணிற்காகவும் மழு எறிந்தது சொல்லப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் சிவாச்சாரியார் ஒருவர் இந்தத் தலத்தில் மிகுந்த பக்தியுடன் பணி செய்து வந்தார்.அவருக்குத் திருமணமானது விதிவசத்தால் திருமணமான ஐந்தாறு மாதத்திலேயே அவர் மாண்டுபோனார்.

அப்போது அவர் மனைவி மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தாள். அந்நாளைய வழக்கப்படி அவர் தனது தாயார் வீட்டிற்குச் சென்று விட்டாள்.

காலகதியில் அழகிய குமாரனைப் பெற்றாள். அவனைக் கண்ணும் கருத்துமாக சமய சடங்குகளைப் போதித்து சிறப்புடன் வளர்த்தாள். அவனுக்கு ஏழு வயதானது. தந்தை வழியில் தன் பையனுக்குச் சேர வேண்டிய பூஜைமுறைகளைப் பெற எண்ணித் தனது கணவன் வீட்டிற்குத் திரும்பினாள்.

தாயாதியர்களைச் சந்தித்து தனது கணவரின் உரிமைகளைத் தன் மகனுக்குத் தரவேண்டினாள். அவளது தாயத்தார் அவர்களுக்குரிய காணியை அபகரித்துக் கொண்டதுடன் உரிமையையும் மறுத்தனர்.

அவளது நிலையைக் கண்டு மனம் இறங்கியவர்கள் தாயத்தாரிடம் அவளுக்கு உரியதை வழங்கு மாறு கூறினர்.

தாயத்தார் அவளுக்கு பிறந்த குழந்தை அருச்சகனுக்குதான் பிறந்தது என்பதை எப்படி ஏற்பதுஎன்று, அவளது ஒழுக்கத்தை விமர்சித்துப் பேசினர்.

இதனால் மனம் துவண்ட அவளும் அவனது மகனும் பெருந்துன்பம் அடைந்தனர். அவள் திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்று கீழ்வேளூர் கேடிலியப்பரைக் கண்டு அழுது தொழுதாள்.பெருமானிடம் முறையிட்டுக் கதறினாள்.

அட்சயலிங்கர் தாயாதிகளின் அடாத செயலைக் கண்டுகோபித்தார். அவர்களைத் தண்டித்து வரும்படித் தன் கரத்தில் இருந்த மழுவை ஏவினார்.

அது சுழன்று சென்று அவளைப் பற்றி இழிவாகப் பேசியவர்களைத் தண்டித்தது. அது வந்த வேகத்தைக் கண்டு நந்தியும் விலகி அதற்கு வழிவிட்டார். அதே கோலத்தில் இப்போதும் இருக்கிறார்.

நடந்ததை அறிந்த ஊர்மக்கள் கூடி அந்த சிறுவனுக்கு பூஜை உரிமைகளை அளித்ததுடன் அவனுக்குரிய காணிகளையும் அளித்தனர். அவன் சிவபூஜையை ஏற்றுக்கொண்டு சிறப்புடன் செய்து வந்தான்.

அட்சய விடங்கர் தன்னை பூசித்து வரும் அருச்சகர் குடும்பப் பெண் ஒருத்திக்கு வறுமை நீங்க படிக்காசு அளித்ததையும், சிறுவனுக்கு உரிமையை மீட்டுக் கொடுத்ததையும் இந்த இரு நிகழ்ச்சிகளிலும் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க மழுவை வீசியதும் அதியற்புதச் செயல்களாகப் போற்றப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருமிக்கு பொற்கிழி அளித்தது

சைவர்களுக்கு மூன்று கண்களாக இருந்து சிவபெருமானின் அருட்செயல் களையும் சமய விளக்கங்களையும் தருப வை மூன்று புராணங்கள் ஆகும். இவைகள் கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் ஆகியவையாகும்.

திருவிளையாடற்புராணத்தில் இறை வன் நிகழ்த்திய திருவிளையாடல்களில் ஒன்றாக இருப்பது தருமிக்குப் பொற்கிழி அளித்தாகும்.

திருவிளையாடல் என்னும் திரைப் படத்தில் தருமியின் பாத்திரம்அருமையாக இருந்தது. அதில் சிவனாக சிவாஜிகணேச னும் தருமியாக நாகேசும் நடித்திருந்தனர். அவர்களது அற்புத நடிப்பாலும் ஏ.பி.நாக ராஜனின் வசனத்தாலும் அது மக்கள் நெஞ்சில் நீங்காது நிலைபெற்றுள்ளது. அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட போதிலும் இன்னும் பேசப்படுகிறது.

ஆனால் இக்காட்சியில் உண்மைத் தன்மை இல்லை.தருமிவறுமையில் இருப் பவனாகவும் பணத்திற்கு ஆலாய் பறப்ப வனாகவும் காட்டப்பட்டுள்ளார். ஆனால் புராணத்தின்படி அவர் சோமசுந்தரப் பெரு மானை வழிபடும் சிவாச்சாரியார் மரபில் வந்த சிறந்த சிவபக்தர்.

அந்நாளில் திருமணம் ஆகி ஆச்சார்ய பிஷேகம் செய்து கொண்டவர்களையே கரு வறையில் பூசிக்க அனுமதிப்பர்.அதனால் திருமணமாகாத இவரால் சோமசுந்தரப் பெருமானை தொட்டுப் பூசிக்க முடியாமல் இருந்தது.

இவரிடம் பணம் இல்லாததால் திரு மணம் செய்து கொள்ள பொருள் வேண்டி நின்றார்.

பெருமான் இவருக்காக அரசனின் சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் தானே ஒரு பாட்டை எழுதிக் கொடுத்து அதன் மூலம் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தி பாண்டியமன்னனிடமிருந்து பொற்கிழி பெறச் செய்தார்

தருமி சிறந்த சிவபக்தனாகவும் தமிழ்ப் புலவனாகவும் இருந்ததாலேயே சிவபெரு மான் இறங்கி வந்து அவனுக்காகத் திரு விளையாடல் நிகழ்த்தினார். ❀

சிவாச்சாரியாரும் இசையும்

சிவாச்சாரியார்கள் ஆகம வழியிலான மந்திரங்களை ஏற்ற இறக்கத்துடன் இசையுடன் ஓதுகின்றனர். எனவே இயல்பாகவே இசைபற்றிய ஞானம் படைத்தவராக இருந்தனர். அத்துடன் பூசை காலங்களில் இன்னின்ன வகையான ராக, தாளங்களை இசைக்கவேண்டும் என்று வரையறை இருந்ததால் அது பற்றிய தெளிவான கருத்துக்களையும் கொண்டிருந்தனர்.

பூஜையின்போது தவில், மத்தளம் போன்றவற்றுடன் கணபதி தாளம், மயூர தாளம் போன்றவற்றை இசையுடன் சொல்வதைக் காண்கிறோம். சிறு வயதில் இருந்தே இசையைக் கேட்டு வளர்வதால் அவர்களுக்கு இசை ஞானம் இயல்பாகவே இருக்கிறது. சிவாச்சார்ய குல பெண்களும் இசையில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியரைக் காக்க செஞ்சடை காட்டிய பிரான்

தொண்டை வளநாட்டில் காஞ்சிபுரத் திற்குத் தெற்கே செய்யாற்றின் கரையில் உள்ள தலம் திருப்புலி வனம் ஆகும். இத் தலத் தில் இருந்த சிவாச்சாரியர் மிகுந்த சிவ பக்தி உடையவர். அத்துடன் அலங்காரக் கலை யில் வல்லவர். அவர் செய்யும் மலர் அலங்காரம் இவ்வட்டாரத்தில் புகழ் பெற்றி ருந்தது.

அத்தலத்தில் பிறைநாறு சீரடியாள் என்ற ஆடல்மகள் இருந்தாள். அவள் ஆடற் கலையில் சிறந்தவளாக இருந்ததுடன் மாலைகட்டும் கலையிலும் தேர்ந்தவளாக இருந்தாள்.

இவர்கள் பெரிய நந்தவனத்தைப் பராமரித்து வந்தனர். அதில் கிடைத்த மலர் களைப் பறித்து வந்து அப்பெண் வகை வகையான மாலைகளைத் தொடுத்துக் கொடுக்க அர்ச்சகன் பெருமானுக்கு வித விதமாக அலங்காரம் செய்து வழிபட்டார்.

இந்தக் கோயிலில் செய்யப்படும் மலர் அலங்காரத்தின் புகழ் சுற்று வட்டாரத்தி லும் பரவி யிருந்தது.காஞ்சியில் இருந்த மன்னனுக்கும் இதைக் காண்பதில் ஈடு பாடு இருந்ததால் அவன் அடிக்கடி இங்கு வந்து வழிபட்டு மலர் அலங்காரத்தைக் கண்டு மகிழ்ந்தான்.

தினமும் இரவு பூஜை முடிந்ததும் அர்ச் சகர் அந்த மாலைகளை ஆடல் மகளான பிறை நாறு சீரடியாளுக்கு அளித்து விடு வார். அவள் அதைச் சூடிமகிழ்வாள். இப்படியே நாள்கள் இனிதே கழிந்தன.

ஒருநாள் மாலைவேளை, வானம் இருண்டு இருந்தது. கோயிலுக்கு பக்தர் களின் வருகையும் இல்லை. அதனால் அர்ச் சகர் விரைவில் பூசைகளை முடித்து மாலை களைக் களைந்து வழக்கம் போல ஆடல் மகளிடம் கொடுத்து அனுப்பிவிட்டார்.

அவர் கோயிலைப் மூடத் தொடங்கி னார். அப்போது ஓடிவந்த அரண்மை னைச் சேவகன், கோயிலுக்கு அரசன் வருவதை அறிவித்தான். அதனால் அதிர்ந்த அர்ச்சகர் ஒருஆளை அனுப்பித் தான் கொடுத்தனுப் பிய மாலைகளை திரும்ப வாங்கி வரச் செய் தார். அதற்குள் அவள் அவற்றைச் சூடிக் கொண்டு தான் வழிபடும் உடையவர் முன் பரவசத்துடன் ஆடி மகிழ்ந்திருந்தாள். அருச் சகர் நிலையைக் கண்டு தான் சூடியிருந்த மாலைகளைக் கொடுத்து அனுப்பினாள். அருச்சகர் அவற்றை எடுத்து பெருமானுக்கு அணிவித்தார்.

அவர் அலங்கரித்து முடிப்பதற்கும் அரசன் வருவதற்கும் சரியாக இருந்தது. அரசனை வரவேற்று சிறப்பான பூசைகளைச் செய்தார். அரசன் அருச்சகனிடம் " ஐயரே! இன்று உமது அலங்காரம் சிறப்பாக இருக் கிறது, அதில் தெய்வீகத் தன்மை பிரகாசிக் கிறது இதைக் காணும் என் மனம் இனம் புரியாத இன்பத்தை உணர்கிறது "என்றான்.

பின்னர் பூசை முடியும் வரை இருந்து பெருமானுக்கு அணிவிக்கப்பட்ட மாலை களைப் பிரசாதமாக வாங்கிச் சென்றான். அதைத் தனது தேவிக்கு அளித்தான்.

அவள் " அன்பே! இன்று இந்த மாலை கள் அதீத மணம் பரப்புகின்றன. இவற்றைச் சூடி மகிழ்வேன் " என்று எடுத்துச் சூடிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டாள். அப்போது அந்த மாலையில் இருந்து நீண்ட பெண்ணின் முடிகள் சில இருப்பதைக் கண்டாள். அதை மன்னனுக் குக் காட்டினாள்.

" இது என்ன? அருச்சகர் யாரோ ஒரு பெண் சூடிக் களைந்ததை பெருமானுக்குச் சார்த்தி அதைப் பிரசாதமாக அளித்தாரா? அவர் அப்படிப்பட்டவர் இல்லையே, என்றாலும் நாளை அவரைப் பார்த்து விசாரிக்க வேண்டும்" என்று சொன்னான். பின்னர் இருவரும் உறங்கப் போய்விட்டனர்.

இது இப்படி இருக்க,மன்னன் சென்ற பின் கோயிலில் அருச் சகருக்கு மனம் நிலை கொள்ளவில்லை."ஒருபெண் சூடிக் கொடுத்ததை பெருமானுக்கு அணிவித்து சிவ அபசாரம் செய்து விட்டோமே. அரசன் வருகிறான் என்றதும் பதட்டத்தில் என்ன செய்வதுஎன்று அறியாது செய்துவிட்டேன்" என்று எண்ணிக் கலங்கினார்.

அப்போது ஒரு சேவகன் வந்து அரண் மனையில் நடந்ததையும் மறுநாள் வந்து அரசன் விசாரிக்க இருப்பதையும் தெரிவித் தான். அருச்சகரின் கவலை அதிகமாகி விட்டது."முன்பே சிவஅபராதம் செய்து விட்டோமே என்று கலங்கி நிற்கும் எனக்கு, இப்போது புதிய சோதனையாகி விட்டதே" என்று கலங்கித் துன்புற்றார்.

கோயில் வாயிலில் அமர்ந்து மனப் போராட்டத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அர்ச்சகர் அப்படியே அயர்ந்து உறங் கிப் போனார்.

கனவில் பெருமான் தோன்றினார். "அன்பனே! வருந்தாதே" எனது பரம பக்தையான சீரடியாள் சூடிக் களைந்ததைச் சூடியதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நாளை வந்து அரசன் கேட்டால் எனக்கு சடையிருப் பதையும் அதிலிருந்து முடி வந்திருக்கும் என்றும் சொல். தேவைப்பட்டால் எனது முடியைக் காட்டுவேன் இது உறுதி அஞ்சாதே" என்று சொல்லி மறைந்தார். இறைவனின் அருட்காட்சியால் அருச்சகர் உள்ளம் தெளிந்தார்.

காலை வழக்கம்போல் தனது நாட் கடமைகளை முடித்துக் கொண்டு ஆலயத் திற்குச்சென்று பூசைகளை மனமகிழ்ச்சி யுடன் செய்தார். முற்பகல் அரசன் வந்தான். பெருமானை வணங்கினான்.

பேச்சுக்கு நடுவே நேற்று "ஐயனே! நேற்று அளித்த மாலைகளில் பெண்ணின் முடிகள் இருந்ததைக் கண்டேன் அவை எப்படி வந்திருக்கும்" என்று கேட்டான்.

இறைவனின் அருட்காட்சியால் உறுதி பெற்றிருந்த அருச்சகர் " அரசே! பெருமானுக்கு சடைமுடியுள்ளது. அதிலிருந்து வந் திருக்கலாம் தாங்கள் விரும்பினால் பெருமானின்சடையைப் பார்க்கலாம் "என்றான்.

கல்திருமேனிக்கு சடைமுடியா? " சரி காட்டு பார்க்கலாம்" என்றான்.

அருச்சகர் தலைமேல் இருந்த மாலைகளை அகற்றினார். என்ன ஆச்சர்யம் பெருமானின் சடை தோன்றியது. காற்றில் முடி பறப்பதும் தெரிந்தது. அரசன் அரண்டு போனான். அஞ்சி வீழ்ந்து வணங்கினான். எல்லாம் வழக்கம்போல் ஆனது.

அரசன் வியந்தான். அருச்சகன் பெருமானின் கருணையைக் கண்டு வியந்தான். அதனைக் குறிக்கும் வகையில் திருப்புலிவன புலிப்பகவர் உச்சியில் குடுமியுடன் திகழ்கிறார்.

இப்படி பெருமான் அருச்சகருக்காக தனது சடை முடியைக் காட்டியதை சிவ சைலம் போ ன்றவேறு சில தலங்களிலும் காணமுடிகிறது. இத்தலங்களில் பெருமான் குடுமியுடன் திகழ்கிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரிய குலப் பெண்கள்

ஆகமவழி வந்த சிவாச்சாரிய குலப் பெண்களும் ஆகம வழிகளை நன்கு கற்றறிந்து இருந்தனர். கணவன்மார் சிவபூசை செய்யும்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய இது உதவியாயிருந்தது, சிவாச்சாரிய தீக்ஷை பெறும்போது தம்பதியராகவே அமர்ந்து தீக்ஷை பெறுவது வழக்கம்.

பெண்கள் ஆலயங்களில் ஆகமவழி நின்று சிவபூசை செய்தற்கு அம்பிகையே சான்றாக இருக்கின்றாள்.

திருமறைக்காட்டில் (வேதாரண்யத்தில்) அருச்சகர்களுக்கு சிவாச்சாரிய தீக்ஷை தரும் போது கணவன் மனைவி ஆகிய இருவரையும் கருவறையுள் சிவலிங்கத்திற்கு முன்பாக அமர்த்தி மந்திர உபதேசம் செய்து திருமுழுக்காட்டும் வழக்கமும் உள்ளதென்று கூறுகின்றனர். மதுரையிலும் இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளது.

காலப்போக்கில் வேத வழிபட்ட பிராமணர்களின் மரபு மேலோங்கியதால் அவர்கள் பழக்கவழக்கங்கள் ஆலய வழிபாட்டில் கலந்தன. இதனாலும் காலப் போக்கில் சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களாலும் பெண்களின் பங்கு வழிபாட்டில் குறைந்து விட்டது.

பேரரசிகள் ஆலயத்திற்கு வந்தபோது சிவாச்சாரிய குலப் பெண்களே அவர்களுக்கு விபூதி அளித்து மரியாதை செய்யும் வழக்கம் இருந்தது.

எடுத்துக்காட்டாக விக்டோரியா மகாராணி சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்திற்கு வந்து வழிபட்ட போது அந்த நாளில் முதன்மை அருச்சகராக இருந்தவரின் துணைவியார் அவருக்கு மாலை அணிவித்துப் பிரசாதம் வழங்கியதாகப் பெரியோர்கள் குறித்துள்ளனர். ❀



சிவாச்சார்ய குல பெண்களுக்கும் சிவபூஜை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முறையாக சிவபூஜை செய்யவேண்டும் ஆதிநாளில் சிவாச்சாரியார் செய்யும் பூஜைகளுக்கு அவர் எடுபிடி பணிகளைச் செய்து உதவிவந்துள்ளனர். சிவாச்சாரியர் ஆச்சார்ய அபிஷேகம் செய்து கொள்ளும் வேளையில் அவர் மனைவிக்கும் தத்துவசோதனை போன்ற சடங்குகள் செய்யப் படுகின்றன. அவர்கள் இருவரையும் சேர்த்துவைத்தே ஆச்சார்ய அபிஷேகம் செய்யப் படும். அதன் பின்னர் பூஜைஏற்கும் நாளில் அருச்சகர் மனைவி தீபங்கள் எடுத்துத்தர அருச்சகர் ஆராதனை செய்வதுகடைப்பிடிக்கப்படுகிறது. அவரும் ஆச்சார்யருடன் வந்து சிவபூஜைக் குத் துணை செய்வது வழக்கம். இதை திருநீலநக்கர் வரலாற்றால் அறிகிறோம். காலச் சூழலில் அருச்சகர் மனைவிமார் துணை செய்வது விலக்கப்பட்டு விட்டது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியார் மரபில் வந்த பெண் சித்தர்



சென்னை கோமளீசுவரன் பேட்டையிலுள்ள ஸ்ரீ சட்டநாதசுவாமி திருமடத்தில் வீற்றிருந்த குரு மார்களில் ஒருவரான திரு.சம்பசிவ சிவாச்சாரியா ரின் துணைவியார் பெரும் சித்தராக விளங்கி வந்துள்ளார்.

அனந்தாம்பாள் என்பது இவரது இயற் பெயராகும். இவர் ஸ்ரீ சக்ர பூஜையைச் சிறப்பாகச் செய்து வந்ததால், ஸ்ரீ சக்கர அம்மாள் என்று அழைக் கப்பட்டார்.

திருவான்மியூரில் இவரது அருட்சமாதி விளங்கிவருகிறது. தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் இந்த அம்மையார் பறக்கும் ஆற்றல் பெற் றிருந்தார் என்று தம் நூலில் குறித்துள்ளார். இவர் ஒரே சமயத்தில் சென்னையிலும் திருவண்ணா மலை யில் உள்ள குகையிலும் காட்சியளித்ததை அன்பர்கள் குறித்துள்ளனர். இவரைப் பரவெளிகண்ட சித்தர் என்கின்றனர். ❀

குருக்கள்மார் குடியிருப்பு

குருக்கள்மாரான சிவாச்சாரியர்கள் கோயிலைச் சுற்றியே குடியிருந்தனர். இதற்கென கோயிலைச் சுற்றி மதிலை ஒட்டி பிராகாரம் அமைக்கப்பட்டு அதில் சிவாச்சாரியார்கள் குடிய மர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் வீட்டில் இருந்து வீதிகளைச் சுற்றிக் கொண்டு வராமல் கோயிலுக்குள் செல்ல மதிலில் திட்டி வாசல்களும் அமைக்கப்பட்டிருந்தன. குருக்கள்மார் கூட்டமாகவே வாழ்ந்தனர்.

சில ஊர்களில் மட்டும் குருக்கள்மார் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்ததால் தனித்தெரு வில் வாழ்ந்தனர். அவை குருக்கள் தெரு என்றும் குருக்கள் வீதி என்றும் அழைக்கப்பட்டன. இவர்கள் தமது குல ஒழுக்கங்களைப்பேணவும் ஆசாரங்களைக் கடைப்படிக்கவும் கூட்ட மாக வாழ்வதையே விரும்பினர். ❀

குருக்கள் வலசு

தங்கள் இடத்திலிருந்து வளமையான வாழ்வைத்தேடி மக்கள் கூட்டமாகச் சென்று குடி யேறுமிடம் வலசு எனப்பட்டது.கோவை மாவட்டத்தில் தஞ்சைத்தரணியில் இருந்து கோயில் பணிக்காக கூட்டமாகக் குடியேறியவர்கள் வாழிடங்கள் குருக்கள் வலசு எனப் பட்டது. மேலும் குருக்கள் புரம், குருக்கள் காணி எனும் பெயர்களிலும் சிவாச்சாரியார்களின் வாழ்விடங்களைக் காண்கிறோம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ கண்டர்

சிவபூசைக்குரிய அனைத்துச் செய்திகளையும் விளக்கமாகத் தரும் நூல்கள் சிவாகமங்கள். இது குரு, சீடர் என்னும் வழியில் பரம்பரை பரம்பரையாக போதிக்கப்பட்டு வருகிறது.

சிவபெருமான் சதாசிவமூர்த்தியாகக் கோலம் தாங்கித் தாமரை மலர்ப்பீடத்தில் எழுந்தருளி இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளினான். இதைப் பலர் பலவிதமான நிலையில் நின்று கேட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இப்படிக் கேட்டு மற்றவர்களுக்கு உபதேசித்த, அனந்தர், ஸ்ரீகண்டர். அம்பிகை, முருகன், விஷ்ணு, பிரம்மா ஆகிய அறுவரோடு இவர்களுக்கு குருவாக விளங்கிய சதாசிவரையும் சேர்த்து ஏழுகுருமார்களாகக் கொண்டாடும் வழக்கம் உள்ளது. இவர்களை சப்தகுருமார்கள் என்பர்.

தெய்வங்களை வணங்கத் தொடங்குவதற்கு முன்பாக, தமக்கு நல்ஞானத்தைப் போதித்து நன்னெறியில் ஈடுபடுத்திய குருமார்களை வணங்குவது தொன்று தொட்டு இருந்து வரும் முறையாகும்.

இவ்வகையில் சிவபூசை செய்பவர்கள் மேலேகுறித்த ஏழு குருமார்களை வணங்குகின்றனர். இவர்களை முறையே சதாசிவகுரு, அனந்தேசகுரு, ஸ்ரீகண்டகுரு, அம்பிகாகுரு, குமாரகுரு, விஷ்ணுகுரு, பிரம்மகுரு என அழைக்கின்றனர்.

சிவபூசையின் தொடக்கத்தில் ஏழு மலர்களை இட்டு இவர்களை வணங்குகின்றனர். இதில் ஸ்ரீகண்டர் என்னும் குருவே உலகில் ஆகம ஞானத்தைப் பரப்பியவர் என்று கருதுகின்றனர். இவரைச் சிவபெருமானின் குருவடிவம் என்பர். சிவாச்சாரியார்களான ஆதிசைவர்களுக்குப் பரார்த்த பூசை செய்ய அதிகாரம் வழங்கியதும் இவரே யாவர். சைவ மடங்களும் சைவ சித்தாந்தத்தை அருளிச்செய்த ஆதி குருவாக ஸ்ரீகண்டரைக் குறிக்கின்றன.

தஞ்சைப் பெரிய கோயிலில் ப்ருத்வி மகாதேவி என்பவள் ஸ்ரீகண்ட மூர்த்தியின் திருவுருவத்தை எழுந்தருளி வைத்ததுடன் பூஜைக்கு வேண்டிய நிவந்தங்களையும் ஏற்படுத்தினாள் என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

பூஜாபத்ததிகளை வகுத்த ஸ்ரீகண்டர்

மேலே சொல்லப்பட்ட ஸ்ரீகண்டர் பரமேஸ்வரனின் அம்சமாவார். அடுத்ததாக பரந்துபட்ட ஆகம நூல்களில் இருந்து பூசைக்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துப் பத்ததி நூல்களை உருவாக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிய ஆசாரியர் ஒருவரும் ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் என்று அழைக்கப்படுகிறார். இவர் இயற்றிய பத்ததி ஸ்ரீகண்ட பத்ததி எனப் படும். சில தலங்களில் இவர் திருவுருவம் எழுந்தருளி வைக்கப்பட்டு பூசிக்கப்படு கிறது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் ஸ்ரீகண்ட ரின் அழகிய உலாத் திருமேனி உள்ளது. தைமாதத்தில் அவருக்குச் சிவாச்சாரியர்கள் விழா நடத்துகின்றனர்.

சென்னை திருவேட்டீசுவரன் பேட்டை யிலும் மூலவராக ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் எழுந்தருளியுள்ளார்.

சிவாச்சாரியர்களும் திருமடங்களும்

சைவ சமய வரலாற்றில் திருமடங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. ஞானபீடங்களாக அவை போற்றப்படுகின் றன. பூஜாபத்ததி நூல்களில் பல ஆதிசைவ மடங்கள் இருந்தது பற்றிக் குறிக்கப்பட் டுள்ளன.

ஆதியில் நான்கு புகழ்பெற்ற சைவாச் சாரிய திருமடங்கள் இருந்தன. பரத கண்டத் தில் துர்வாச முனிவரால் ஆமர்த்தக மடம் நிறுவப்பட்டது. அதிலிருந்து காசிபர், கௌசிகர் முதலான ரிஷிகள் ஸ்ரீகண்டரை உபாசித்து ஆகம ஞானம் பெற்றனர். இம் மடத்தில் வீற்றிருந்த தட்சிணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்ற சனகாதியர் நால்வரும் தனித்தனி மடங்களை அமைத்தனர்.

சனத்குமாரர் மேற்குறித்த ஆமர்த்தக மடத்திலிருந்தார். சனந்தனர் ரணபத்திர மடத்தையும், சனாதனர் கோளகி மடத் தையும், சனகர் புஷ்பகிரி மடத்தையும், ஸ்தாபித்தனர். இவை நான்கும் கோதாவிரி தீர்த்தத்தில் மந்திர காளீயம் என்ற நகரைச் சூழ்ந்திருந்தன. இவற்றிலிருந்து அனேக கிளைகள் உண்டாகித் தனி மடங்களாயின. இந்தப்பகுதிக்குஅந்தர்வேதிஎன்பது பெயர்.

இவர்கள் ஆகம வழியில் வந்தவர் களாயினும், வேதங்களையும் ஏற்று புது நெறி படைத்தனர். இவர்களின் வழிவந்த வரில் ஒரு லட்சம் பேர்களை ராஜேந்திர சோழன் கொண்டு வந்து சோழநாட்டில் குடியேற்றினார் என்பர். இவர்கள் இங்கே பல மடங்களை நிறுவினர். இவை ஆகமம், வேதம் ஆகிய இருநிலையையும் கைக் கொண்ட மடங்களாகும்.

அகோரசிவாச்சாரியாரின் க்ரியாகிரமத் ஜோதியில்,

1. ஸ்ரீ கைலாசமடம்
2. பௌண்டாரக மடம்
3. வலாக மடம்
4. கற்பக்கிராய மடம்
5. பத்ரீ மடம்
6. தேவாருவன மடம்
7. கர்ந்தர்ப்ப மடம்
8. உத்ராண்ய மடம்
9. தக்ஷிணா ரண்ய மடம்
10. கோவிதார மடம்
11. ஆமந்தக மடம்
12. மத்தமடம்
13. மாயூர மடம்
14. ரண பத்திர மடம்
15. சோழக மடம்

என்பன குறிக்கப்பட்டுள்ளன.

தென்னகத்தில் சிவாசாரியார்களில் ஞானத்தால் முதிர்ந்தவர்கள் திருமடங்கள் அமைத்து அங்கு ஞானசாரியார்களாக வீற்றி ருந்து மக்களுக்கு உபதேசம் செய்து வந்த னர். இவர்கள் துறவறம் பூண்டதோ காவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடை உடுப்பதோ இல்லை.முதிர்ந்த இல்லறத்தில் நிலை நின்றவாறே ஆதீன கர்த்தர் களாக விளங்கி வந்துள்ளனர்.

சிவாச்சாரியார்கள் ஆதிசைவ இனத்தினருக்கு மட்டுமின்றி பல்வேறு இனத்தினர்களுக்கும் ஆசாரியர்களாக இருந்து வந்துள்ளனர். அந்த இனத்தவர்களுக்குரிய திருமடங்களில் மடாதிபதிகளாக வீற்றிருந்து ஞானத்தை உபதேசித்துள்ளனர்.

திருவெண்ணைநல்லூரில் அரசு செலுத்தி வந்த வேளாளரான அச்சுதகளப் பாளருக்கு அருள்நந்தி சிவாச்சாரியார் குல குருவாக இருந்ததும், அவர்கள் மகப்பேறு வேண்டி வந்து ஆலோசனை கேட்டபோது தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்த்து உரிய வழி கூறியதும் இங்கே எண்ணத்தக்கதாகும்.

இவர்கள் அமைத்த திருமடங்கள் நூற்றுக் கணக்கில் இருந்து வந்தன. பின்னாளில் காலமாற்றத்தாலும் காவியுடுத்த துறவிகளே மடாதிபதிகளாக இருக்க வேண்டுமென்ற கொள்கை பரவியதாலும், இம்மடங்கள் படிப்படியாகச் செல்வாக்கிழந்துவிட்டன.

எடுத்துக்காட்டாக, திருவாலங்காட்டில் தரும சிவாச்சாரியார் மடம் எனப்படும் திருமடம் ஆதிசைவ சிவாச்சாரியாரை முதல்வராகக் கொண்டிருந்தது. இதற்கு ஆயிரம் வைஸ்யர் எனப்படும் செட்டிமார்கள் சீடர்களாக இருந்தனர்.

இம்மரபினர் தங்கள் குருமார்கள் சந்நியாசம் மேற்கொண்டு காவியுடுத்து தண்டு கமண்டலம் ஏந்தியவர்களாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதற்குக் குருமார்கள் ஆகம சைவசமயத்தில் தங்களுக்குச் சந்நியாசத்திற்கு இடமில்லை என்பதால் அதற்கு வழியில்லை என்று கூறி விட்டனர்.

செட்டியார்கள் அந்த குருவை விலக்கி விட்டு ஸ்மார்த்த சந்நியாசி ஒருவரை குருவாகப் பீடமேற்றினார் என்றாலும், தம்மை தரும சிவாச்சாரியாரின் சீடர்கள் என்றே இப்போதும் அழைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு பல மடங்கள் சிவாச்சாரியர்களிடமிருந்து கை நழுவிவிட்டன.

இப்போது ஆதிசைவரை ஆதிகுருவாகவும் வழிவழியாக அவ்வினத்து ஆச்சாரியர்களைக் கொண்டிருப்பதுமாக சில மடங்களேஉள்ளன. அவற்றில் கோவை மாவட்டத் தில் விஜயமங்கலத்துக்கு அருகி லுள்ள கூனம்பட்டியில் விளங்கி வரும் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் ஆதீனம் முதன்மை பெற்றதாகும்.

கூனம்பட்டி ஆதினம்

இம்மடத்தை நிறுவியவர் திருச்சி மாவட்டத்திலுள்ள வாட்போக்கி (இரத்தன கிரி)யில் வீற்றிருக்கும் மாணிக்கவரதரைப் பூசித்துவரும் ஆதிசைவ மரபில் வந்த ஸ்ரீமத் மாணிக்கசாமி என்பவராவார். இவர் சமயக் குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்க வாசக சுவாமிகளுக்கு அணுக்கத் தொண்டராக இருந்து அவரிடம் ஞான உபதேசமும் சிவபூசையும் பெற்றுக் கொண்டு இரத்தின கிரிக்கு வந்து இந்த மடத்தை நிறுவினார் என்கின்றனர்.

பின்னர் இம்மடம் அவிநாசிக்கு இடம் பெயர்ந்து அங்கே இருந்து சிலகாலம் செயல்பட்டது. இப்போது கூனம்பட்டியில் நிலைபெற்று நிலையான சமயப்பணி புரிந்துவருகிறது.

திருக்கயிலாய பரம்பரை கல்யாணபுரி ஆதினம் எனப்படும் இந்த ஆதினத்தில் இப்போது 57-ஆம் பட்டத்தில் குருமகா சந்நிதானமாக **ஸ்ரீலஸ்ரீ ராஜலிங்க சரவண மாணிக்க வாசக சுவாமிகள்** அமர்ந்து ஞானச் செங்கோலோச்சி வருகின்றார்கள், இம் மடத்தின் வழிபடு கடவுளாக இரத்தின கிரீசரும் ஞான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதல்வராக ஸ்ரீமத் மணிக்கவாசகப்பெருமானும் உள்ளனர். இவர்களுக்கு நித்திய பூசைகள்செய்யப்பட்டுவருகின்றன.

சட்டநாதசுவாமிகள் மடம்

சென்னை கோமளீசுவரன் பேட்டையில் சீர்காழி சட்டநாதசுவாமிகள் மடம் என்னும் பெயரில் ஆதிசைவ சிவாச்சாரியாரைத் தலைவராகக் கொண்ட மடம் இருந்து வருகிறது. இம்மடத்தின் சீடர்கள் அச்சிறுபாக்கம் மளிகை வர்த்தக செட்டியார் சமூகத்தவராவர். இவர்கள் இம்மடத்திற்கு வந்து பூணூல் போட்டுக் கொள்வதுடன் உபதேசம் பெற்றுக் கொள்கின்றனர்.

இம்மடம் ஆதியில் சீர்காழியில் இருந்ததென்றும், பின்னர் பல இடங்களில் இருந்து செயல்பட்டு 200 ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கு வந்து நிலைபெற்றது எனவும் கூறுகின்றனர், இம்மடத்தினரின் வழிபடு கடவுள் காமாட்சி அம்பிகை உடனாய அகத்தீசுவரர் ஆவார்.

ஆதிசைவர்களை மடாதிபதிகளாகக் கொண்டிருந்த அநேக திருமடங்கள் கால வெள்ளத்தால் சிறப்பு குன்றிக் கண்டறியப் பட முடியாமல் உள்ளன. இவற்றைக் கண்டறிந்து மேன்மைப்படுத்த வேண்டியது அனைவரின் கடமையாகும்.

காலாண்டார் மடம்

காஞ்சிபுரத்தில் காலாண்டார் தெரு என்னும் பெயரில் தெரு ஒன்று உள்ளது, காலாண்டார்கள் எனப்படும் ஆதிசைவர்களின் மடம் ஒன்று இத்தெருவில் இருந்ததால் இப்பெயர் பெற்றதென்பர். இவர்கள் வைரவமூர்த்தியை உபாசித்து வந்தததாகக் கூறப்படுகிறது, இவர்களுக்கு ஏகாம்பரேசுவரர், காமாட்சியம்மன் ஆலயங்களில் கால்பங்கு (நான்கில் ஒரு பகுதி) ஆளுமை இருந்ததால் காலாண்டார்கள் என அழைக்கப் பட்டனர் என்பர். வடமொழியில் சாதுர்பாக மிராசுதாரர்கள் என்றுஅழைக்கின்றனர்.

நமசிவாய வாழ்க
[illegible]

கொங்கு நாட்டுத் திருமடங்கள்

கொங்கு நாட்டில் குடியேறிய குருக்கள்மார் அனேக மடங்களைத் தோற்றுவித்து அதன் மூலம் சிவனடியார்களைப் பயிற்றுவித்து சிவப்பணியைச் செய்து வந்துள்ளனர். இவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட மடங்கள் இயங்கி வந்துள்ளன. இவற்றில் 55 மடங்களின் பெயர்ப்பட்டியல் கிடைக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியாரால் தோற்றுவிக்கப்பட்ட மடங்கள்

ஆகமங்களை போதிக்கவும் சிவாச்சாரியர்களை ஒருங்கிணைக்கவும், சைவ சித்தாந்த செம்பொருளைப் போதிக்கவும் திருமடங்கள் உருவாயின. இவ்வகையில் சிவாச்சாரியார்கள் அனேக மடங்களைத் தோற்றுவித்தனர். கால ஓட்டத்தில் அனேக மடங்கள் போற்றுவாரின்றி மறைந்தன. சிவாச்சாரியர்கள் தோற்றுவித்தாலும் அவரை அடிபோற்றி வந்த சீடர்கள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் வழியில் மடம் சென்றுவிட்டது.

எடுத்துக்காட்டாக புகழ்பெற்று விளங்கும் குன்றக்குடி ஆதீனமடம் சிவாக்கிர யோகிகள் மடம் ஆகியவற்றைக் கூறலாம்

குன்றக்குடி ஆதீனம்

இன்னாளில் புகழ்பெற்று விளங்கும் சைவத் திருமடங்களான குன்றக்குடி ஆதீனமும்.சூரியனார்கோயில் ஆதீனமும் தொடக்கத்தில் சிவாச்சாரியர் வம்சத்தில் வந்தவர்களாலேயே தோற்றுவிக்கப்பட்டவை என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

குன்றக்குடி ஆதீனம் என்பது திருவண்ணாமலையில் அண்ணாமலையாரைப் பூசித்துக் கொண்டிருக்கும் சிவாச்சாரியார்கள் மரபில்வந்த தட்சணாமூர்த்தி சிவாச்சாரியார் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதாகும்,

இளமையிலேயே இறை நாட்டத்துடன் பெரும் சிவபக்தராக விளங்கிய தட்சணா மூர்த்தி அவர்கள் ஒரு சமயம் கோயிலுக்குச் சென்றபோது கொடிமரம் பெருஞ்சோதியாகத் தோன்றியது. பின்னர் அண்ணாமலையார் ஓர் அந்தணன் வடிவில் வந்து அவருக்கு ஞானம் வழங்கினான்.

அது முதல் அவர் சிவஞானப் பேரின்பத்தில் திளைத்து வந்தார்.ஒருசமயம் இறைவன் உணர்ந்த அவர் தென் கயிலாய மான காளத்திக்குச் சென்று சிலகாலம் தங்கியிருந்தார். தினமும் பொன்முகலி ஆற் றில் நீராடி காளத்தியரை வழிபட்டு வந்தார்.

அவருக்கு உடையவரை வைத்து வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அன்று பெருமான் அவரது கனவில் தோன்றி பொன்முகலியின் கரையில் உள்ள புற்றில் தான் லிங்க வடிவில் இருப்பதாகவும் அதைஎடுத்துவழிபடுக என்றும் ஆணை தந்தார். அதன்படியே மறுநாள் புற்றை அடையாளம் கண்டுஅதிலிருந்த சிவலிங்க மூர்த்தியை வழிபட்டு வரலானார். அந்த லிங்கத்திற்குக் காளத்தியர் என்று பெயர் வழங்குகிறது.

அவர் மீண்டும் திருவண்ணாமலைக்கு வந்து பலகாலம் தங்கியிருந்த ஞான உபதேசம் செய்து வந்தார்.

குருமுதல்வர் தொடங்கி பதினாறு சந்நிதானங்கள் வரை திருவண்ணாமலையில் இருந்தே செயல்பட்டு ஞானஉபதேசம் புரிந்து வந்தனர்.

பதினேழாவது சந்நிதானம் இராமேசுவரம் யாத்திரையை மேற்கொண்டார். அவ்வேளையில் அவரைத் தரிசித்த சேதுபதி மன்னர் பாண்டிய நாட்டில் இருந்து சமயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதாகவும் கூறினார்.

சுவாமிகளும் அதை ஏற்றுக் கொண்டார். மன்னர் அவருக்கு பிரான் மலையில் திருமடம் அமைத்துத் தந்தார். பதினேழு முதல் 30 ஆவது குருமகா சந்நிதானம் வரை குன்றக்குடியில் இருந்தே செயல்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

30ஆவது ஆதீனம் சிறந்த முருக பக்தராக விளங்கினர். அத்துடன் மருது பாண்டியர்கள் அவருக்கு ஆதரவு அளித்தனர். அவர்கள் அங்கு பெரிய திருமடத்தை அமைத்துத் தந்தனர். அதுமுதல் அங்கிருந்தே அந்த ஆதீனம் செயல்பட்டு வருகிறது.

இந்த மடம் திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம் என்றே அழைக்கப்படுகிறது. குருமுதல்வரான தட்சணாமூர்த்தியவர்கள் அருள்நிலையம் திருவண்ணாமலையில் வடக்கு மாடவீதியும் மேற்கு மாடவீதியும் கூடுமிடத்திற்கு அருகில் உள்ளது.

தென்நாட்டில் இருந்துவரும் இம்மடத்தில் பின்நாளில் சிவாச்சாரியர் அல்லாத சீடர்கள் மடாதிபதிகள் ஆயினர். அம்மரபே இப்போதும் தொடர்கிறது.

இப்போது இதில் எழுந்தருளும் குருமூர்த்திகள் சிவாச்சாரியார் மரபில் வருபவர்கள் அல்ல என்றாலும் பூசையின்போது பூணூல் அணிந்து பூசிக்கும் வழக்கம் இருப்பதாக தவத்திரு ஊரன் அடிகள் குறித்துள்ளார்.

இந்த மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் அமிர்தலிங்கத் தம்பிரான் என்பவர் சென்னை மயிலாப்பூரில் இருந்த குன்றக்குடி கிளை மடத்தில் வாழ்ந்து சிவப்பணியும் தமிழ்ப் பணியும் செய்து வந்துள்ளார். அவர் இயற்றிய நூல் திருமயிலைத் தலபுராணம் ஆகும்

அதில் அவர் வாழ்த்துப் பகுதியில் சிவாச்சாரியார்களுக்கு வாழ்த்து சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் (பார்க்க பக்கம் ...)

சூரியனார் கோயில் ஆதீனம்

சோழ நாட்டில் காவிரிக் கரையில் சூரியனின்தனி ஆலயமிருக்கும் சூரியனார் கோயிலில் அமைந்துள்ள திருமடம் சூரியனார் கோயில் ஆதினமாகும்.

ஆடுதுறை என்று அழைக்கப்படும் தென்குரங்காடுதுறைக்கு அருகில் அமைந்துள்ள தலம் சூரியனார் கோயிலாகும். இது முன்னாளில் திருமங்கலக்குடி என்னும் தலத்தின் கீழ்பகுதியாக இருந்து வந்து தனியூரானதாகும்.

சூரியனார் கோயில் ஆதீனம் என்று அழைக்கப்படுகிறது. சிவாக்கிரம யோகிகள் சைவச் செட்டியார் மரபல் வந்தவர்.

இவரது இயற்பெயர் சிவக்கொழுந்து என்பதாகும். இவருடைய குருமார்கள் சந்தானம் சிவாச்சாரியர்கள் சந்தானமேயாகும். இதனை வாமதேவ சந்தானம் என்றும் ஸ்கந்தபரம்பரை என்றும் அழைப்பர்.

சிவபெருமானிடம் ஞானப் பொருளை அறிந்த முருகன் வாமதேவமுனிவருக்கு ஞான உபதேசம் புரிந்து சிவஞானத்தைப் போதித்து வருக என்று ஆணை தந்தான்.

வாமதேவர் வழியில் நீலகண்ட சிவாச்சாரியாரும் அவரிடமிருந்து விசுவேசுவர சிவாச்சாரியார், சதாசிவ சிவாச்சாரியார் சிவமார்க்கப் பிரகாசசிவாச்சாரியார் என்று ஞானபரம்பரை தொடர்ந்தது. சிவமார்க்கப் பிரகாசரிடம் உபதேசம் பெற்றவர்.

சிவக்கொழுந்து செட்டியார் என்னும் சிவாக்ர யோகிகள் இவரே இந்த திருமடத்தைத் தோற்றுவித்தவர் ஆவார். இவர் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர் நமச்சிவாய மூர்த்திகளிடம் நட்புடன் இருந்தவர். சிவாக்கிரயோகிகள் மடம் பின்னாளில் நலிவுற்றபோது திருவாடுதுறை ஆதீனமே அதை நடத்தி வரலானது. இப்போது திருவாவடு துறை குரு மகாசந்நிதானத்தால் நியமிக்கப்படுபவரே இந்த ஆதீனத்தில் குருமகாசந்நி தானமாக இருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நித்திய வழிபாட்டில் இருக்கும் மங்களேசுவர குருக்கள் சிற்பம்.

இராமநாதபுரத்திற்கு அருகிலுள்ள பெருவயல் என்னும் கிராமத்தில் பெரிய முருகன்ஆலயம் உள்ளது. இதில் கோயில் கொண்டிருக்கும் முருகன் ரணபலி சுப்பிர மணிய சுவாமி என்று அழைக்கப்படுகி றார்.சேதுபதிகளிடம் அதிகாரியாக இருந்த வைரவ லிங்கசேர்வை என்பவர் கனவில் தோன்றி முருகன் தான்தேவிபட்டினத்திற்கு அருகில் கடலுக்கு அடியில் சத்ருசம்ஹார வேலுடன் இருப்பதாகவும் தன்னை வெளி யே எடுத்து ஆலயம் அமைத்துப் பூசிக்கு மாறும் கட்டளையிட்டார்.

இதை சேர்வை அவர்கள் இராமநாத புரம் அரசருக்கும் அக்காலத்தில் உத்திர கோசமங்கையில் புகழுடன் இருந்த காளி உபாசகரான மங்களேசுர குருக்களுக்கும் தெரிவித்தார்.அவர்கள் உடனே அங்கு வந்த னர் பின்னர், அவர்கள்தேவிபட்டினம் கடலுக்குச் சென்று முருகன் சொல்லிய இடத்தைக் கண்டறிந்தனர். அங்கு சேவகர் கள் கடலில் மூழ்கி முருகனைத் தேடினர். பலவாறு முயன்று தேடியும் முருகன் கிடைக்க வில்லை. இறுதியில் வைரவன் சேர்வையே கடலில் மூழ்கித் தேடச் ஷண் முகர் வள்ளி தெய்வயானையுடன் சத்ருசங் காரவேலுடன் கிடைத்தார். திருச்செந்தூர் முரு கனே இங்கு வந்திருப்பதாக உணர்ந்த னர்.

அங்கு மங்களேசுவ குருக்களை குருவா கக் கொண்டு அவருடைய வழிகாட்டுதலின் பேரில் முருகனுக்கு ஆலயம் அமைத்தனர். பூஜைமுறைகளையும் மங்களேச குருக்களே வகைப்படுத்தினார்.

ஆலயத்தின் ரிஷிகோபுரவாயிலில் இரண்டு குதிரை வீரர்கள் பெரிய சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குதிரை சிற் பங்களை ஒட்டிய சுவரில் உட்பக்கம் எதிர் எதிராக உக்ரமாக போரிடும் காளியும் எதிரே அவளை வழிபடும் மங்களேச குருக்கள் திரு வுருவமும் புடைப்புச்சிற்பங்களாக அமைக் கப்பட்டுள்ளனர். தினமும் இவர்களுக்கு பூசையின்போது நைவேத்தியம், தூப,தீபம் காட்டி பூசைசெய்யப்படுகிறது. தினப்பூசை, காணும் தெய்வமாக மங்களேஸ்வர குருக் கள் இருக்கிறார். ꕥ

கௌரிசங்கர மகரகண்டிகை

சிவாச்சாரியர்களுக்குரிய அணிகலன்களில் உருத்திராக்கம் முதலிடம் பெறுகின்றது. குறிப்பாக இரண்டு ஒட்டிக் காய்க்கும் உருத்திராக்கமணிகளே **கௌரி சங்கரம்** எனப்படும். இதற்கு தங்கத் தால்மேலும் கீழும் கவசம் அணி வித்து அணிகின்றனர். இந்தக் கவசம் கலைவேலைப்பாடுடன் திகழ் கிறது. இதில் பூவேலைப்பாடுகளுடன் வில்வ இலைகள், சிவலிங்கங் கள் ஆகியவற்றின் உருவங்களும் இடம் பெற்றுள்ளன. முன்பக்கத்தில் சிவலிங்கம், இடபாரூடர்,நடராஜர் போன்ற வடிவங்களில் ஒன்று இடம் பெறுகின்றது. மேலும் இதனுடன் மகரமுகங்கள் செய்யப்பட்டுள் ளதால் இது மகர கண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. ꕥ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாச்சாரியர் தரும் விபூதி

சிவாச்சாரியார்கள் விபூதி தரித்தவர்கள். சிவபெருமானின் அருளை (பரையின் - பராசக்தியின் வண்ணமாக) விபூதி வடிவில் அன்பர்களுக்கு அளிப்பவர்கள். அவர்களுக் குரிய பொருட்களில் விபூதிப் பை என்கிற பொக்கணமும்ஒன்று.அதை மான் தோலால் செய்திருப்பர். இந்நாளில் பட்டுத் துணி யால் ஆன பையை வைத்திருக்கின்றனர். (தில்லை தீக்ஷிதர்கள் வெள்ளியாலான சம்புடத்தை வைத்திருக்கின்றனர்.)

ஒழுக்கமும் மேன்மையும் கொண்டவ ராகவும் சிவபெருமானைத் தொட்டு பூசிக்கும் பேறு பெற்றவர்களுமாகிய சிவா சாரியார்களைச் சிவமாகவே பாவித்து வணங்கி அவர்களிடம் பிரசாதமாக விபூதி பெற்றுக் கொள்வது வழக்கம்.

சிவபெருமானே அடியவர்களுக்குச் சிவாச்சாரியார் வடிவில் சென்று திருநீறு அளித்ததைப் பலருடைய வரலாற்றில் காண்கிறோம். அதிலொன்றை இங்கே காணலாம்.

திருவிடை மருதூருக்கு வடக்கே உள்ள தலம் திருவிசைநல்லூர். இங்கு ஸ்ரீதர ஐயா வாள் என்னும் பரம சிவபக்தர் வாழ்ந்து வந்தார். இவருக்காக கங்காதேவி நதி வடிவில் இவருடைய தோட்டத்துக் கிணற் றில் பொங்கி வந்து அருள் பாலித்ததாக வரலாறு கூறுகிறது. இவர் தினமும் திரு விடைமருதூர் மகாலிங்க சுவாமியை வணங்கி ஊருக்குத் திரும்புவது வழக்கம். ஒரு சமயம் கடும் மழை பெய்து காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அவ ரால் பூசைக்கு வரமுடியவில்லை. உள்ளம் வருந்திச் சோர்ந்தார்.

அவ்வேளையில் சிவாசாரியார் அங்கே வந்தார். கொட்டும் மழையில் முழுவதுமாக நனைந்திருந்தார். அவர் ஸ்ரீதர ஐயாவாளிடம் புஷ்பத்தை அளித்து விபூதி அளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட ஐயாவாள் மகிழ்ச்சி அடைந்தார். ஆச்சார்யார் ஈரத்தை மாற்றிக் கொள்ள புதிய துணிகளை அளித்த துடன் ஒரு சால்வையை அவருக்குப் போர்த் தினார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர் விடைபெற்றுக் கொண்டார்.

மறுநாள் வெள்ளம் வடிந்தது. ஐயா வாள் கோயிலுக்கு வந்தார். இரவு தமது இல்லத்திற்கு வந்த சிவாச்சாரியாரைக் கண்டு முதல் நாள் இரவு தமது இல்லத் திற்கு வந்து விபூதி அளித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

முப்போதும் திருமேனி தீண்டுவார் - சிவாச்சாரியார்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்குச் சிவாச்சாரியார் கடும் மழை பொழிந்து கொண்டிருந்ததால் ஆலயத்தை விட்டுத் தான் வெளியே வரவில்லை என்று கூறினார். அதைக் கேட்ட ஐயாவாள் வந்தது யாராக இருக்கலாம் என எண்ணியவாறே அவ்விடம் விட்டுக் கோயிலுக்குள் சென்றார். ஆலயத்துள் சென்று அவர் மகாலிங்க சுவாமியை வழிபட்டார். முதல் நாள் இரவு தாம் சிவாச்சாரியாருக்குப் போர்த்திய சால்வை சிவலிங்கத்தின் மீது இருக்கக் கண்டார். மனம் உருகி வழிபட்டார். வந்தவர் சிவபெருமானே என உணர்ந்தார்.

கடும்மழையில், காவிரியில் வெள்ளம் புரண்டு ஓடும் போது எப்படி சிவாச்சாரியார் தமது வீட்டிற்கு வந்திருக்க முடியும்? என நாம் யோசிக்கவில்லையே அப்படி யோசித் திருந்தால் வந்தவர் சிவபெருமானே என்பதை அறிந்து சிக்கெனப் பிடித் திருக்க லாமே என எண்ணி பெருமானின் கருணையை வியந்தார்.

இப்படி அனேகருக்குச் சிவபெருமான் சிவாச்சாரியார் வடிவில் சென்று விபூதி அளித்து அருள்பாலித்ததைக் காண்கிறோம்.

சிதம்பரத்தில் அன்றைய தினத்தில் பூசை செய்யும் தீக்ஷிதரை நடராஜராகவே போற்றி அவரிடமிருந்து விபூதி பெற்றுக் கொள்கின்றனர். இதற்கு முறைக்காரர் விபூதி என்பது பெயர். ❀

தோடா அணிவித்தல்

பாரத தேசத்தின் சிறப்பான அணிவகைகளில் கடகம் என்பதும் ஒன்றாகும். இது முன் கையிலும் ,தோளிலும் அணிவதாகும். இது முழு வட்டமாக இல்லாமல் இரண்டு முனைகளும் சேர்ந்திருந்தாலும் தனித்தனியாகவே இருக்கும். அதனால் இது தேவைக்கு ஏற்ப விரிந்து கொடுக்கும். வீரர்கள் கடகங்களை அணிந்தனர் .

கடகம் என்றால் நண்டு, இந்த அணி நண்டின்முன்னங் கால்களைப்போல இருந்ததால் கடகம் எனப்பட்டது. பின்னாளில் இது தோடா என்றும் அழைக்கப்பட்டது.

உயர்ந்த கலைஞர்களுக்கு அவர்களது கலைத்திறமையைப் பாராட்டி அளிக்கும் அடையாளப் பரிசாக இருந் தது.

சிவாச்சாரியர்களில் கை ராசி யானவர்கள், மிகுதியான செயல் களைச் செய்தவர்கள் ஆகமங்கள் விளக்கும் அறிவார்ந்த செய்தி களை விவாதிக்கும் கூட்டங்களில்பங்கு பெற்று சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக் களை வழங்கியவர்கள் பெரியகுடமுழுக்கு விழாக் களைச் செய்த வர்கள் பெரிய ஆலயங்களை நிர்மா ணிக்கத் துணை நின்றவர்கள் முதலானவர் களை சிறப்பிக்கும் வகையில் உரியவர் களுக்கு பொற்கடகம் அணிவிக்கப் பட்டது.

அண்மைக்காலம்வரை பெரிய குடமுழுக்கு விழாக்களை நடத்துபவர்கள் அதைத் தலைமை ஏற்று சர்வசாதகம் செய்து சிறப்பாகச்செய்யும் சிவாச்சாரியாருக்கு கடகம் அணிவித்து கௌரவித்தனர். இதுபோல் புலவர்கள்,ஆலயத்தைப் பொறுப் பேற்றுக் கட்டிக்கொடுத்த ஸ்தபதி யார் போன் றவர் களுக்கும் கடகம் அணிவிக் கப்பட்டது. இதைத் தோடா அணிவித்தல் என்பர்.

கடகத்தின் இரு முனை களிலும் மகர முகங்கள் யாளி முகங்களை இணைத் துள்ளனர்.அதன் கண்களில் சிவப்புக் கற்களையும் பதித்துள்ள னர்.முழுவதும் கற்கள் பதித்துச் செய்யப்பட்ட தோடாக்களும் உள்ளன. ❀

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சமய இலக்கிய வரலாற்றில் சிவாச்சாரியார்கள்

அருச்சகர்கள் வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

சமய ஆதிநூல்களான ஆகமங்களுக்கு பல உரை நூல்களை ஆதிசைவர்களான சிவாசாரியார்கள் எழுதியுள்ளனர். அவை யாவும் கிரந்த எழுத்தில் வடமொழியில் அமைந்துள்ளன. அவற்றில் அகோர சிவாச்சாரியார் எழுதியுள்ள கிரியா கிரமத்ஜோதி முதலியவைதனிச்சிறப்புடன் திகழ்கின்றன.

ஆதி சைவ மரபில் வந்த அகோர சிவாச்சாரியார் சிதம்பரத்தில் வசித்து வந்தவர்.

ஸ்ரீகச்சியப்ப சிவாச்சாரியார்

இவர் அகோர பத்ததி என்னும் நூலை எழுதியுள்ளார். அந்த பத்ததியே சித்தாந்த சைவர்களால் பரதகண்டத்தில் கையாளப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில் அவர்களின் பங்களிப்பு குறைவானதே என்றாலும் குறிப்பிடத்தக்க மேன்மை பெற்றுள்ளன.

சைவத் திருமுறைகளில் ஏழாவது திருமுறையை அருளிச் செய்த தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆதிசைவ நன்மரபில் வந்தவர். அவருடைய குலப் பெருமையை விளக்கும் வேளையில் சேக்கிழார் பெருமான், அருமறைச் சைவம் ஓங்க அவதரித்த வாய்மை குன்றாத் திருமறையவர்கள் குலம் என்றும், மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர்குலம் என்றும் குறிக்கின்றார்.

திருமுறைகளைத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள் அருச்சகர் குலத்துதித்தவர். அவர் விநாயகர் மீதும் சிவ பெருமான்மீதும் பல நூல்களை இயற்றியுள்ளார்.

காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டம் என்னும் முருகனாலயத்தில் அருச்சகப்பணி புரிந்து வந்தவரான கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழ்க் காவியங்களில் ஒன்றான கந்த புராணத்தை எழுதிப் பெருமை பெற்றிருக்கின்றார்கள்.

அந்நூலை, முருகப் பெருமானே தம் கைப்பட பிழையற திருத்தினான் என்றும், அதன் அரங்கேற்ற வேளையில் தடை தேர்ந்தபோது புலவனாய் வந்து விளக்கம் அளித்து உதவினான் என்றும் வரலாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவசித்தாந்தம் போற்றும்
சந்தானக்குரவர்களில் இரண்டாமவரான
அருள் நந்தி சிவாச்சாரியார்.

கூறுகிறது. இது மிகவுயர்ந்த தமிழ்க் காவிய மாகப் போற்றப்படுகிறது.

திருத்துறையூரில் ஆதிசைவக் குலத்தில் பிறந்து சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பட்டத்துடன் வாழ்ந்தவர் அருள் நந்தி சிவாச்சாரியார். முதலில் மெய்கண்ட சிவத்தின் குலகுருவாக விளங்கி, அவருடைய ஞான நிலையை உணர்ந்து அவரது தலைமைச் சீடரானவர். இவர் இயற்றிய நூல்கள் சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படும் சிவஞான சித்தியாரும், இருபா இருபஃதும் ஆகும். இவர் சைவசித்தாந்த மரபில் முதன்மை பெற்ற சந்தான ஆச்சார்யர்களில் இரண்டா மவராக வைத்துப் போற்றப்படுகிறார்.

இவரை அடியொற்றிவந்த உமாபதி சிவனார் தில்லைவாழ் அந்தணர் தம் மரபில் வந்தவர். ஆச்சார்ய பக்தியின் காரணமாக குலமரபுகளை மீறியதால் குடியிலிருந்து விலக்கப்பட்டு கொற்றவன்குடி எனுமிடத்தில் தங்கியிருந்தார். சிவபெருமானின் திருவரு ளால் நிறையப் பெற்ற இவர் சித்தாந்த அட்டகம் என்னும் சித்தாந்த நூலை இயற்றியுள்ளார். இவை எட்டும் சைவ சித்தாந்தச் சாத்திரங்களாகப் போற்றப்படுகின்றன.

தென்மாவட்டங்களில் மேலும் பல சிவாச்சாரியார்கள் அருமையான தமிழ்ப் புலவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்களைப் பற்றிய விரிவான குறிப்புக்களை அறிய முடிய வில்லை.

இலங்கையில்வாழ்ந்த பல ஆதிசைவர்கள் பலர் பூஜா விளக்க நூல்களை எழுதியளித்துள்ளனர்.

அவர்களில் அச்சுவேலி ஸ்ரீகுமார சுவாமி குருக்கள் அவர்களின் பணி மகத்தானதாகும்.

சிவாச்சாரியார்களும் திருமுறைகளும்

சிவாச்சாரியார்கள் ஆகம வழிபாட்டுடன் தேவார திருவாசகம் முதலான திருமுறைகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். அவற்றை தேவையான இடங்களில் பாடிப்பரவினர். பூஜைகளின் நிறைவில் வடமொழி வாழ்த்தையும் தொடர்ந்து தமிழ்வேதமான வாழ்த்தையும் கூறும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.இப்போது திருவாளர் சம்பந்த குருக்கள் அவர்கள் தேவார திருப்புகழ் பாடல்கள் முழுநேர இசைக் கச்சேரியாகசெய்வது சிறப்பாக உள்ளது.

பல ஆலயங்களில் சிவாச்சாரியார்கள் இசையும் திருமுறைகளைப் பாடுவதைக் காண்கிறோம். குறிப்பாககொங்குநாட்டுச் சிவாச்சாரியார்கள் திருமுறைகளில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீழ்ந்து எழுந்தவர்கள்

பல்லவர்கள் காலத்திலும் சோழர்கள் காலத்திலும் சைவசமயம் அரசர்களால் போற்றப்பட்டு அரசாங்க மதமாகவே திகழ்ந் தது. அவர்கள் ஆலயங்களில் முறை யான பூஜைகள் நடைபெற அனேக பணி யாட்களை நியமித்திருந்தனர். அவர்களில் முதன்மை பெற்றவர்கள் சிவாச்சாரியர்களே ஆவார். அவர்களுக்கு உடன் பணி செய்ய மாணிகள் என்போர் இருந்தனர்.

சோழர்களுக்குப் பிறகு பாண்டியர்கள் சோழநாட்டைக் கைப்பற்றினர். அவர்களும் சைவர்கள் என்பதால் கோயில்கள் சிறப்பா கவே இயங்கின.

பின்நாளில் வந்த சுந்தரபாண்டியன் தனது அறியாமையாலும் பேராசையாலும் செய்த பிழையால் தமிகத்திற்கு எதிர் பாராத சோதனை வந்து விட்டது. பதவிப் போராட் டத்தால் சுந்தர பாண்டியன் செய்த பிழை யால் மாலிக்காபூர் என்னும்அந்நிய மதத் தைச் சேர்ந்த கொள்ளைக்காரன் தென்னாட் டின் மீது படையெடுத்து வந்தான். அந்தக் கொடுங்கோலன் கோயிலில் இருந்த நகை களைக் கொள்ளையிட்டான். தடுக்க வந்த சிவாச்சாரியார்களைக் கொலை செய்தான். மேலும் நகைகள் எங்கே வைக்கப்பட்டிருக் கிறது என்று அவர்களைச் கேட்டுச் சித்திர வதை செய்தான். பல மாதங்கள்வரை தென் னக மெங்கும் அமைதியற்ற சூழலே இருந் தது.

இந்த காலகட்டத்தில் ஆயிரக்கணக் கான அருச்சகர்கள் பெருந்துன்பத்தை அடைந்தனர். அந்நிய மூர்க்கர்களால் வீதி களில் அவர்கள் கட்டி இழுத்துச் செல்லப் பட்டனர். தொடர்ந்து எங்கும் துன்பச் சூழலே நிலவியது. மேலும் உற்சவ விக்கிர கங்களை களவாடவும் தொடங்கினர். அத னால் அவற்றை எடுத்துக் கொண்டு பலர் தலைமறைவாயினர்.ஏறத்தாழ முப்பத்தாறு ஆண்டுக்காலச் சூழல் சரியாக இல்லை

இக்காலகட்டத்தில் கோயில்கள் மூடப் பட்டு கேட்பாரின்றி காடுமண்டிப் போனது.

கொள்ளை, கொலைகள் ஓய்ந்த பிறகு சுல்தான்கள் ஆட்சி தொடங்கியது. அக்கால கட்டத்திலும் தென்னிந்திய சமயங்கள் அனைத் துமே பெருந்துன்பத்திற்கு உள்ளா யின.

தென்னாட்டிற்கு விடிவெள்ளியாக விஜயநகரப் பேரரசை நிர்மாணித்த புக்கரின் மகன் வீரகம்பவர்மன்தோன்றினான். அவன் இந்து சாம்ராஜ்யத்தை நிறுவ பெரும் படை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுடன் தென்னகம் வந்தான். மதுரையில் இருந்த சுல்தான்களை ஒழித்துக்கட்டி விஜய நகரப் பேரரசை நிர்மாணித்தான்.

அவனது ஆணையால் தென்னக மெங்கும் இருந்த கோயில்கள் யாவும் புத்துணர்ச்சியுடன் பொலிவும் பெற்றன. கோயில்களின் அழிபாடுகளை நீக்கிப் புதுக்கிப் பொலிவு பெறச்செய்தான்.

இதற்குள் ஏறத்தாழ ஒரு தலைமுறை காலம் கடந்து விட்டிருந்தது. மறைந்து வாழ்ந்த சிவாச்சாரியார்கள் தேடிப்பிடித்து அழைத்துவரப்பட்டனர். மீண்டும் அவர்கள் ஆலயங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

கொடிய சூழலில் கோயில்களில் தான் தெய்வங்களுக்குப் பூஜைகள் முறையாக நடைபெறவில்லையே, தவிர, கலாகர்ஷண செய்து எடுத்துச் சென்ற மூர்த்திகளுக்கும் பாதுகாப்பாக வைத்திருந்த உலாத்திரு மேனிகளுக்கும் சிவாச்சரியார்கள் இரகசியமாக பூஜைகளைச் செய்து வந்தனர். ஆலய பூசையற்று இருந்தாலும் கனதனவான்களின் உதவியுடன் சிவாச்சாரியார்கள் சிவப்பணியான சிவபூஜைகளைத் தொடர்ந்து வந்தனர். அவர்கள் தங்களது ஆதார சக்தியான ஆகமங்களைப் போற்றிக் காத்து வந்தனர்.

விஜயநகரப் பேரரசில் கோயில்கள் மீண்டும் அரசசெல்வாக்கைப் பெற்றன. அவர்கள் பரம வைஷ்ணவர்களாக இருந்தும் சிவாலய வழிபாட்டை தனிச் சிறப்பாகவே போற்றி வந்தனர். அவர்கள் காலத்தில் நெடிய கோபுரங்கள் கட்டப்பட்டன.

கலககாலத்தில் சிவாச்சாரியார்கள் பாதுகாத்து வைத்திருந்த ஆபரணங்கள் திருக்கோயிலுக்கே வந்துசேர்ந்தன. ஒரு தலைமுறைக் காலம் கோயில்கள் அழிந்து இனி ஆகம வழிபாடுகள் வருமா? என்ற பெரிய கேள்விக்கு நடுவிலும் அர்ச்சகர்கள் ஆகமங்களைப் போற்றிக் காத்து அளித்தது அவர்களுடைய இரத்தத்திலேயே ஊறியுள்ள சிவபக்திக்கும்கோயில் பூசனைக்கும் சான்றாக இருக்கிறது.

(கோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டு பெருந்துன்பம் சூழ்ந்து நின்றதையும் அருச்சகர்கள் பட்ட பெரும் பாட்டையும் வீரகம் பண்ண காவியமான **மதுரா விஜயம்** எனும் நூலால் அறிய முடிகிறது. இதை சமஸ்கிருதத்தில் இயற்றியவர் கம்பவர்மனின் மனைவியான கங்காதேவி என்பவராவார்.)

இந்த இடத்தில் கூடுதலான ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

கலக காலங்களில் அந்நியர்களாலும் சுயநலவாதிகளாலும் கோயில்கள் அழிக்கப்படுவதும் சொத்துக்களை கொள்ளையடிப்பதும் அமைதி திரும்பியதும் சிவாச்சாரியார்கள் அவற்றைப் புனரமைத்து மீண்டும் பொலிவு பெறச்செய்து வழிபாட்டிற்குரிய தாக்குவதும் காலங்காலமாக திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்ச்சிகளாகவே உள்ளன. இவ்வகையில் அண்மையில் நடைபெற்ற ஒருசம்பவத்தைச் சிந்திக்கலாம்.

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் பகுதியில் கீரிமலை என்னும் தலம்உள்ளது. இதனை வடமொழியில் நகுலேஸ்வரம் என்று அழைப்பர்.

இலங்கையில் கடந்த காலத்தில் யுத்தம் தொடங்கிய வேளையில் இக்கோயிலில் தான் முதலில் குண்டுமழை பொழிந்தது அன்று கேதார கௌரி விரதம் என்பதால் அதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்து கொண்டிருந்தனர்.

அவ்வேளையில்தான் குண்டுகள் வெடித்தன. எங்கும் அவல ஓலம் நிறைந்தது ஏராளமான உயிர்ச்சேதம் உண்டானது. அந்தப்பகுதியே இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. ஆதலால் சிலகாலம் அங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இலங்கையிலுள்ள கீரிமலை நகுலேசுவரம் அன்றும் இன்றும்

பூசை நடைபெறவில்லை.பல மாதங்கள் அங்கு எவரும் நுழையவே முடியவில்லை. கோயில் இராணுவத்தினர் தங்குமிடமானது.

அப்போது ஏறத்தாழ நாற்பது வயதில் இருந்த நகுலேசுவர குருக்கள் பலமுறை நடந்து நடந்து இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து கோயில் பூசைகளைச் செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்த்தி உத்தரவு பெற்றார். தன்னந்தனியாக கோயிலுக்குச் சென்று பூசைகளைச் செய்தார்.

படிப்படியாக தன்னுடன் பக்தர்களை அழைத்துச் சென்றார். இராணுவ வீரர்களின் நடுவே செல்ல வேண்டியிருந்தது. தமிழர்கள்மீது வெறுப்பைக் கொண்ட சிங்கள வீரர்கள், அதுவும் நவீன துப்பாக்கி போன்ற ஆயுதங்களை ஏந்தியவர்கள்.உணர்ச்சி வசப்பட்டு பேசுவதுகூட விபரீதத்தை விளைத்து விடும் கடுமையான சூழல். என்றாலும் அஞ்சாமல் சென்று பூசைகளை செய்து வந்தார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் கழித்து யுத்தம் முடிவுக்கு வந்தது. ஓரளவு சகஜ நிலை திரும்பியது. குருக்கள் முயன்று கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு நடத்தினார். காலஓட்டத்தில் முதுமை அடைந்தபோதிலும் உற்சாகம் குறையாமல் எண்பது வயதைக் கடந்த போதும் தளராது கோயில் பணிகளைச் செய்வித்தார்.

அவருடைய சிவ பக்தியே அடியவர்களை ஊருக்கு வந்து அருட்கொடை வழங்கச் செய்து கோயிலை புனரமைக்கச் செய்தது என்றால் மிகையாகாது.

(இச்செய்திகளை அக்கோயிலின் வெளியீடான நகுலேசுவரம் என்னும் நூலில் விரிவாகக் காணலாம்)

இப்படித்தான் ஒவ்வொரு குருக்கள் மாரும் தன்ஆர்வத்தால் சூழ்நிலையின் விபரீதத்தை உணர்ந்திருந்தாலும் கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுத் தனது பணியைச் செய்து வந்துள்ளதை வரலாற்று நெடுகக் காண்கிறோம். ❀

பவித்திரக் கையர்

வேத ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ள செயல்பாடுகளைச் செய்யும்போது பவித்திரம் என்னும்மோதிரத்தை அணிந்தே செய்கின்றனர். தர்ப்பைப் புல்லின் நுனிகளைச் சேர்த்து முடித்து பவித்திரம்தயாரிக்கப்படுகிறது. இது அவ்வப்போது செய்து பயன்படுத்துவதாகும். சிவாச்சாரியாருக்கு உரிய அணிகலன்களில் ஒன்றாகப் பவித்திரம் உள்ளது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம பாடசாலைகள்

சிவாச்சாரியார்கள் வீட்டிலேயே சிறுவர்களுக்கு தொடக்க நிலைப்பாடங்களைச் சொல்லிக்கொடுத்தனர். பிள்ளைகள் விளையாட்டாகவே சுவாமி வடிவங்களுக்கு அபிஷேக அலங்காரங்களை செய்துபழனர். அதனால் அவர்கள் கோயில் பணிகளுக்கு வரும்போது ஆகம,வாழ்வியல் நடைமுறைகளைக் கற்றறிந்தவர்களாகவே இருந்தனர். சிறப்புவிழாக்களில் சிறுவர்களையும்.உடன் வைத்துக் கொண்டதால் ஆலய நடைமுறைகளையும் எளிதில் கற்றுக் கொள்கின்றனர்.

உபநயனம் ஆன பின்னர் அவர்களைத் தகுதி வாய்ந்த சிவாச்சாரியாரிடம் சேர்த்து விட்டனர். அவர்களுக்கு ஆசிரியர் தமிழ், கிரந்த எழுத்துக்களை கற்றுத் தந்தனர்.

ஆகமநூல்கள் கிரந்த வரி வடிவத்தில் இருப்பதால் கிரந்த வடிவத்தை பயிலுதல் அவசியமானதாகும். மாணவர்கள் குருவின் வீட்டிலேயே தங்கி பாடங்களைக் கற்றுக் கொண்டனர். பெரிய சிவாச்சாரியர் இல்லங்கள் குருகுலங்களாகவே இயங்கின.

அடுத்த கட்டத்திற்கு ஆகம கல்விக் கூடங்கள் செயல்பட்டன. இதில் ஆகம ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இதில் உயர் மட்ட ஆகமக் கல்வி போதிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் வரவுக்குப் பின்னால் கல்விக்கூடங்கள் தோன்றின. அதுபோல் ஆகம பாடசாலைகள், வேதாகம பாடசாலைகள் உண்டாயின. இவையும் உறைவிடப் பள்ளிகளாகவே இருக்கின்றன. இங்கு பயிலும் பிள்ளைகளுக்கு ஆகப்பிரவீணர் போன்ற பட்டையங்கள், சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தனிப்பட்ட குருக்கள்மார்களும், திருமடங்களும், கனதனவான்களும், அரசும் ஆகமப் பள்ளிகளை நடத்திவரு கின்றனர். வெளிநாடுகளில் நியமிக்கப் பெறும் குருக்கள்மார்களுக்கு இந்த ஆகமப் பள்ளியின் சான்றிதழ்அவசியமானதாக இருக்கின்றது❀

ஆகம சீலர்

சைவர்களுக்கு ஆகமங்களே அடிப்படை நூல்களாகும். அதைக்கற்றுத் தெளிந்தாலே சிவனருள் கூடும். இதன்படி நடப்பவர்கள் ஆகமசீலர்கள் என்று அழைக்கப்பட்டனர். சுந்தரர் திருவாரூர் பரவையுள் மண்டளி என்ற தலத்திற்கு அருளிய பதிகத்தில்

அம்மானே " ஆகம சீலர்க்கு" அருளும் பெம்மானே
பரவையுள்தளி அம்மானே ன்று பாடிப்பரவுகின்றார்.

இங்கே ஆகமசீலர் என்பது சிவாச்சாரியார் களைக் குறிக்கிறது என்பர். குமரி மாவட்டத்தில் ஆகமசீலேசுவரர் என்னும் சிவாலயம் உள்ளது.

ஆகமங்களும் அவற்றை விளக்க எழுந்த நூல்களும் அளவற்றவையாகும். அவை எல்லாவற்றையும் ஒருவன் தன்வாழ்நாளில் தேடிப்பிடித்து படித்த விட முடியாது. அதனால் இதில் ஐயாயிரம் சுலோகங்களை அறிந்தவர். பஞ்சசகஸ்ராத்தியாயி என்னும் லட்சம் கிரந்தங்களை அறிந்தவர்.லட்சாத்தியாயி என்றும் அழைக்கப்பட்டனர். ❀

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களைப் போற்றியவர்கள்

சிவாகமங்கள் அனைத்துச் சைவர்களுக்குமான நூல்களாகும்.சிவாலய வழிபாட்டினை மேற்கொண்டுள்ள சிவாச்சாரியர்களுக்கு அது சிறப்பு நூலாக உள்ளது.முன்நாளில் சிவனடியார்கள் பலரும் அதைக் கற்றுத் தேர்ந்தனர்.

பல்லவப்பேரரசனாக விளங்கியவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் இடம் பெற்றிருப்பவரும் ஆன காடவர்க்கோன் என்னும் மன்னர்பிரான் ஆகமங்களைக் கற்றுத் தேர்ந்து இருந்ததுடன் அதில் சொல்லியவற்றைக் கடைப் பிடிப்பவனாகவும் இருந்தான். அவர் தான் கட்டிய கயிலாய நாதர் கோயிலில் தனக்கே உரியதான 250 க்கும் அதிகமான பட்டப் பெயர்களைக் குறித்துள்ளான். அவற்றில் ஆகமானுசாரி என்பதும் ஒன்றாகும். இதற்குஆகமத்தை அனுசரித்து வாழ்வு நடத்துபவன் என்பது பொருளாகும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனார் ஆகம நூல்களை தேடிப்பிடித்துப் படித்து அவற்றை ஆராய்ந்துவருவதில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். அவரது இயற்பெயர் தெரியவில்லை. மெய்ப் பொருளான ஆகமக் கருத்துக்களைத் தேடி அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்ததால் அவர் மெய்ப்பொருள் நாயனார் என்றுஅழைக்கப்பட்டார்.

அவரது இந்த ஆர்வத்தைப் பயன் படுத்தியே இவரது எதிரி முத்தநாதன் அவரைக் கொன்றான் என்றாலும் மரணத் தருவாயில் இருந்தஅவர் அவனை தத்தாநமர் (நம்மவர்) என்றே சொல்லி பாதுகாப்பாக போகச் செய்தார் என்பது வரலாறு.

சிவாச்சாரியார் தவிர மற்றவர்கள் ஆகம வழிபாட்டை மேற்கொள்ள முடியாது என்றாலும் அவற்றைத் தேடிப்பிடித்துப் படிக்கக் காரணம். ஆலய வழிபாட்டிற்கு வேண்டியவற்றை குறைவில்லாமல் ஏற் பாடு செய்தல், ஆலயங்களை அமைத்தல், புனரமைத்தல் போன்றவற்றை அறிந்து செயல்படுதல் போன்றவற்றிற்கே ஆகும்.

ஆகமத்தின் கிரியாபாதக் கருத்துக்கள் கோயில் பூசை முறைகளைப் பேசினாலும் ஞானபாதக் கருத்துக்கள் உயிர்மேன்மை அடையும் வழியைக் கூறுவதாய் அவற்றைப் போற்றிப் படித்து வாழ்வில் கடைப் பிடித்தனர். ❀

லட்சாத்தியாயீ-ஆகமங்கள் பல கோடி சுலோகங்களைக் கொண்டவை. அவற்றில் ஒரு லட்சம் சுலோகங்களை முறையாக அத்தியாயனம் செய்தவர்கள் லட்சாத்தியாயீ என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தம்மை ஸ்ரீலட்சஸ்ரீ என்ற அடைமொழியுடன் அழைத்துக் கொண்டனர். அதுவே ஸ்ரீலஸ்ரீ என சுருக்கம் பெற்றது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒப்பற்ற பக்தியாலும் தமது மகிமையாலும் மேன்மை பெற்றுச் சிவாச்சார்யர்களாக இருப்பவர்கள்

ஆதிசைவர் அல்லாத வேறுகுலங்களில் தோன்றியிருந்த போதிலும், பல அன்பர்கள் தங்களுடைய சிவபக்தியாலும், மகிமையாலும் மேன்மை பெற்றுச் சிவாச்சார்யர்களாக விளங்கிச் சைவத்தை விளக்கமுறச் செய்திருக்கின்றார்கள். அவர்களில் சிலரை இப்பகுதியில் சிந்திக்கலாம்.



ஸ்ரீ ஹர தத்த சிவாச்சாரியார்

ஸ்ரீ ஹரதத்த சிவாச்சாரியார். இவர் கஞ்சனூர் என்னும் தலத்தில் வைணவ குலத்தில் தோன்றியவர். இவருக்குக் பெற்றோர்கள் உபநயனம் செய்து மந்திரோபதேசம் செய்வித்த வேளையில், இவர் சிவமே பரம்பொருள் என்று கூறினார். அங்குக் கூடியிருந்த வைணவர்கள் கோபம் கொண்டு அவரிடம் பழுக்கக் காய்ச்சிய மழு மீது நின்று அதைக் கூற முடியுமா? என்று கேட்டனர்.

அவர் சற்றும் சளைக்காமல் "அன்பர்களே சிவபெருமானே பரம்பொருள் என்பது மட்டுமல்ல அவர் ஏன் பரம்பொருளாக இருக்கின்றார் என்பதையும் விளக்கிக் கூறுவேன்" என்றார். வைணவர்கள் அங்கு ஒரு இரும்பு முக்காலியை இட்டு அதைப் பழுக்கக் காய்ச்சினர். இரும்பு கனன்று நெருப்பு வடிவமாயிற்று. ஹரதத்தர் அதன்மீது ஏறி அமர்ந்தார்.

சிவபெருமானின் அதியுன்னத பராக்கிரமங்களை விளக்கும் இருபத்தைந்து செயல்களை எடுத்துக்கூறும் சுலோக பஞ்சகம் என்ற நூலை அருளிச் செய்தார். அதைக் கண்டும், கேட்டும் எல்லோரும் வியந்தனர். அப்போது திருமால் அங்குத் தோன்றி அவர் கூறியது சரியென்று ஆமோ தித்தார். அன்று முதல் அவர் ஹரதத்தர் என்று அழைக்கப் பட்டார்.

சைவத்தின் மேன்மையை உபதேசித்து மகிமைப்படுத்தியதால் அவரை மக்கள் ஹர தத்த சிவாச்சாரியார் என்று கொண்டாடுகின்றனர். இந்த வரலாற்றை விளக்கும் புடைப்புச்சிற்பம் கஞ்சனூரில் உள்ளது

சுதைச் சிற்பமொன்று மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்து இராஜ கோபுரத்தில் இடம் பெற்றுள்ளது அதையே இங்குக் காண்கிறோம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ இலக்கியங்களில் ஆதிசைவர்

சிவன் முகத்திலே சனித்த விப்பிரசைவர்
இவரே அருச்சனைக்குஎன்றுஎண். - சைவசமயநெறி 435.

அருச்சனைபுரிக இந்தஐந்துலிங்கத்தும்அன்பால்
தரித்தெழு நான்கும்ஈசன் முகத்தின்உற்பவித்த சைவர்
-அருணகிரிபுராணம்(வலம்புரிசருக்கம்)31.

அண்ணலார் திருமுகங்கள் ஐந்தினும்தோற்றம்உற்றார்
கண்ணலார் பொதுச்சிறப்பாம் மறைகள் ஆகமங்கள் கற்றார்
நண்ணலார் பரார்த்தத்தோடு ஆன்மார்த்தமும் நயந்துஅர்ச்சிக்கும்
எண்ணலார் ஆதிசைவர். -மாயூரத்தலபுராணம்.

நயத்தகு வேதம்ஓதி நல்லஆகமங்கள் தேற்றிப்
புயத்தலைச் சூலம் வைத்த புனிதர் பூசனையால் பேறு
வயத்துறு தமக்கும்ஏனை வையகத்து எவர்க்கும் ஆக்கும்
வியத்தகும் ஆதிசைவர் -விநாயகபுராணம்

இருள் மலம் துமிக்கும் சிவாகம முறையில் ஈரிரு
பாதமும் அனுட்டித்து -அருள் பெறும் ஆதிசைவர்கள்
-காஞ்சிப் புராணம்

தாங்களே அருள் உடையராம் தகுதியை மதியார்
யாங்கள் யாவரு மருளினராம் வகை எண்ணி
ஓங்கு பூசனை இரண்டையும் உஞற்றுவிப் பார்கள்.
-திருவானைக்காப் புராணம்

அருள்வளம் கொழிக்கும் ஐந்தொழிலாக
அடங்கிய சிறப்பொடு பூசை
மருவும் எவ்வகையும் ஆகம வழியால்
மயரறத் தெளிந்தவர் வரையாச் சுருதிகள்
மிருதி புராணம் எக்கலையும் துகளறதெரிந்தவர்
இறைவன் தருதிருமேனி தீண்டிடும் ஆதிசைவர்.
-தணிகைப்புராணம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எப்போதும் இனிய பிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம்மிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்.

தெரிந்துணரின்முப்போதும்செல்காலம்நிகழ்காலம்
வருங்காலம்ஆனவற்றின்வழிவழியேதிருத்தொண்டின்
விரும்பயஅர்ச்சனைகள்சிவவேதியர்க்கேஉரியனஅப்
பெருந்தகையார்குலப்பெருமையாம்புகழும்பெற்றியதோ

-பெரியபுராணம்

பெருமறையுடன் ஆகமம் முழுதுணர்ந்தார்
பிறங்குமாதேவியார்பாகர்
திருமுகம்ஓர் ஐந்தினும் இனிதுதித்தார்
திகழும் ஆன்மார்த்தம் ஒண்பரார்த்தம்
இருதிறங்களும் நற்பூசனை புரிவார்
இணையிலாச் சீலம்மிக்கு அமைந்தார்
பொருவரும் ஆதிசைவர்கள்.

.திருநாகைக்காரோணப்புராணம்

மறையுடன் ஆகமம் உணர்ந்த மாட்சியர்
பொறையொடு ஆன்மார்த்த பரார்த்தம் போற்றுவார்
அறைபெரும் புகழ்மிகும் ஆதிசைவர்

-திருப்பெருந்துறைப்புராணம்

இறைமுகத்து உதித்து எய்தும் ஆன்மார்த்தமும்
நிறை பரார்த்தமும் ஓம்பும் நெறியினார்
குறைவிலா மறை ஆகமக் கொள்கையார்
அறைபெரும் புகழ் ஆதிசைவர்.

-மண்ணிப்படிக்கரைப் புராணம்

அயன்கொள் சீர்த்தியும் பற்பட இறைவனால் அமைத்த
வியன்கொள் தெய்வ வேதாகமம்உணர்ந்தவர் மேன்மேல்
நயன்கொள் தங்கள் ஆன்மார்த்தமும் பரார்த்தமும் நயந்து
பயன்கொள் ஆதியஞ் சைவர்.

-திருக்குறுக்கைப் புராணம்

வெள்ளியங்கயிலை விமலனார் மொழிந்த
வேதமாகமம் முழுதுணர்ந்து
தெள்ளிய சமயம் முதல் ஒரு மூன்று
தீக்கையும் பெற்று அபிடேகம்
நள்ளியதிறத்து ஆன்மார்த்தம் ஒண்பரார்த்தம்
நயந்து பூசித்து இருவினையும்
தள்ளிய பொலிவில் களித்துவாழ் ஆதிசைவர்.

-திருக்குடந்தைப்புராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓதிமறை ஒரு நான்கும்இருமூன்றும்
எழுநான்கும்உணர்ந்து எல்லோர்க்கும்
பேதமற நிறைந்து உறையுஞ் சிவனே
எம்பெருமான் என்று உளத்துள் பேணி
சோதிதனைச் சின்மயனைப் பூம்பாவை
ஈசன் எனத் துலுயோன் அம்பொன்
பாதமலர் அர்ச்சிக்கும் சிவமறையோர். -திருமயிலைப்புராணம்

வைதிகசைவம் முற்றும் வரன்முறை வழாது போற்றிப்
பையரவு அணிந்த ஈசன் பரார்த்தஆன்மார்த்த பூசை
செய் திறத்து அதுலராய் முத்தீக்கையால் வினை தீர்த்தாளும்
ஐயராம் ஆதிசைவர். -திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

சரண்எனச் சார்ந்தார் தங்கள் தரத்தினை ஆய்ந்து நன்கு
முரண் அறுசமயம் ஆதி முறைபெறு தீக்கை ஆற்றி
அரண்எனும் பாசம் மாற்றி அரன்அருள் இன்பு காட்டும்
தரணியில் குரவர் ஆனார் சார்பு பல்சிறக்கும் அங்கண்
- திருவான்மியூர்ப் புராணம்

வேதமுதல் கலைகளோடு விரிந்திடு சிவாகமங்கள்
ஓதியே உண்மை தேறிஉயர் கயிலாய நாதர்
சோதிதன்மேனி தீண்டித் தொன்மை ஆராதனம்செய்
கோதிலா ஆதிசைவர். - இளைசைப்புராணம்

வேண்டி முப்பொழுதுந் திருமேனியைத்
தீண்டிப் பூசிக்கச் செய்தவம் செய்தவர்
காண் தகத்திகழ் கண்ணுதல் அன்னவர்
பூண்ட மாட்சிமை புல்லியர் தேர்வரோ - வைரவன் கோயிற் புராணம்

பூதி கண்மணிவாஞ்சையர் பரார்த்தமும் போற்றும்
நீதிவாழ்க்கையர் ஆகமநெறி முழுது உணர்ந்தோர்
காதி மும்மலம் கண்ணுதல் அடிநிழல் கலக்கும் ஆதிசைவர்
- சூரைமாநகர்ப்புராணம்

பூதி கண்மணி புனைந்தவர் மறையொடு பொற்ப
நீதி ஆகமம் உணர்ந்தவர் நிலவு இருதிறத்தும்
சோதி அர்ச்சனை செய்பவர் மும்மலத் துகள் தீர்
ஆதிசைவர் -வீரவனப் புராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனிலும் நாற்படி மேல்பறங்கி அருமறைக்கு உயிராய்ப்
பரவு சதாசிவ முகோற்பன சீலராய் உலகின்
மரபில் நால்சாதியார்க்கும் வயங்கு சிவதீக்காதி
தரும் அதிகாரப் பெருமைச் சிவத்துவிசர்

-அத்தீச்வரப்புராணம்

நிலவு அருவுருவ சதாசிவ சிருட்டி நிமலவேதியர்களாம் இவரை
அலர்வரு பரம சிருட்டி வேதியரே ஆதி நால் சாதியர் எவர்க்கும்
மலர் சிவதீக்கை முதற் சமக்கார வகையெலாம் புரிஅதிகார
நலனினால் அன்றோ குருக்கள் என்றுலகம் நயந்திடும் குறியென நவில்ப

-சூதவனப் புராணம்

எனைவர்க்கும் தம்மையோம்பல் இயற்கையில் கிடந்தது ஒன்றால்
அனைவர்க்கும் உய்தி செய்தி அரியவற்றரிதென்று ஓர்ந்து
நனைவர்க்கத்து ஈச பூசை நம்பொருட்டு இயற்றி வெய்ய
வினைவர்க்கம் நீத்த ஆதிசைவர்

- திருவெற்றியூர்ப் புராணம்

கொங்கலர் கடுக்கை வேணிக் குழகர் ஐம்முகத்தும் தோன்றித்
தங்கள் ஆன்மார்த்தத்தோடு பரார்த்த பூசனையும் போற்றிப்
பொங்கு வேதாகமங்கள் புரையறத் தெரிந்து நாளும்
துங்கமார் ஆதிசைவர். -கோயிலூர்ப் புராணம்

பூதி ஈந்திடும் உரிமையர் மனுக்களில் புரையில்
லாது மேதகும் ஐந்தெழுத்து அன்பருக்கு அருளும்
கோதிலாத சற்குருத்துவ இலக்கணம் கொண்டோர்
ஆதிசைவர் - அரிமழத்தல புராணம்

எண்ணில்வேதாகமங்கள் ஐயம் எய்தாமை ஆய்ந்து
மண்ணில் ஆன்மார்த்தத்தோடு பரார்த்தமும் வயங்க பூசித்து
ஒண்நிதி அருள்பேறு எய்தி ஒழிந்த மும்மலத்தினராம்
புண்ணிய ஆதிசைவர். -கண்டதேவிப்புராணம்

மறைகள் தேர்ந்து ஆகமத்தின் வகுத்த நாற்பாதம் சான்று
முறைமையால் சிவபரான் மெய் மூன்று போதினும் தீண்டுற்றே
நிறையன்பல் பூசையாற்றி நீடு அனல் ஓம்பத் தீக்கை
தறையின் மானுடர்க்கு ஈந்து இன்பல் தழைப்பரால் ஆதிசைவர்

- கரையேறவிட்டநகர்ப் புராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

பொதுமையும் சிறப்பும் என்னப் புராதனன் புகன்றவாய்மை
முதுமறை ஆகமங்கள் முழுதும் ஓர்ந்து என்றும் பூசை
பதியும் ஆன்மார்த்தத்தோடு பரார்த்தத்தும்புரீஇத்தலைக்கோர்
மதிபெறும் ஆதிசைவர்.

-காளையார்கோயிற்புராணம்

ஆதியிவ் இலிங்கம் தீண்டற்குஅருகர் அல்லாத வேத
வேதியர் முதலோர் இட்ட லிங்கத்தில் விதியால் அர்ச்சித்து
ஓதிய விரத நோற்க அர்ச்சனைக்கு உரியர்அல்லாச்
சாதியர் பொருள் நேர்ந்து ஆதிசைவரால் பூசை செய்தல்

-திருவிளையாடற்புராணம்,
இந்திரன்முடிமேல்வளை எறிந்தபடலம்

குறிப்பு: இத்தொகுப்பு முழுவதும் 1930ஆம் ஆண்டு, தேவகோட்டை, வெ.ஆ.தி.மா சிதம்பரச் செட்டியார் அவர்கள் தொகுத்து எழுதிவெளியிட்ட விசுவநாதர் கோயிற்றிருப்பணி முறையீடு என்ற நூலுள் ஆதிசைவ சிவாசாரிய மகிமைச் சருக்கம் என்ற தலைப்பில் அமைந்துள்ளவை ஆகும். ❀

அர்ச்சனாபோகமும் ஆச்சார்ய போகமும்

போகம் என்பதற்கு அனுபவித்தல் என்பது பொருள். ஆலயப் பணிகளில் ஈடுபட்டிருந்த அர்ச்சகர்கள் எவரையும் எதிர்பார்க்காது தன் பணியைச் செய்து கொண்டு வாழ்வதற்கு ஆதாரமாகஅளிக்கப்பட்ட நிலங்கள் அர்ச்சனை போகம் எனப்பட்டது. இந்த நிலங்களின் வருவாயை அர்ச்சகர் எடுத்துக் கொண்டு ஆலயப்பணியைச் செப்பவனே செய்து வந்தனர்.

இதுபோல் குருமார்களாக இருந்து சமுதாயத்தை வழிநடத்திச் சென்ற மேன்மை மிக்கவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் ஆச்சார்யபோகம் எனப்பட்டது.கல்வெட்டுகள் அர்ச்சனாபோகம், ஆச்சார்ய போகம் என்னும் சொற்களைப் பல இடங்களில் குறிக்கின்றன.

பூஜா மிராசு: மிராசு என்பதற்கு உரிமையாளர் என்பது பொருள். பெரிய அளவு நிலம்வைத்திருந்தவர்கள் மிராதாரர் என அழைத்தனர் இவ்வகையில் கோயில் சொத்துக்கள், நகைபொறுப்பு போன்றவை பலரிடம் இருந்தாலும் பூஜைசெய்யும் உரிமையைப் பெற்றிருந்தவர்கள்பூஜா மிராசுதாரர்கள் எனப்பட்டனர். மிராசு உருதுச் என்பது சொல்லாகும். ❀

சிந்தனைக்கு....

கர்நாடகத்திலுள்ள தலம் தர்மஸ்தலா. இங்கு கோயில் கொண்டிருப்பவர் மஞ்சுநாதர் என்னும் சிவபெருமான். இவரை வைணவரான மாத்வர்கள் பூசிக்கின்றனர்.

இக்கோயிலை நிர்வாகம் செய்து வருபவர் ஜைனசமுதாயத்தை சோந்த ஹெக்டே குடும்பத்தினர். இங்கு சிவபெருமான் எழுந்தருளுவதற்கு முன்பே வந்தவர்கள் காலராகு குமாரசாமி, கல்லேரிதாய்,கன்யாகுமாரி, என்னும் தர்மதேவதைகளாவர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளமேகம் போற்றிய திருப்பனந்தாள் பட்டன்

அன்னை அகிலாண்டேசுவரியின் அருள் பெற்று ஆசுகவியானவர் கவிகாள மேகப் புலவர். இவர் ஏராளமான தனிப் பாடல் களைப் பாடியுள்ளார். வாழ்வில் சந்தித்தவர்களைப் போற்றியும், வாழ்த்தியும், வசைபாடியும் அனேக பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் பெரும்பாலான பாடல்களைத் தனிபாடல் திரட்டில் பதிப்பித்துள்ளனர்.

அவர் வாழ்த்திப் பாடிய பாடல்களில் ஒன்று திருப்பனந்தாள் பட்டனைப்பற்றிப் பாடியதாகும். இவர் திருபனந்தாள் ஆலயத்தில் அருச்சகப் பணியாற்றி வந்தவராவர். ஒரு காலத்தில் சோழவளநாட்டில் எங்கும் பஞ்சம் நிலவியது. உண்பதற்கு உணவும் தண்ணீரும் கிடைப்பது அரிபொருளாகி விட்டது. இந்நிலையில் காளமேகப்புலவர் திருப்பனந்தாளுக்கு வந்தார். வழிநடைப் பயண களைப்பும் பசியும் தாகமும் வாட்டி வதைத்தது. அவர் பெருந்துன்பம் அடைந்தார்.

அந்நிலையில் திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் ஆலய அர்ச்சகருள் ஒருவரான பட்டர் ஒருவர் அவரைக் கண்டார். கோயில் பிரசாதங்களை வழங்கி அவரது பசியைப் போக்கி துன்பத்தை நீக்கினார். அதனால் மகிழ்ந்த காளமேகப்புலவர் அவரை வாழ்த்திப் பாடினார் அப்பாடல்.

விண்ணீரும் வற்றிப் புவிநீரும்
வற்றி வருந்தி
கண்ணீரும் வற்றிப் புலவர்
தவிக்கின்ற காலத்திலே
உண்ணீர் உண்ணீர் என்று
உபசாரம் பேசி உண்மையுடன்
தண்ணீரும் சோறும் தருவான்
திருப்பனந்தாள் பட்டனே

என்பதாகும். மழையும் பொய்த்து கிணறு,குளம் போன்ற நீர்நிலைகளும் வற்றி பசியாலும் துன்பத்தாலும் வருந்தி அழுவதால் தண்ணீரும் வற்றி புலவர் தவிக்கின்ற காலத்திலே நன்றாகச் சாப்படுங்கள் சாப்பிடுங்கள் என்று உபசார வார்த்தைகளை உண்மையாகவே சொல்லி தண்ணீரையும், சோறும் தருவான் திருப்பனந்தாள் வாழும் பட்டனே என்பது இதன் பொருளாகும்.

(சிலர் பட்டர் வடிவில் வந்து சிவ பெருமானே புலவருக்குச் சோறளித்து உபசாரம் செய்தான் என்கின்றனர். இதைக் குறிக்கும் வகையில் அன்ன பாத்திரம், சட்டுவத்துடன் கூடிய பட்டனின் திருவுருவம் அழகிய தூண் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது.)

(அக்காலத்தில் கோயில் பட்டர்கள் கோயில் காணி உடையவர்களாய் சிறப்புடன் உயர்நிலையில் இருந்ததோடு மற்றவர்களை ஆதரிப்பவர்களாய் இருந்ததையும் இப்பாடல் குறிக்கின்றது)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமமும் சிற்ப நூல்களும்

சிவாச்சாரியர்களுக்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது ஆகமநூல்களும் அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டு பூஜா பத்ததி நூல்களுமேயாகும்.

ஆகம நூல்கள் தெய்வங்களின் வண்ணம் வடிவம் வனப்பு போன்றவற்றை தியான சுலோகங்களாகக் கூறுகின்றன. அவற்றின் அடிப்படையிலேயே சிற்ப நூல்களில் தியானங்கள் சொல்லப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே வழிபடுவதற்குரிய தெய்வ வடிவங்களும் உருவாக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட உருவாக்கும் தெய்வங்களுக்கான பரிவாரங்கள் ஆலயங்கள் போன்றவையும் ஆகமநூல் வழிவந்த சிற்ப நூல்களின் அடிப் படையிலேயே செய்யப்படுகின்றன.

ஆகம சதஸ்கள்

சதஸ் என்பதற்கு அறிஞர்கள் கூடி தமது கருத்துக்களை விவாதிக்கும் சந்தேகங்களுக்கு விடைகூறி விளக்கும் நிகழ்ச்சிக்குப் பெயராகும். இவ்வகையில் அறிஞர்கள் ஆகம நூல்களில் உள்ள நுண்கருத்துக்களை விளக்கி விரிவாகச் சொல்லும் நிகழ்வாகவும் மாணவர் கள் மற்றும்அடியார்களுக்கு ஆகமத்திலும் வழிபாட்டு நடைமுறையிலும் உள்ள சந்தேகங் களைக் கேட்டுவிளக்கம் சொல்லும் நிகழ்வாகவும் ஆகம சதஸ்கள் நடத்தப்படுகின்றன.

பெரிய கும்பாபிஷேக விழாக்கள், நவராத்திரி போன்ற சமயங்களில் பெரிய அளவிலான ஆகம சதஸ் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இப்போதும் இவை எளிய நிலையில் நடைபெறுகின்றன.

பிள்ளைப் பருவத்தில் விளையாட்டின்போதே....

குருக்கள்மார் இல்லக் குழந்தைகள் பிள்ளைப் பருவத்தில் விளையாட்டின்போதே தெய்வத் திருவுருவங்களை வைத்து விளையாடுகின்றனர். அந்த திருமேனிகளுக்கு அபிஷேகம் அலங்காரம் உலாவரச் செய்தல் போன்றவற்றை செய்து விளையாடுகின்றனர்.

பெரியவர்களும் அதற்கு ஊக்கம் கொடுக்கின்றனர். இதனால் பிள்ளைப் பருவத்திலேயே தெய்வ நம்பிக்கையும் வழிபாட்டில் ஈடுபாடும் வந்து விடுகிறது. கடந்த சிலபத்தாண்டுகளில் புதியகல்வி முறைகளில் இத்தகைய விளையாட்டு அருகியுள்ளது. ஆனாலும் பல இடங்களில் இவ்விளையாட்டை சிறுவர்களிடம் காணமுடிகிறது. வாழ்க்கையோடு இயைந்த விளையாட்டாகவே இது இருக்கிறது.

(திருவல்லிகேணி பார்த்தசாரதி கோயில் விழாவின் போது வைணவச் சிறுவர்கள் பெரிய பெருமாள் பவனி வரும் வாகனத்தைப் போலவே சிறிய அளவில் செய்த வாகனங்களில் தமது விளையாட்டுப் பெருமாளை அலங்கரித்து பெரிய பெருமாளின் பின்னே உலாவரச் செய்வதைக் காணலாம்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியபுராணத்தில் சிவாச்சாரியார் மரபில் வந்தவர்கள்

பெரிய புராணத்தில் சிவாச்சார்யர்களின் பெருமை பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. பெரிய புராண காப்பிய நாயகனாக சுந்தரர் ஆதிசைவ மரபில் வந்தவர் அவருடைய தாயார் இசை ஞானியாகும். தந்தை சடையனாரும் பெரிதும் போற்றப் பட்டுள்ளனர்.

சுந்தரரைச் சொல்லும்போது,

"மாதொரு பாகனார்க்குவழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்தில் தோன்றி" என்றும்,

இவருக்கு மணம் பேசிய பெண்ணைச் சொல்லும்போது"சைவ அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக்கு ஏற்ப" என்று அவளும் சிவாச்சாரியார் மரபில் வந்ததைக் குறிக்கின்றார்.

கண்ணப்பநாயனார் வரலாற்றில் வரும் சிவகோசரியார் தபோவனத்தில் முனிவராக வாழ்ந்து வந்தாலும் அவர் ஆகம வழியில் பூசை செய்யும் சிவாச்சாரியார் என்பதை

"எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைத் கேற்பக் கொய்த மலரும்புனலும் . . . தவமுடைய முனிவர் சிவகோசரியார்" என்றார் சிவகோசம் என்பதே ஆகம நூலைக் குறிக்கும் பெயர் என்பது இங்கே சிந்திக்க வேண்டியதாகும்.

திருநீலநக்கர் ஆகம வழியே பூசை செய்யும் அந்தணர் என்பதை" மெய்த்த ஆகம வழியே வேதகாரணரை நித்தம் பூசனை புரிந்தெழு நியமும் செய்தே" என்னும் தொடரால் அறிகிறோம்

சிவாச்சாரியாரை வரவேற்றலும் கௌரவித்தலும்

கொடியேற்றம் முதலிய பெருந்திருவிழாக்களின்போதும், குடமுழுக்கு போன்று பெரிய நிகழ்வுகளின் போதும்,சிவாச்சார்யர்களின் தலைமைக் குருவையும், பிரதான ஆச்சார்யரையும் பல்லக்கில் அமர்த்தி இல்லத்தில் இருந்துஆலயத்திற்கு அழைத்து வரும் வழக்கம் இருந்தது.

விழாக்கள் நிறைவு பெற்றபின்னர் முன்போலவே அவர்களைப் பல்லக்கில் அமர்த்தி மேளதாளத்துடன் வீட்டிற்குச் சென்று விட்டுவிட்டு வருவதும் நடைபெற்றது.

அண்மைக்காலம் வரை சிதம்பரத்தில் அன்றைய முறைக்காரரை காலையில் தீவட்டி தாழங்குடை கைவிளக்கு ஆகியவற்றுடன் சென்று வீட்டில் இருந்து அழைத்து வருவதும், இரவு பூசை முடிந்த தும் பழையபடியே வீட்டிற்குச் சென்று விட்டு வருவதும் நடைபெற்று வந்துள்ளது.

பின்னாளில் பல்லக்கு பரிவாரம் இல்லாவிட்டாலும் மேளதாளத்துடன் குடை பிடித்து வீட்டில் விட்டு விட்டு வரும் வழக்கம் இருந்து வருகிறது.

ஞானேஸ்வரி உடனாய சிவாச்சார்ய மகாதேவர் அருளினால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இணைப்புச்செய்திகள்

மாமறைவழி வந்த அருச்சகர்கள்

பாரததேசத்தின் சமயங்கள் யாவும் வேத நூல்களின் வழியேயும் ஆகமங்களின் வழியேயும் செயல்படுகின்றன. வேதங்களில் இந்திரன் முதலிய அனேக தெய்வங்களை நோக்கிச் செய்யப்படும் வேள்விகள் சிறப்புடன் பேசப்படுகின்றன. அதனால் வேதநெறி நிற்கும் வைதிகப் பிராமணர்கள் வேள்விகள் செய்வதை பெரிதும் போற்றுகின்றனர். பலவிதமான வேள்விகள் சிறப்புடன் செய்யப்பட்டு வருகின்றன. வேதங்களை கூட்டமாக இருந்து ஓதுகின்ற வேதபாராயணங்களைத் தனிச்சிறப்புடன் போற்றுகின்றனர்.

ஆகமங்கள் சிவபெருமானைத் தனிப்பெரும் தலைவனாகக் கொண்டவை. அவை அவனாலேயே சொல்லப்பட்டு உலகிற்கு வந்ததாகும். ஆகமங்களில் சிவபெருமானை அபஷேகம் செய்து அலங்கரித்து மந்திரங்கள் ஓதி வழிபடுவதே சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

ஆகம வழிகோயில்களில் வேத மந்திரங்கள் ஓதப்பட்டாலும் அவை ஆகம நெறிகளுக்கு அங்கமாகவே இருக்கின்றன. வேதவழி பிராமணர்கள் ஆதியில் சிவாலய பூஜைகளைப் மேற்கொள்ளவில்லை. பின்னாளில் அவர்கள் தனக்கென கோயில்களை அமைத்துக் கொண்டு அதில் சிவவழிபாடுகளைச் செய்துவருகின்றனர். அதுபற்றிய செய்திகளைப் பார்க்கலாம்.

ஆகமவழி நின்ற அந்தணர்கள் சிவ மறையோர்,சிவாச்சாரியர்,ஆதிசைவர் எனப் பட்டனர். வேதவழி வந்த அந்தணர்கள் வேதியர், திருமறையோர், மறை அந்தணர் முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

வேத வழிபட்ட அந்தணர்கள் பரார்த்த சிவாலய வழிபாட்டை மேற்கொண்டதில்லை என்றாலும், பின்நாளில் அவர்கள் தமக்கெனதனியே சிவாலயங்களை அமைத் திருந் தனர். அவை ஆகமங்கள் கூறும் பரி வாரங் களைக் கொண்டிராமல் சிவபெருமானை மட்டுமே கொண்டதாக இருந்தன என்பர்.

திருநாவுக்கரசர் கூறும் கோயில்களின் வரிசையில் "இருக்கோதி மறையவர்கள் ஏத்தும் இளங்கோயில்" என்பதைக் காண்கிறோம். பின்னாளில் உரையாசிரியர்கள் இளங்கோயிலைப் பாலாலயம் என எழுதினர். பாலாலயம் என்பது திருப்பணி செய்யும் காலங்களில் தற்காலிகமாக அமைக்கப்படுவது என்பதால் அது தனிக் கோயில் ஆகாது.மேலும், "இருக்கோதி மறையவர்கள் ஏத்தும்" என்ற அடைமொழி இளங் கோயிலுக்கு அளிக்கப்பட்டிருப்பதால், அவை மறைவழி அந்தணர்கள் வழிபட்ட கோயில்கள் என்றே கொள்ளவேண்டும்.

இத்தகு இளங்கோயில்கள் பெரிய ஆலயங்களின் பிராகாரங்களிலேயே அமைந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். அயவந்தியில் நீலநக்கர் வழிபட்ட ஆலயம் திருப்புகலூரில் முருகநாயனார் மலர்ப்பணி செய்து வழிபட்ட வர்த்தமானீச்சரம் முதலியவை இத்தகு ஆலயங்களே ஆகும்.

இவை மூலமூர்த்திகளாக இல்லாமல் துணைச் சந்நிதிகளாக இருப்பது நோக்கத் தக்கதாகும். மறையவர்கள் தமது ஆத்மார்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

த்த பூஜையை இளங்கோயிலிலுள்ள மூர்த்திக்குச் செய்துவழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

இளங்கோயில் என்பது பரிவாரங்கள் ஏதுமின்றி சிவபெருமான் மட்டும் எழுந்தருளி இருந்து பூசை கொள்ளுமிடம். இதில் சிவாச்சாரியார்கள் பூஜை செய்வதில்லை. ஆகம வரியான கட்டுமானங்கள் தெய்வத் திருவுருவ நிர்மாணங்கள் போன்றவை இருந்தாலும் பூஜை செய்யும் அருச்சகர்கள் வேத வழிப்பட்ட அந்தணர்களாவர்.

இப்போது காலமாற்றத்தால் இவர்களது வழிபாட்டில் பரிவாரங்களுடன் சிவபெருமான் பூசை செய்யப்படுகிறார்.

தொடக்கத்தில் வேத வழிப்பட்ட பிராமணர்கள் பரார்த்த பூஜைகள் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றாலும் சுவேதர் என்பவர் வேத நெறியில் சிவபூசை செய்யும் வழக்கத்தை உருவாக்கினர்.

சென்னையில் பல கோயில்கள் வேத வழிப் பிராமணர்களால் பூசிக்கப்படுவதாகவும் அவர்களுக்கு உரிமையானதாகவும் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, பெசன்ட் நகர் இரத்தின கிரீசர் கோயிலைச் சொல்லலாம். இதில் வேதவழிபட்ட அந்தணர்கள் வேத வழியிலும் புராணங்களிலும்உள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்ட மந்திரங்களால் வழிபாடு செய்கின்றனர்.

இவ்வகையில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இப்போது வேத வழிபட்ட அந்தணர்களால் சிறப்புடன் பூஜை செய்யப்பட்டு வருகின்றது.இதனை தொடர்ச்சியாக விநாயகர் முருகன் அம்பிகை நாட்டுப்புற தெய்வங்கள் ஆலயங்களிலும் வேத வழிபட்ட அந்தணர்கள் பூஜைகளைச் செய்து வருகின்றனர். ❀

மலையாள அருச்சகர்கள்

தமிழகத்தின் தென்மேற்குப் பகுதியாக இருப்பது மலையாள தேசமாகும். இது மேற்குத் தொடர்ச்சி மலையும் அரபிக் கடலுக்கும் இடையேயுள்ள பூமியாகும். இதனை பரசுராம க்ஷேத்திரம் என்று புராணங்கள் குறிக்கின்றன.

இங்கு பரசுராமரால் 108 சிவாலயங்களும் 108 பகவதி ஆலயங்களும் அனேக சிறுதெய்வ ஆலயங்களும் அமைக்கப்பட்டன. இங்கு பூஜை செய்து வந்த நம்பூதிரிகள் சோழ பாண்டிய தேசங்களுக்கும் வந்து பூசைகளை மேற்கொண்டனர். ஆதியில் பரசுராமரே மலையாள அந்தணர்களை தமிழகத்தில் குடியேற்றி பூஜைசெய்யும் உரிமையும் காணியும் கொடுத்தார் என்பதையும் அறிகிறோம்.

இப்போது திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் மூலஸ்தானத்தையும் அவருடைய உலாத் திருமேனியான ஜெயந்தி நாதரையும் மலையாள அந்தணர் பூசை செய்து வருகின்றனர்.

சென்னை திருஒற்றியூர் தியாகராஜசுவாமி ஆலயத்தில் கருவறையில் உள்ள படம்பக்க நாதரையும் தியாகராஜர் முதலான முதன்னைச் சந்நிதிகளையும் சுற்றுக்கோயில்களையும் சிவாச்சாரியார்கள் பூசை செய்து வர இத்தலத்திலுள்ள வடிவுடை அம்மன் சந்நிதியை நம்பூதிரிகள் பூசிக்கின்றனர்.

இன்னும் அனேக ஆலயங்களில் சிவாச்சாரியார்களுடன் கேரள அந்தணர்களும் பூசை செய்கின்றனர். ❀

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த திருக்கூட்டத்தினர்

சிவாலயப் பணிகளில் எண்ணிக்கையின் பெயரால் அமைந்த அந்தணர் குழுக்களை இங்கே காணலாம். அவர்கள் எல்லோரும் வேதவழிப்பட்ட பிராமணர்கள் ஆவர். சில தலங்களில் இவர்கள் ஆகம வழி பூசை முறைகளை வகுத்துக் கொண்டும், பூசைகளை நடத்தி வருகின்றனர்.

அவர்களைப் புராணங்கள் சிறப்புடன் போற்றுகின்றன. அவர்களே கோயிலுக்கு உரிமை உடையவர்கள் ஆவர். அவர்களைக் காணியாளர் என்பர். அவர்கள் ஆலய வழிபாட்டைத் திறம்பட நடத்தி வருகின்றனர். இவர்களைப் பற்றி இங்கே காணலாம்.

ஆலயங்கள் பெரியதானபோதும் பல சந்நிதிகளைக் கொண்டு விரிவடைந்த போதும் சிறப்புடன்விளங்கும் அந்தணர்களைப் பெருங் கூட்டமாக குடியேற்றி அவர்களிடம் நித்திய பூசைகளும் விழாக்களும் நடத்தும் பொறுப்பு அளிக்கப்பட்டது. அவ்வாறு அமர்த்தப்பட்ட பெருமக்கள் தாம் வந்த எண்ணிக்கை அடிப்படையில் பெயரிட்டு அழைத்துக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக, தில்லை மூவாயிரவர், வீழிமிழலை ஐந்நூற்றுவர், ஆவடுதுறை ஆயிரவர் என்று அழைக்கப்படுவதைக் காணலாம். இவர்களைச் சிவபெருமானே தோற்றுவித்து காணி வழங்கினார் என்றும் கூறுகின்றனர். அவர்கள் சிவபெருமானைத் தமது கூட்டத்தினருள் ஒருவராகக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக, தில்லை மூவாயிர வர் நடராசரைத் தம்முள் ஒருவராகவே கொண்டுள்ளனர். தமது சபையில் ஒருவராக விளங்குவதாகக் குறிக்கும் வகையில் ஒரு விளக்கினை ஏற்றி வைத்துச் சபையினை நடத்துகின் றனர்.

இனி இக்கூட்டத்தினர் பற்றிய செய்திகள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

தில்லைவாழ் அந்தணர் திருமேனிகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கிப் பாடுவதால் அறுபத்துமூவர் வரிசையில்முதல் நாயன்மாராக தில்லை வாழ் அந்தணர் தம் திருவுருவம் எழுந்தருளி வைக்கப்படுகிறது. அதில் அவர் வலது கையில் வேள்விக் கரண்டியும் இடது கரத்தில் கெண்டியும் கொண்டவராக அமைக்கப்பட்டிருக்கிறார். முன்னாளில் பட்டுக் கிரீடம் அணிந்து பூசிக்கும் வழக்கம் இருந்தது என்பதால் இத்திருவுருவத்தில் தலைமுடியை கிரீடம் போல் எடுத்துக் கட்டியுள்ளனர்.

திருநின்றிவூர் முந்நூற்றுவர்

வைத்தீசுவரன் கோயிலுக்கு அருகிலுள்ள திருத்தலம் நின்றியூர். இந்நாளில் அது திரிநின்றவூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குப் பரசுராமர் வழிபட்டுப்பேறு பெற்றார். அவர் முந்நூறு வேதியர்களை அங்கு குடியமர்த்தி அவர்களுக்கு முந்நூற்று அறுபது வேலி நிலத்தையும் அளித்து, அவர்களையும், நிலங்களையும் பெருமான் கையில் நீர்வார்த்து அளித்தான். அதுமுதல் அக்கூட்டத்தினர் அங்கு வழிபாடு செய்து வந்தனர். இதனைச் சுந்தரர் அருளிய.

மொய்த்த சீர் முந்நூற்று அறுபது வேலி
மூன்று நூறு வேதியரொடு நுனக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி
ஓங்கு நின்றியூர் என்று உனக் களிப்பப்
பத்தி செய்த அப் பரசுரா மற்குப்
பாதங் காட்டிய நீதிகண்டு அடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்குஞ்
செல்வத் தென்திரு நின்றியூரானே. 3

என்னும்தேவாரத்தால் அறிகிறோம்.

முந்நூற்று அறுபது அந்தணர்கள்

திருப்பாதிரிப்புலியூர் ஆலயத்தில் முந்நூற்று அறுபது அந்தணர்கள் வழிபட்டு வந்தனர் என்ற குறிப்பை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறித்துள்ளார். இவர்கள் தினமும் ஒருவராகச் சிவபெருமானைப் பூசித்து வந்ததாகக் கூறுகின்றனர். இச்செய்தி திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது.

சீர்காழி நானூற்றுவர்

திருஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழியில் பூசித்துவரும் அருச்சகர்கள் நானூற்றுவர் எனப்பட்டனர்.இதனை நம்பியாண்டார் நம்பிகள் பூமன்னும்நான்முகனே அன்னசீர் நானூற் றுவர் மறையோர் என்றுகுறித்துள்ளார்.

திட்டைக்குடி நானூற்றுவர்

வெள்ளாற்றின் கரையிலுள்ள திட்டக்குடியில் வீற்றிருக்கும் பெருமான் வசிட்டேசுவரர் என அழைக்கப்படுகிறார். இவரை வசிட்ட முனிவர் அமைத்து வழிபட்டதுடன் இவருடைய வழிபாட்டைச் செம்மையாக நடத்துவதற்கெனக் கங்கா தீரத்திலிருந்து நானூறு அந்தணர்களை அங்குக் குடியேற்றினர். சிவபெருமான் தானும் அவர்களில் ஒருவராக உருவம் தாங்கி வந்து சிவபூசை செய்வதாகக் கூறப்படுகிறது.

அவர்களுக்கு நிலம், வீடு ஆகியவற்றை அளித்தபோது அவரும் தமக்குரிய பாகத்தைப் பெற்றுக் கொண்டார் என்று கூறுவர். அப்படிக் கொண்டதால் சிவபெருமானுக்கு நானூற்றொருவர் என்பது பெயராயிற்று. அவருக்கு ஒதுக்கிய நிலத்தில் அவருக்கென பரிவாரங்களுடன் சிவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை நானூற்றொருவர் கோயில் என்று அழைக்கின்றனர்.

திட்டைக்குடி புராணம் அவருக்குத் தனி வீடு ஒதுக்கப்பட்டதையும், பின்னாளில் அங்கு நானூற்று ஒருவர் என்னும் சிவாலயம் அமைந்ததையும் குறிப்பிடுகின்றது.

திருவோத்தூர் நானூற்றுவர்

வடார்க்காடு மாவட்டம் திருவோத்தூர் (திருவத்திபுரம் செய்யாறு) வேதபுரீசுவரர் ஆலயத்துச் சிவப்பிராமணர்கள் நானூற்றுவர் என்றழைக்கப்பட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இங்குள்ள கல்வெட்டு, நானூற்றொரு ஆளுடையார் திருவோத்தூருடையார் என்று பெருமானைக் குறிக்கிறது. இதனைக் கொண்டு இங்கிருந்த சிவவேதியர்கள் நானூற்றுவர் என்று அழைக்கப்பட்டதையும் அவருடைய ஒருவராகப் பெருமான் விளங்கியதையும் அறிகிறோம்.

திருவிடைக்கழி ஐந்நூற்றுவர்

திருவிடைக்கழி திருவிசைப்பா அருளப்பட்ட தலமாகும். இங்கு முருகனும் சிவபெருமானும் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்த கருவறையில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர். இவர்களுக்கு பூசை செய்து வந்தவர்கள் ஐந்நூற்றுவர் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இங்கு ஆலயத்திற்கு நேர்எதிரில் அமைந்துள்ள ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகருக்கு ஐந்நூற்றுப் பிள்ளையார் என்ற திருநாமம் வழங்குகிறது. இப்பிள்ளையார் அந்தணர்களுடன் ஐந்நூற்றில் ஒருவராக இருந்து சிவபெருமானைப் பூசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாவடுதுறை ஆயிரவர்

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் கோயில் திருவாவடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமானதாகும். இங்கு ஆயிரம் அந்த ணர்கள் பூசித்து வந்தனர் என்பதைத் திரு விசைப்பாவின் மூலம் அறிகிறோம். பொய் யாத வேதியர் சாந்தை மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர்மிகு காவிரிக் கரை மேவிய ஐயா திருவாவடுதுறை அமுதே என்னும் தொடரால் அறிய முடி கிறது.

ஆக்கூர் ஆயிரவர்

மயிலாடுதுறையிலிருந்து- திருக் கடை யூர் செல்லும் சாலையில் ஆக்கூர் என்னும் தலம் உள்ளது. இங்குள்ள ஆலயம் தான் தோன்றீசுவரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஆயிரம் அந்தணர்கள் வழிபாடு செய்து வந்தனர் என்று கூறப்படுகிறது. இங் குள்ள ஆலயத்தில் ஆயிரத்திலொருவர் என்னும் மூர்த்தியாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார் (இவர் எழுந்தருளிய தற்கு வேறு வரலாறும் கூறப்படுகிறது)

திருவண்ணாமலை - ஐயாயிரவர்

திருவண்ணாமலையில் அண்ணா மலையாரைப் பூசிப்பவர்கள் ஐயாயிரவர் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறித்துள்ளார்.

முன்னூற்றுவர் திருச்சேய்ஞலூர்

சண்டேசுவர நாயனார் அவதரித்துச் சிவனருள் பெற்ற திருத்தலம் சேய்ஞலூர். இத்தலத்திலுள்ள சத்தியகிரீசுவரர் ஆலயம் மிகப் பழைமையானது. இத்தலத்தில் வேறொரு சிவன் கோயிலும் உள்ளது. அது ஐந்நூற்றுவர் என்னும் பிராமணர்களால் பூசிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வூரில் அரிச்சந்திரன் யாகம் செய்தபோது, ஐநூறு பேரைக் குடியேற்றி பூமிதானம், வீடு தானம், சொர்ண தானம் முதலியவற்றைச் செய்ததாகக் கூறுகின்றனர்.

திருவீழிமிழலை ஐநூற்றுவர்

திருவீழிமிழலையைப் போற்றிப் பரவும் வேதியர்கள் ஐநூற்றுவர் என்று புராணம் கூறுகிறது. இவர்களை வீழிப்பிரா மணர் என்று இப்போது அழைக்கின்றனர். திருவிசைப்பாவில் ஐநூ(ற்று) அந்தணர் ஏத் தும் (எண்ணில் பல்கோடி குணத்தர்) ஏர்வீழி என்று குறிக்கப்பட்டுள்ளது. இவர் களில் பெரும்பான்மையானவர்கள் விஷ்ணு புரம், தேதியூர் முதலான ஊர்களில் வசிக்கின் றனர்.விழாக்காலங்களில்சிறப்புடன் சேவை புரிகின்றனர்.

காலப்போக்கில் சில கோயில் பூசை களைச் சிவாச்சாரியார்களே முழுவதுமாக ஏற்றுக்கொண்டு நாட்பூசைகளைச் செய்து வர, விழா நாட்களில் மட்டும் வேதவழி பட்ட அந்தணக் காணியாளர்கள் அபிஷேக அலங்காரங்களைச் செய்து வழிபடுகின் றனர்.

எடுத்துக் காட்டாக, திருவீழிமிழலை யில் வீழிநாதரைச் சிவாச்சாரியாரும் பிற சந்நிதிகளை ஐந்நூற்று வரும் பூசித்து வந்தனர். காலப்போக்கில் இப்போது எல்லா சந்நிதிகளையுமே சிவாச்சாரியார்கள் பூசிக்கத் தொடங்கிவிட்டனர்.

திருவிழாக் காலங்களில் மட்டும் ஐநூற் றுவரான வீழி யாளர்கள் வந்து மாப்பிள்ளை சாமிக்கு அபிஷேகம் செய்வதுடன் ஸ்ரீபாத மும் தாங்குகின்றனர்.இப்பகுதியில் இக்கூட் டத் தினரை இன்றும் காணலாம்.

காலப் போக்கில் ஏற்பட்ட மாறுதல் களால் வைதீகச் சிவாலயங்கள் பெரியதாக ஆக்கப்பட்டதுடன் அவற் றில் சிவாச்சாரி யார்களைப் பூசைக்கு அமர்த் தப்பட்டுள்ள தைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு பலவகையான சிறப்புகளைப் பெற்றிருக்கும். பல்வேறு எண்ணிக்கையின் பெயரால் அமைந்த வேதியர்களின் குழுக்கள் ஆலயங்களில் அருச்சகர்களாகப் பணி புரிந்து வருவதை அறிய முடிகிறது.

சில தலங்களில் அவர்களுடன் சிவாசாரியாரும் பணியாற்றுகின்றனர். திருச்செந்தூர், திருப்பெருந்துறை முதலிய தலங்களில் காணியார்களான வேதியர்களுடன் சிவாசாரியாரும் பணிபுரிவதையும் காணலாம். வேதியர்களின் உரிமைக் கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் இருந்தால் அதை ஆதிசைவர்களைக் கொண்டு பூசிக்கும் வழக்கமும் உள்ளது.

திருச்செந்தூர், திருப்பெருந்துறை முதலிய தலங்களில் அக்குழுவினர் முதன்மை பெற்றிருந்த போதிலும் அங்கு ஆதிசைவ சிவாச்சாரியார்களும் பூசையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ❀

திருப்பெருந்துறை மூந்நூற்றுவர்

இறைவன் மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்ட திருத்தலம் திருப்பெருந் துறை என்னும் ஆவுடையார் கோயிலாகும். இங்கு இறைவன் ஓங்கார வடிவில் பீடத்தில் அருவத் திருமேனியாக வீற்றிருக்கின் றான். அவரையும் அவருக்கு நிழல் பரப்பும் குருந்த மரத்தின் பிரதிவடிவத் தையும், இறைவனின் திருவடிகளாகக் காட்சியளிக்கும் அருளன்னை யோகாம்பிகையையும் பூசிக்கும் மறையோர்கள் முந்நூற்றுவர் என்று அழைக்கப்படுகின்றனர். வடமொழியில் இவர்களைத் திரிசதர் என்பர்.

ஆதியில் பிரம்மனுக்கு, இங்கு குருந்த மரமாக இறைவன் ஓங்கார வடிவில் காட்சியளித்ததுடன் படைப்பாற்றலையும் வழங்கினான். பிரமன் நெடுநாட்கள் சத்திய லோகத் திலிருந்து தினமும் இங்கு வந்து அம்மரத்தை ஆராதித்து வந்தான். பின்னர், பூசை தடைப்படாதிருக்க ஒரு வேள்வியியற்றி அதிலிருந்து **ரௌட்சாயணர்** என்ற முனிவரைத் தோற்றுவித்தான். பிறகு மேலும் ஒரு வேள்வியைச் செய்து பதினொரு துணைவர்களைத் தோன்றச் செய்து அவருக்கு அளித்தான். அந்த இனம் பெருகி முன்னூற்றுவர் ஆனது. அவர்களின் வழிவந்தவர்களே மேற்குறித்த மூன்று சந்நிதிகளிலும் இப்போதும் பூசித்து வருகின்றனர். அவர்களின் பெருமைகளைத் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது. அவர்களின் குமாரர்களுக்கு இறைவன் ஆசிரியராக இருந்து வேதங்களைப் போதித்து வந்தான் என்று கூறுகின்றனர்.

அவர்கள் ஆதிசிவனிடமிருந்து பஞ்சாட்சர உபதேசத்தைப் பெற்று ஓராண் (ஒருவருக்கு மட்டுமே அவர் வழியாக வருதல்) வழியாக அதைப் போற்றி வருகின்றனர். மாணிக்கவாசகருக்குப் பெருமான் உபதேசித்து ஆட்கொண்டார் என்பர். அதையொட்டி திருப்பெருந்துறையில் (ஆவுடையார் கோயிலில்) நடைபெறும் உபதேசக் காட்சி விழாவில் மாணிக்கவாசகர் திருச்செவி யில், ஓதி உபதேசம் செய்யும் ஐதீகத்தின் போது மேற்படி உபதேசத்தைப் பெற்று வழிவழியாகக் காத்துவரும் அந்தணர் அந்த மூலமந்திரத்தை இறைவன் பிரதிநிதியாக மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்கிறார். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடநாட்டுச் சிவாச்சாரியார்கள்

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

சங்க காலத்திற்கு முன்பாக, ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பே சமணர், பௌத்தர் முதலானோர் தென்னாட்டிற்கு வந்து மடம் அமைத்துச் சமயத்தைப் பரப்பி வந்ததுடன் தமிழ்ப்பணியும் செய்துவந்தனர். அதே கால கட்டத்தில் வடநாட்டுச் சைவர்களும் தென்னாட்டிற்கு வந்து சைவத்தைப் பரப்பினர்.

இவர்கள் திருமடங்கள் அமைத்து மக்கள் பணி செய்து தனிச்சிறப்புப் பெற்றனர். காலப்போக்கில் அரசர்களின் ஆதரவைப் பெற்றுப்பெரும்செல்வாக்கு அடைந்தனர். இம்மடங்களில் தீக்ஷை பெற்றுத் தொண்டு செய்து வந்தவர்களே திருக்கோயில் பணியாளர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் சிவர் என்றும் சிவாச்சாரியர்கள் என்றும் தம்மை குறித்துக் கொண்டனர்.

மேலும், சோழ மன்னர்கள் கங்கை வரை படையெடுத்துச் சென்ற காலங்களில் அங்கிருந்து லட்சம் பேரை அழைத்து வந்து குடியமர்த்தினர். அவர்களைத் தொடர்ந்து பலர் தென்னாட்டிற்கு வந்து குடியேறினர். இவர்கள் குடியேற்றத்தைப் பல கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இராஜேந்திர சோழனின் ஒரு கல்வெட்டு ஆர்ய தேசம் மத்திய தேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆசார்யர்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்களையும் குறிப்பிடுகின்றது.

இவர்கள் வந்த காலத்தில் தமிழ் நாட்டில் பூசை செய்ய தகுதி வாய்ந்த சைவக் குருமார்கள் குறைவாக இருந்த காரணத்தால், இவர்கள் செல்வாக்கு பெற்றனர்.

இவர்கள் தென்னாட்டிற்கு வந்து ஆகமங்களைக் கற்றுத் தகுதி பெற்றதுடன் அதைப் பிறருக்குப் பயிற்றும்வித்தனர். கோயில்களை மேற்பார்வையிடவும் வழி நடத் தவும் பொறுப்பேற்றனர். சோழர்கள் காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றனர். காளாமுகம், வைரவம் எனப் பல பரிவினரில் இருப்பினும், பெரும் பாலும் லகுளீச பாசுபத ஆசாரியர்கள் மிகுந்த செல்வாக்குப் படைத்திருந்தனர். இவர்கள் பெரிய மடங்களை அமைத்தும் சிவப்பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இராஜராஜன் காலத்தில் அவனுக்குக் குருவாக ஈசானசிவர் என்ற பண்டிதர் விளங்கினார். இவர் தஞ்சைக் கோயிலில் திக்பாலகர் ஆலயங்களுக்குப் பொற்கலசம் தந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ❀

கங்கை கொண்ட சோழீச்சரம் கூழமந்தல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராஜராஜன் காலத்திலும் அவனுக்குப் பிறகு இராஜேந்திரன் காலத்திலும் சிறந்து விளங்கிய குருபிரான் சர்வசிவ பண்டிதர் ஆவார். இம் மன்னன், இவரும் இவருடைய சீடர்களும் எங்கே குடியிருந்த போதிலும் ஆசார்ய போகமாக நெல் அளக்கும்படி ஏற்பாடு செய்திருந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ,ஈசான சிவாச்சாரியார் இராஜேந்திர சோழன் கங்கை வெற்றியை நினைவு கொள்ளும் வகையில் காஞ்சிபுரத்திற்குத் தெற்கே கூழமந்தல் என்னுமிடத்தில் கங்கை கொண்ட சோழீச்சரர் கோயிலை அமைத்தார் என்கின்றனர். அக்கோயில் இப்போதும் சிறப்புடன் விளங்கி வருகிறது.

இவர்கள் சிறந்த மந்திர தந்திரங்களைத் தெரிந்தவர்களாகவும், இறையருள் பெற்றவர்களாகவும் விளங்கினர். மன்னர்களின் வெற்றிக்குப் பெரிய பூசைகளை நடத்தினர்.

திருஒற்றியூரிலுள்ள ஒரு கல்வெட்டு மயானமும் மடமும் கொண்ட பிரசித்தி பெற்ற சதுரானன பண்டிதரைக் குறிக்கின்றது.

அந்நாளில் பாண்டியனும் ஈழ அரசனும் சோழநாட்டின் மீது படையெடுத்து வந்த போது எதிரிகளின் படையை அடக்க இறையருளை வேண்டிநின்ற **''எதிரிலி சோழச் சம்புவரையன்''** என்பான் உமாபதி தேவர் என்னும் ஞான சிவதேவரை அணுகினான். அவர் ஆர்ப்பாக்கம் என்னும் ஊரிலுள்ள வாலீசுவரத்தில் 28 நாட்கள் அகோர பூசை செய்தார். அதன் பயனாகப் பாண்டியனும் ஈழப் படையும் நிலைகுலைந்து ஓடி

குகையிடி கலகம்

வடநாட்டிலிருந்து குடியேறிய சைவாச்சாரியர்கள் நல்ல கல்வித்திறம் படைத்தவர்களாகவும் அரசியல் நெறி கற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களும் அவர்களது மடங்களும் அரசியலில் பெருஞ்செல்வாக்கு பெற்றிருந்தன. இவ்வேளையில் இவர்களிடம் பயின்றவர்கள் திருமுறைகளை முன்னிலைப்படுத்தித் தனியாக மடங்களை ஏற்படுத்தினர். அந்த மடங்கள் குகைகள் என்று அழைக்கப்பட்டன. மக்கள் செல்வாக்கும் அதற்குப் பரவலாகப் பெருகி வந்தது. அதைக் கண்டு பொறாமையும் அச்சமும் கொண்ட வடநாட்டு ஆசாரியர்கள் அவற்றை இடித்தும் அதிலுள்ள ஆசாரியார்களைக் கொன்றும் கலகம் விளைத்தனர். இதனை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குகையிடிகலகம் என அழைக்கின்றனர்.

திரிபுவனதேவன் என்று பட்டப்பெயர் சூடிய மூன்றாம் குலோத்துங்கள் தமது இருபத்தியிரண்டாம் ஆட்சியாண்டில் தோன்றிய இக்கலகத்தை அடக்கினான். அப்படி அடக்காவிட்டால் சைவர்களுக்குள்ளேயே பெருங்கலகம் நிகழ்ந்து பேரழிவு நிகழ்ந்திருக்கும்.

இப்படிப் பட்ட துயர்நிலை சைவ சமயத்திற்குத் தனது காலத்தில் வந்து விட்டதே என்று மன்னன் மனம் நடுங்கிச் சோர்ந்தான்.அவனது முயற்சியால் ஒருவாறு கலகம் அடங்கிச் சைவ சமயம் துளிர்ந்தது. அவன் தனது மன நடுக்கத்தை நீக்கியதால் தாம் அமைத்த திரிபுவன வீரேசுவரம் ஆலயத்திலுள்ள பெருமானுக்கு நடுக்கம் தீர்த்தநாதர் என்னும் பெயரைச் சூட்டினான் என்றுபேராசிரியர் முனைவர். இரா. செல்வக்கணபதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளிந்தனர். இதற்காக அவன் ஆத்தூர் சிவபாத காணிக்கையாக வழங்கினான்.

மற்றுமோர் சமயத்திலும் ஈழப் படைகளை முறியடிக்க சுவாமிதேவர் என்பர் தன் தவவலிமையால் வழிபாடு நடத்தினார். அதில் வெற்றி பெற்றதும் அச்சுதமங்கலம் என்னும் ஊரில் சிவாலயத்தை அமைத்தார். அதற்கு வேண்டிய நிபந்தங்களை மன்னன் அளித்தான்.

திருக்கடையூரில் நிலைமாறி இருந்த பூசை முறைகளை இவர் பழைய படி மாற்றி அமைத்தார் என்றும் அதை மன்னன் ஏற்றுக் கொண்டு ஆணையிட்டான் என்னில் இவரது செல்வாக்கினை என்னென்னபது!

ஆகம நெறிகளை மட்டுமே போற்றி வந்த இந்தச் சிவாச்சாரியர்கள் பன்னாளில் தேவாரத்தை ஏற்றுக் கொண்டு அதில் சிறப்புப் பெற்றனர். இவர்களிடத்தில் பயின்று தொண்டு செய்தவர்களே ஆல யங்களில் பணி அமர்த்தப்பட்டனர். காலப் போக்கில் இவர்கள் தனித்தன்மை இழந்து தென்னாட்டுச் சிவாச்சாரியர்களுடன் கலந்து விட்டனர்.

இப்படி வடநாட்டுச் சைவக் குருமார்கள் தென்னகமெங்கும் பரவிச் சிறப்புடன் விளங்கி வந்துள்ளனர்.

இந்த பாசுபத சைவர்கள் தென்னகமெங்கும் பரவி இருந்தனர். சைவ ஆகமங்களில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அரசியல் செல்வாக்கு பெற்றிருந்தனர். குறிப்பாக சோழர்களின் குல குருவாகவும் அரச குருவாகவும் விளங்கினர்.

இச்சமயத்தினர் தென்னகமெங்கும் அனேக மடங்கள் நிறுவி இருந்தனர். அவற்றின் சீடர்களும் அனேகர் இருந்தனர். இவர்கள் தன்னை இன்ன மடத்து சந்தானத்தார் என்று குறித்துக் கொண்டனர்.

இம்மடத்தைச் சேர்ந்தவர்களே ஆலயங்களில் திருமுறை ஓதவும் பாடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர் என்பதை கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

தென்னகமெங்கும் இருந்த இந்த மடத்துத் தலைவர்கள் 108 பேர்களின் உருவங்களை தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் வரிசையாக அமைந்து புடைப்புச் சிற்பங்களாகக் காண்கிறோம். இப்புடைப்புச் சிற்பங்கள் மீது இவர்களதுபெயர்களும் எழுதப்பட்டுள்ளன. எனவரும் அப்பெயர்களால் இவர்கள் ஆகம வழியில் வந்தவர்களாகவும் தனக்கென மடங்களை உடையவர்களாகவும் இருந்ததை அறிய முடிகிறது. ❀

சிவாச்சார்யர்கள் பூசிக்கும் திவ்ய தேசப் பெருமாள்

வைணவர்கள் போற்றும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக இருப்பது காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத்தில் உள்ள நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியாகும். இந்தப் பெருமாளை ஏகாம்பரேஸ்வரர் கோயில் அர்ச்சகர்களே பூஜித்து வருகின்றனர்.

மேலும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக இருப்பது கள்வனூர் ஆகும். இது காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குள் உள்ளது. இதை காமாட்சி யம்மனைப் பூசித்து வரும் வேத வழிப்பட்ட அந்தணர்களே பூசித்து வருகின்றனர். ❀

சிவாகமங்களுக்கு இணையாக இருப்பது குமாரதந்திரம் ஆகும். முருகன் ஆலயங்களில் பூசைசெய்யும் சிவாச்சாரியார்கள் இந்த குமார தந்திரத்தின் அடிப்படையிலேயே பூஜை செய்து வருகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாசுபத சிவாச்சாரியர்கள்

[தென்னகத்தில் ஆகம நெறியில் வந்த ஆதி சைவர்களான சிவாச்சாரியார்கள் சிவதீக்ஷை பெற்று சைவநெறியைபோதிப்பவர்களாகவும் உள்ள மற்றைய இனத்தைச் சேர்ந்த சிவாச்சாரி யார்கள் தவிர மூன்றாவதான சிவாச்சாரியார் கூட்டத்தையும் காண்கிறோம். இவர்கள் பாசுபத சைவத்தைச் சேர்ந்த குருமார்களாவர்.

இவர்களில் தீக்ஷை பெற்றவர்கள் சிவர்கள் என்றும் ஆச்சார்யத் தன்மைப் பெற்று குருமார்கள் தகுதி பெற்றவர்கள்சிவாச்சாரியார்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பாரததேசம் முழுவதும் பரவி இருந்த இந்த பாசுபதர்கள்தென்னகத்தில் பெற்றிருந்த செல்வாக்கைச் சிந்திக்கலாம்]

சைவ சமயத்தில் பெருமை வாய்ந்த பிரிவுகளில் மிகவும் சிறப்புப் பெற்றது லகுளீச பாசுபதமாகும். இவர்கள் வேதத்தை ஏற்றுக் கொண்டதுடன் ஆகமவழி நின்றவர்கள். இவர்கள் தென்னகத்தில் பல இடங்களில் சைவ மடங்களை உருவாக்கி ஆசாரியர்களாக வீற்றிருந்து அன்பர்களுக்கு சைவ சமயக் கருத்துக்களைப் போதித்து வந்தனர்.

கௌலீசர் (லகுளீசர்) பிரம்மா லிஷ்ணு

ஆதியில் சிவபெருமானே சுவேதர் என்ற குருவாகத் தோன்றி இம்மதத்தைத் தோற்றுவித்தார் என்றும், இதுவே வழி வழியாகப் போதிக்கப்பட்டு லகுளீசர் வரை தொடர்ந்தது என்றும் வரலாறு கூறுகிறது.

சிவமகாபுராணத்தில் இருபத்தேழு சதுர்யுகங்கள் நடந்து முடிந்ததென்றும், இருபத்தெட்டாவதான சதுர்யுகம் இப்போது நடந்து கொண்டிருக்கிறதென்றும் கூறப்பட்டுள்ளது. இந்த இருபத்தெட்டு யுகங்களிலும் யுகத்திற்கு ஒருவர் வீதம் சுவேதர் முதல் லகுளீசர் வதை தோன்றி சமயத்தை நிலை நிறுத்துவர் என்றும், சிவபெருமானே இவர்கள் வடிவில் மண் மீது வந்து வேதாகமங்களைப் போதித்தான் என்றும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அவ்வாறு வந்த குருமார்கள் ஒவ்வொருவருக்கும் தலைமைச் சீடர்களாக நால்வர் விளங்கினர். அவர்களிடமிருந்து இச்சமயம் பல்கிப் பெருகியது.

பாசுபத சைவத்தின் முதல் ஆசாரியரான சுவேதர் அருளியது சுவேதாச்வதரம் என்னும் உபநிடதமாகும். இது 108 உபநிஷதங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆகம நெறியில் சிவாசார்யார்களே சிவாலய வழிபாடு செய்ய வேண்டும் என்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருந்த நிலைமை மாறி வேதவழியிலும் சிவாலய வழிபாடுகளைச் செய்யலாம் என்று சுவேதரே வழிவகுத்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் வழிவந்தவர்கள் இயற்றியுள்ள பூஜா பத்ததி நூல்களும் உள்ளன.

இவர்கள் வழிவந்த சைவ சிவாசாரியார் களும் திருமடம் அமைத்து சிவப்பணி செய்து வந்த மடாதிபர்களும் அவர்களது சந்தான மரபினரும் பன்னாளில் சிவாலயங்களில் அர்ச்சகப் பொறுப்பேற்றதையும் அறிய முடிகிறது, இவர்கள் ஆகமத்தோடு திருமுறைகளையும் பயின்றனர்.

திருவொற்றியூரிலுள்ள கல்வெட்டின் மூலம் திரு ஒற்றியூரிலும் பாசுபத சைவம் தழைத்திருந்ததை அறிகிறோம். இங்கு மடமும் மயானமும் உடைய சதுரானன பண்டிதர் என்பவர் செல்வாக்கு பெற்றிருந்ததை அக்கல்வெட்டு கூறுகிறது. தொண்டை மண்டலத்தில் வாகீசுவர பண்டிதர் முதலான பல பண்டிதர்கள் பெருமை பெற்றிருந்ததைக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

சுந்தரர் திருமுல்லை வாயில் பெருமானைப் பாசுபதா பரஞ்சுடரே என்று போற்றுகின்றார் இது பாசுபதர்களின் திருத்தலமாகும். திருப்பாசூரில் வாரணாசி லட்சத்யாய இராவாளரது கொல்ல மடம் என்னும் மடம் இருந்ததை அறிகிறோம். இது பாசுபத மடம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பந்தணை நல்லூரில் வாரணாசி பிஷா மடம் என்னும் பெயரில் மடம் இருந்ததை அறிகிறோம். இத்தலத்தில் அப்பர் சுவாமிகள் தாம் அருளிச் செய்த பதிகத்தில் பாசுபத சைவர்களைப் பற்றிக் குறிப்படுகிறார். சாம்பலைப் பூசி தரையில் புரண்டு என்று தொடங்கும் பாடல் பாசுபத யோகத்தையும் பாசுபதர்களையும் குறிப்ப தாகும். எனவே, அப்பர் காலத்தில் பாசுபத சைவர்

திருவொற்றியூர் கௌலீசர் (லகுளீசர்)

கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

பசுபதி, பாசுபதன், பசுக்கள் முதலிய பெயர்களோடு தொடர்புடைய தலங்கள் பெரும் பாலானவற்றில் பாசுபதசைவர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்துள்ளது. பாசூர், திருமுல்லைவாயில், பட்டீச்சரம், பந்தணை நல்லூர் முதலிய தலங்களில் பெருமான் பாசுபதராகவும் பசுபதியாகவும் எழுந்தருளியுள்ளார். பாசுபதர்களில் இராவாளரது மடம் என்னும் பெயரில் மடம் உள்ளது. பட்டீச்சரத்தின் ஒருபகுதி இராப்பட்டீச்சரம் என வழங்குவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

பாசுபத மடத்தைச் சேர்ந்த சிவாச் சாரியர்கள் சோழர்கள் காலத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தனர். காலப்போக்கில் இவர்கள் இங்கேயுள்ள மக்களுடன் கலந்து விட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பள்ளிப் படை கோயில்களும் பாசுபத சிவாச்சாரியார்களும்

ஆலயங்கள்பலவகைப்படும் அவை உலகம் நலம் பெற சித்தர்களாலும், முனிவர்களாலும், தவசிகளாலும் பூசித்து அருள் பெற்ற இடங்களில் உண்டான பெருங் கோயில்கள். இவையே பரார்த்த ஆலயங்கள் இவற்றில் பலவிதமான பரிவாரங்களுடன் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். இதில் ஆகமமுறைப்படி பரிவாரங்கள் நிலைப்படுத்தப்பட்டு ஆகம முறையில் தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு அடுத்தபடியான ஆலயங்கள் அருளாளர்கள் சமாதி எய்திய தலங்கள்மீது எழுந்த சிவாலயங்கள் ஆகும். தொடக்கத்தில் இவை அருளாளர்களின் சீடர்களாலேயே பூசை செய்யப்பட்டன.பின்னாளில் இங்கு முறைப்படி சிவலிங்கமும் பரிவார மூர்த்தங்களும் அமைக்கப்பட்டு பரார்த்த ஆலயமாக்கப்பட்டு சிவாச்சாரியார்களைக் கொண்டு பூஜை செய்யப் பட்டு வருகிறது.

எடுத்துக்காட்டாக தருமையாதீனத்தைத்தோற்றுவித்த குருஞானசம்பந்தர் சமாதித்தலத்தில் பெரிய சிவாலயம் அமைக்கப்பட்டு தினபூஜைகளும்விழாக்களும் கொடியேற்றி பெருந்திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

அதியுன்னத வீரர்களாகவும், சிவனடியார்களாகவும் இருந்த அரசர்களும், வீரர்களும் வீரசொர்க்கம் அடைந்தபோது அவர்களது திருமேனிகளைப் பள்ளிப்படுத்தி அதன்மீது சிவாலயம் அமைக்கப்பட்டது. இத்தகைய சிவாலயங்கள் அதீத ஆலயங்கள் எனப்படுகின்றன.

இத்தகைய சிவாலயங்களை பாசுபத சிவாச்சாரியார்களே பூசை செய்து வந்தனர். எடுத்துக்காட்டாக வள்ளிமலையை அடுத்த மேல்பாடியில்அமைந்துள்ள அரிஞ்சையீச்சரம் என்னும் சிவாலயம் சோழ சாம்ராஜ்யத்திற்கு அடிகோலிய அரிஞ்சயசோழனுக்கு எடுக்கப்பட்ட ஆலயமாகும். இங்குள்ள கல்வெட்டு இக்கோயிலில் பாசுபத ஆச்சாரியார்கள் சிவபூஜை செய்து வந்ததைக் குறிக்கின்றது.

சோழ மன்னர்களுக்கு எடுக்கப்பட்ட இந்த பள்ளிப்படைக் கோயில்கள் கால வெள்ளத்தில் அழிந்துபோயுள்ளது. குடந்தையில் உள்ள இராமநாதன் கோயில் என்று அழைக்கப்படும் ஆலயம் பஞ்சவன் மாதேவி என்னும்பேரரசியாருக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயிலாகும். இது ஆதியில் பாசுபதாச்சாரியார்களால்பூசிக்கப்பட்டது பின்னாளில் இது சிவாச்சாரியார்களின் பூசைக்கு உரியதாக இருக்கின்றது.

பாசுபதர்கள் மயானத்தை விரும்ப உறைபவர்களாக இருந்ததால் பள்ளிப்படைக் கோயில்கள் பூசிப்பதில்ஆர்வமாக இருந்துள்ளனர். ❀



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவசிகள்

ஆதியில் வடநாட்டிலிருந்து தென் னாட்டிற்கு வந்த சைவ சமயக் குருமார்கள் ஆகம நெறிகளின் வழிநின்று சமயத்தைப் போற்றிப் பேணி வந்தனர். ஏழாம் நூற்றாண் டில் பக்தி இயக்கம் பெரிய எழுச்சி பெற்ற போது இவர்கள் திருமுறைப் பாடல்களை யும் சமய வழிபாட்டில் ஏற்றுக் கொண்டனர். இம்மடத்திலிருந்து சிவதீக்ஷை பெற்ற சீடர்கள் பக்தி இயக்கத்தில் தலைப்பட்டு நின்றதுடன், திருமுறைகளை மேன்மைப் படுத்தும் வகையில் தனியே மடங்கள் அமைத்தனர் அம்மடங்களே குகைகள் எனப்பட்டன. இவை யாவும் திருமுறை களை அடிப்படையாகக் கொண்டவை. இக்குகைகளுக்கு தேவாரச் செல்வன் குகை, திருஞான சம்பந்தன் குகை என்ற பெயர்கள் வழங்கி வந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

இத்தகு குகைளும் அதில் வீற்றிருந்த சைவக் குருமார்களும் பக்தி இயக்கத்தால் பெருஞ்சிறப்பைப் பெற்றனர். அதுகண்டு பொறுக்காத சில வடநாட்டுக் குருமார்கள் குகைகளை இடித்து கலகம் செய்தனர். இது வரலாற்றில் குகையிடி கலகம் எனப்பட் டது. இதை திரிபுவன தேவ னான குலோத் துங்கன் அடக்கினான் என்று வரலாறு கூறுகிறது.

இத்தகு குகைகளில் வீற்றிருந்தவர்கள் தம்மை தபஸ்விகள் என்று அழைத்துக் கொண்டனர். இவர்கள் திருமுறைகளை ஓதி உணர்ந்திருந்தனர். இத்தகு தபஸ்வி களே அந்நாளில் ஆலயங்களி ல் திரு முறைப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டனர். தபஸ்விகள் தமது மூல ஆசார்ய புருஷர் களாகிய சைவக் குருமார்களைப் போற்றித் தாம் இன்ன குருமாருடைய வம்சத்தைச் சேர்ந்த தபஸ்வி என்று தம்மைக் குறித்துக் கொண்டனர்.

திருநெல்வேலியில் பொறிக்கப்பட் டுள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டு நெல்லையப்பர் கோயிலில் பஞ்சாச்சாரி யர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பதினோரு தபஸ்விகள் திருப்பதிகம் பாட நியமிக்கப்பட்டதைக் கூறுகிறது.

இதில் இவர்கள் பெயருக்கு முன்னால் மேலே சொன்னது போல் ஆசாரியர் பெயர், இவர்களுக்குள்ள மடத்துத் தொடர்பு ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட் டாக விஷகண்ட தேவர் சந்தானத்து இல்லாததேவர் சிஷ்யரில் தவப்பெருமாளுக் கும், திருவாரூர் வடக்கில் மடத்து சிஷ்யரில் திருநட்டப் பெருமாளுக்கும், திருநெல் வேலி மாளிகைமடத்து அழகிய நாயகர் சந்தானத்து உய்யக்கொண்டதேவர் ஆகிய பெயர்களைக் காணலாம்.

தபஸ்விகள் காலப்போக்கில் சிவால யங்களில் அருச்சகப் பணியையும் மேற் கொண்டனர். திருஓத்தூரில்(செய்யாறு) பொறிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டு லிங் கார்ச்சனம் செய்து கொண்டிருக்கும் தபஸ்வி விடையின் மேல் வருவான் என்பவனைக் குறிக்கிறது. திருமுறைப் பணியில் மேம் பட்டவரைக் குறித்த தபஸ்வி எனும் சொல் காலப்போக்கில் மடத்துப் பணியாளர் பெய ராகி, தபசிப்பிள்ளை என்று உதவியா ளரை யும் பணியாளரையும் குறிக்கும் சொல்லாகி விட்டது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்து சிவாசாரியார் திருவுருவங்கள்

சிவாச்சாரியார்களைச் சிவமாகப் போற்றி வழிபடவேண்டுமென்று கூறுவர். முன்னாளில் ஆலயங்களில் மிகவுயர்ந்த நிலையில் இருந்த சிவாச்சாரியர்களின் திருவுருவங்களை எழுந்தருளுவித்து வழிபடும் வழக்கமும் இருந்து வந்துள்ளது.

தஞ்சைப் பெரிய கோயிலில் இடையன் நள்ளாறன் என்பவன் வில்லானை குருக்கள் என்னும் சிவாச்சாரியாரின் திருமேனியை எழுந்தருளுவித்தான் என்றும், அத்திருவுருவத்திற்கு வேண்டும் பூசைகளுக்கு ஈசான சிவபண்டிதர் என்பவர் நிபந்தங்களை ஏற்படுத்தினார் என்று தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. இதுபோல இரண்டாம் இராஜஇராஜசோழன் காலத்தில் தாராசுரம் ஐராவதீசுவரர் ஆலயத்தில் 108 சிவாச்சாரியாரின் திருவுருவங்களை அமைத்துப் பெருமைப்படுத்தி உள்ளனர். அது பற்றிய செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

சோழர்கால கோயிற்கலைப் பாணியில் உன்னதமான இடம் பெற்றுள்ள ஆலயம் தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயமாகும். ஏறத்தாழ தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே அமைந்திருப்பதுடன், மாபெரும் சிற்பக் கலைக் கூடமாகத் திகழ்கிறது. புராணங் களில் கூறப்பட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள வனப்பு மிக்க அநேக சிற்பங்களை இங்கே காண்கிறோம்.

இந்த ஆலயத்தில் வடக்குத் திருமாளிகையில் சுவரில் தெற்கு நோக்கியவாறு 108 சிவாச்சாரியர்களின் திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டு, அத்திருவுருவங்களின் மீது அவர்களுடைய பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.

இப்படி நீண்ட வரிசையில் அமைக்கப்பட்டுள்ள சிவாச்சாரியர்களின் திருவுருவங்கள் வேறெங்கும் இல்லாததாகும்.

இவற்றில்17 பேர்களை எடுத்துக் கொண்டு அந்தப் பெயர்களின் சிறப்புக் களை இங்கே காணலாம்.

1.களப்பாருருடைய பிள்ளையான சதாசிவர் 2.முல்லைவனமுடையார் தேவரான ஈசான சிவன் 3. [கர]கம்பக்குடையார் திருமழபாடி உடையாரான அகோர சிவர்4. புளியம் பூண்டி உடையார் காலபுருஷரான சதாசிவர் 5.நெடுமணல் உடையார் சிற்றம்பலக் கூத்தரான ஹ்ருதய சிவர் 6. காவிரி மங்கலமுடையார் சந்திர சேகரரான அனந்த சிவர் 7. மழவச்சேரி உடையார் திருச்செம்பொன்பள்ளி உடையாரான சூக்ஷ்ம சிவர் 8. காழியூர் கிழவர் நாட்டியத்தான் குடி நம்பியான வாகீச சிவர் 9. குடவாயில்கிழார் உமாபதி ஆழ்வாரான சிகாசிவர் 10. ஆலத்தூருடையார் புற்றிடங் கொண்டாரான தம்மசிவர் 11. நெல்வாயிலு (டையார்) ப(சு)பதியாரான ஈசானசிவர் 12. வண்டாழைக் குடையார் வேதவனமுடையவரான ஈசான சிவர் 13. கழுமலமுடையார் புற்றிடங் கொண்டாரான அஸ்திர சிவர் 14. சிற்றாயி லுடையாரான அணரிய் திருநாமமுடையாரான உருத்திர சிவர் 15. மண்ணிக் குடையார் மாதேவரான வைக்ராயசிவர் 16. பழுவூர் கிழவர் திருவீரட்டான முடையாரான தத்புருஷ தேசிகர் 17. புளியங்குடையார் மூவாயிரத்தொருவரான தத்புருஷ சிவர் என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்து சிவாசாரியார் திருவுருவங்கள் ஒருபகுதி

இந்தப் பெயர்கள் மூன்று பகுதிகளை உடையவையாக இருப்பது சிந்தித்தற் குரியதாகும். முதல் பகுதி ஊரையும், இரண்டாம் பகுதி அவருடைய இயற்பெயரையும், மூன்றாம்பகுதி அவர்களுடைய தீட்சா நாமத் தையும் குறிக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் தனித் தனியே விளக்கலாம்.

இவர்களுடைய ஊருக்கு அடுத்ததாக உடையார், பள்ளை கிழவர் என்னும் பட்டப் பெயர் இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் இவர்கள் ஊரில் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்ததை அறிய முடிகிறது. இரண்டாவது பகுதியின் மூலம் இவர்களுடைய பெயர்கள் யாவும் திருமுறையில் வருகின்ற பெயர்களாக இருப்பது குறிப்படத்தக்கது.

மூன்றாவதுபகுதி,இவர்கள் சிவதீக்ஷை பெற்றபின் சூடிய தீஷா நாமமாக உள்ளது.

அதிலும் தனிச்சிறப்பு ஒன்றைக் காண்கிறோம். இப்போது நடைமுறையில் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்தியோஜாதம் என்னும் சிவபெருமானின் ஐந்து முகங்களின் பெயராலேயே

தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்து சிவாசாரியார் திருவுருவங்கள் பக்கவாட்டுத் தோற்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடுவிலுள்ளவர் மீது பொறிக்கப் பட்டுள்ள பெயர் குடவாயில்கிழார் உமாபதி ஆழ்வாரான சிகாசிவர்

தீக்ஷா நாமங்களை வைத்து சிவாச்சாரியர்கள் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் இங்கு சிவபெருமானைச் சுற்றியுள்ள ஷடங் கம் (எ) ஆறங்கமான (இருதயம், சிரசு, சிகை, நேத்திரம், கவசம், அஸ்திரம்) என்ற ஆறின் பெயராலும், சிவபெருமான் வீற்றிருக்கும் சிம்மாசனத்தினைத் தாங்கி நிற்கும் தர்மம் முதலான நான்கு சிங்கங்களின் பெயர்களாலும், அதையும் தாங்கி நிற்கும் அனந்தன் என்னும் பாம்பின் பெயராலும் தீஷா நாமங்கள் வழங்கப் பட்டதைக் காண்கிறோம்.

மேலும், யாகாக்னியின் தந்தையான வாகீசர் பெயராலும் தீக்ஷை நாமம் வழங்கப் பட்டுள்ளது. இதுபோன்று வழங்கிய தீக்ஷா நாமங்களின் மூலம் அந்நாளில் சிவாச் சாரியார்கள் பெற்றிருந்த செல்வாக்கையும் ஆகம நெறி பரவியிருந்ததையும் அறிய முடிகிறது.

இவர்களுடைய சிலைகள் இங்கு அமைக்கப் பட்டுள்ளதற்குப் பல காரணங் கள் கூறப்பட்டுள்ளன.

அவற்றுள் முதன்மையானது. இரண்டாம் இராஜராஜன் ஐராவதேசுவரர் ஆலயத்தை மாபெரும் கலைக் கோயி லாக மாற்றிக் கட்டியதுடன் இதனைச் சுற் றிப் பெரிய ஊரை நிர்மாணித்தான். அதற்கு இராஜராஜ புரம் என்று பெயர் சூட்டினான். அப்பெயரே மருவி தாராசுரம் என்றானது என்பர்.

இவன் கங்கைக் கரையிலிருந்து தம் முன்னோர்களால் குடியேற்றப்பட்ட லட்சம் சிவாச்சாரியர்களில் 1000க்கு ஒருவர் வீதம் 108பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய திருவுருவங்களை இங்கே செதுக்கியதுடன் அத்திருவுருவங்களுக்கு மேல் அவர்களுடைய பெயரையும் பொறித்து வைத்தான் என்கின்றனர். இதற்கான இலக்கியச் சான்றோ வரலாற்றுக் குறிப்புகளோ இல்லை.

இந்த லட்சத்தினர் தம்மைச் சிறப் பித்துக் கொள்ளும் வகையில் ஸ்ரீலட்சத்து ஸ்ரீ என்று பெயருக்கு முன்னால் அடைமொழி இட்டுக் கொண்டனர். அதுவே சுருக்கமாக ஸ்ரீலஸ்ரீ என்று குறிக்கப்படுகிறது.அந்த அடைமொழியை இப்போதும் சைவ மடாதிபதிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

உன்னத நிலையில் வைத்துப் போற்றப்பட்ட இந்த சிவாச்சாரியர்கள் ஆலயங்களில் பூசை செய்ததாகச் செய்தியில்லை. ஆலயங்களை மேற்பார்வை செய்ததுடன், அன்பர்களின் குடும்பத்திற்குக் குருமார்களாக விளங்கி சைவம் வளர்த்து வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

திருமுறை கூறும் பெயர்களைச் சூடியிருந்ததால் இவர்களைத் திருமுறை ஓதுபவர்கள் என்று வரலாற்றாராய்ச்சியாளர்கள் குறித்தனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜ சோழனால் நியமிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கப்பட்ட ஓதுவார்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பொறிக்கப்பட்டுள்ள ஓதுவார்களின் (பதியம் பாடுவார்) பெயர்கள் ஏறத்தாழ இதுபோன்றே இருப்பதால் இவர்களையும் ஓதுவார் என்றனர்.

ஆனால் அந்நாளில் இந்த சிவாச்சார்யர்களின் வழிவந்து தீட்சை பெற்று திருமுறைப் பயிற்சிகளைப் பெற்றிருந்தவர்களே ஆலயங்களில் பதிகம் பாட நியமிக்கப்பட்டனர் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

எடுத்துக்காட்டாக, திருநெல்வேலியில் பொறிக்கப்பட்டுள்ள சுந்தர பாண்டியனின் கல்வெட்டில், திருமுறை பாட நியமிக்கப்பட்டிருந்தவர்கள் தம்மை இந்த மடத்தின்

சந்தானத்தார் என்று குறித்திருப்பதைக் காண்கிறோம்.

இவர்கள் சைவ ஆச்சார்ய மடங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை இது உறுதிப்படுத்துவதாகும். ஆதலின் மேற்குறித்த தாராசுரத்திலுள்ள திருவுருவங்கள் யாவும் சைவாச்சார்யார்களின் திருவுருவங்களே ஆகும்.

இவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்புகள் மூலம் அந்நாளில் ஆகமங்கள் பெற்றிருந்த உன்னத நிலையை அறிய முடிகிறது. ❀

சிவர்களும் சிவாச்சாரியர்களும் பாசுபத சமயத்தில் தொடக்கத்தில் தீக்ஷை பெற்ற வர்கள் சிவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் பெயருடன் வாமதேவசிவம், ஈசான சிவம், தத்புருஷ சிவம், அகோர சிவம், சத்யோஜாத சிவம் என்னும் பெயர்களைச் சேர்த்து வழங்குகின்றனர். முன்நாளில் சிவபெருமானின் பஞ்சாசனங்களில் இடம் பெற்றுள்ள பெயர்களையொட்டி சிம்ம சிவர், கவசசிவர், நேத்திர சிவர், அஸ்திர சிவர், கவச சிவர், கூர்ம சிவர், அனந்த சிவர், கமல சிவர் என்னும் பெயர்களையும் சூடியுள்ளனர்.

இவர்கள் அடுத்த நிலையான ஆச்சாரியஅபிஷேகம் செய்து கொண்டு ஆச்சாரியர் ஆனர். அப்போது வாமதேவசிவாச்சாரியர், அகோர சிவாச்சாரியர் எனும் பெயர்களைப் பெற்றனர். ❀

இராமேசுவரம் அர்ச்சகர்கள்

பாரத தேசத்தின் புகழ் பெற்ற தலங்களில் ஒன்றாக இருப்பது இராமேசுவரம் ஆகும். இது சிவாகமப்படி கட்டப்பட்ட கோயிலாக இருந்தாலும் இங்கு பூசை செய்பவர் மராட்டிய அந்தணர் ஆவார். மேலும் இங்கு நேப்பாள அரசர் தரிசனத்திற்கு வரும்போதும் அவர் நேரடியாகவே அபிஷேக ஆராதனைகளச் செய்யும் வழக்கம் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

மேலும் இங்கு சிருங்கேரி மகாசந்நிதானங்கள் இங்கு எழுந்தருளும் போது அவர்களே கருவறைக்குள் சென்று ராமேசுவர நாதரின் ஸ்படிகலிங்கத்திற்கு பூஜை செய்யலாம் என்னும் வழக்கம் உள்ளது என்கின்றனர். இதுபோன்றவை வடநாட்டு மரபில் வந்த வழக்கங்கள் என்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்களில் பூசை நடத்தும் பல்வேறு இனத்தினர்

சிவாலயங்களில் முதன்மை மூர்த்தியான சிவலிங்கப் பெருமானையும், அவரது தேவியான பராசக்தி தேவியாரையும் சிவாச்சாரியார் மட்டுமே பூசிப்பர். மற்றைய சந்நிதிகளை (பூசை செய்வதற்குத் தகுதி வாய்ந்த) வேறு அர்ச்சகர்களைக் கொண்டு பூசிக்கும் வழக்கமும் உள்ளது.

எடுத்துக்காட்டாக திருப்பெருந்துறை ஆலயத்தில் ஆறுவகையான அருச்சகர்கள் பூசை செய்கின்றனர். இறைவன் வடிவாக விளங்கும் குருந்தமரம், கருவறையிலுள்ள ஓங்கார பீடம்,சிவயோக நாயகிசந்நிதி ஆகியவற்றை நம்பயார் எனப்படும் மரபினர் பூசிக்கின்றனர். இவர்கள் பிரம்மனால் பூசை செய்வதற்கென்று தோற்றுவிக்கப் பட்ட ரௌட்சாயணர் என்பவரின் மரபில் வந்தவர் களாவர். இவர்கள் வேதம் வழி வந்த அந்தணர்களாவர்.

உற்சவர் மாணிக்கவாசகர், சம்சர்க்க (சொக்க) விநாயகர், வீரபத்திரர் ஆகியோரைச் சிவாச்சார்யர்கள் பூசை செய்கின்றனர். இவர்கள் ஆகமவழி வந்த அர்ச்சகர்கள். கனக சபையிலுள்ள தூணில் இடம் பெற்றுள்ள குதிரைச் சாமியையும் மாணிக்கவாசகரையும் சைவப்பள்ளைமார் பூசிக்கின்றனர்.

மேற்குப் பிராகாரத்திலுள்ள மதிலின் மாடத்தில் மகாலிங்கசுவாமி எனும் ஐயனார் உள்ளார். அவரை வைதீகப் பிராமணர்கள் பூசை செய்கின்றனர். ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள வீரபத்திரர் சிலை களைக் கோயில் கொத்தனார் என்பவர்கள் பூசிக்கின்றனர். இவர்களுடன் உவச்சர்கள் சிலவழிபாடுகளைச் செய்கின்றன. இப்படி அறுவகை இனத்தினர் பூசிக்கும் ஆலயத்தை வேறெங்கும் காண முடியவில்லை.

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் மூலத்தானத்தில் முதன்மைக் கடவுளாக விளங்கும் முருகப் பெருமானை மலையாள அந்தணர்களான நம்பியார்கள் பூசிக்கின்றனர். ஆறுமுக நயினாரான ஷண்முகரையும் பற சந்நிதிகளையும் சிவாச்சாரியார்கள் பூசிக்கின்றனர். இவர்களுக்குத் துணைவர்களாக முக்காணியர் எனப்படும் ஈராயிரவர் இங்குள்ளனர். இவர்களே ஸ்தலத்தார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவர். இவர்களைப் போத்திமார் என்று அழைக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத் தில் நான்கு வகையானவர்கள் பூசிக்கின் றனர். இவர்கள் அனைவரும் சிவாச்சாரி யார்களே என்றாலும் நான்கு வகையான பட்டப் பெயர்கள் பூண்டுள்ளனர். சிவாச் சாரியர்கள் என்பவர்கள் ஏகாம்பரநாதரை தொட்டுப் பூசிக்கும் உரிமை பெற்றுள் ளனர். தீக்ஷிதர்கள் மாவடிக் குமாரரையும் பரிவாரங் களையும் பூசிக்கின்றனர். பட்டர்கள் நடராச மூர்த்தியை மட்டும் பூசிக்கின்றனர். சாளுவ நாயகர் என்பவர்கள் சோமாஸ்கந்தரைப் பூசிக்கின்றனர். இந்த அமைப்பு நிர்வாகச் சிக்கல் இல்லாம லிருக்க மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை யாகக் கருதப்படுகிறது.

பலவகையினர் இவ்வாறு ஒரே ஆலயத் தில் அருச்சகர்களாக இருந்து பூசித்த போதி லும், ஆலயங்கள் யாவும் ஆகம விதிகளை யொட்டிய சிற்ப நூல்களில் கூறப்பட்டுள் ளபடியே கட்டப்பட்டுள்ளன என்பதும் ஆகமங்களைப் போற்றிப் பாதுகாப்பவர்கள் சிவாச்சாரியார்களே என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும். ❀

பார சைவர்கள்

சிவாலயங்களில் சிவனை ஆராதிப்பவர்கள் சிவாச்சாரியார்கள் எனப்பட்டனர். அதுபோல் கிராமிய தெய்வங்களான பிடாரி, காளி போன்ற தெய்வங்களை சாக்த தந்திரங்களில் பூசிப்பவர்கள் பாரசைவர் எனப்பட்டனர். (பரை என்பது மேலான பெண் தெய்வத்தைக் குறிப்பதாகும். இவர்கள் சிவ தீக்ஷை பெற்றவர்கள். யாமளம், டமருதந்திரம் முதலான சாக்த ஆகமங்களில் சொல்லப் பட்டபடி பூசை செய்பவர் கள்.

கிராமிய தெய்வங்களான பிடாரி, பொன்னியம்மன், புறவார்த்தம்மன் போன்ற தெய்வங் களை பூசிப்பவர்களாவர். பின்னாளில் வீரன்முனியன் போன்ற தெய்வங்களையும் பூசிப் பவர்கள் ஆனார்கள். இவர்கள் சிவாலயங்களில் இசைக்கருவிகளை இசைக்கும் பணி யையும் செய்து வந்தவர்களாவர்.

திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் பஞ்சமுக வாத்தியத்தை இவர்கள் இசைத்து வரு கின்றனர். ❀

வீரசைவ அர்ச்சகர்கள்

ரேவணர் முதலான ஆதி ஐம்பெரும் குருமார்களால் தோற்றுவிக் கப்பட்டு பசவண்ணர் அக்கமாதேவி முதலியோரால் போற்றி வளர்க் கப்பட்ட சமயம் வீரசைவம் ஆகும். பசவண்ணர் காலத்தில் பேரெழுச்சி பெற்ற வீர சைவம் தென்னகத்திலும் புத்துணர்ச்சி பெற்றது. தென்னகத்தில் வீரபத்திரக் கடவுளுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு அதில் வீர சைவர் களே பூசை செய்துவந்தனர். பின்னர் சிவாலயங்கள், அம்பிகை, விநாயகர் ஆலயங் களிலும் அவர்கள்பூஜை செய்யத் தொடங்கினர். இப்போது பல ஆலயங்களில் வீரசைவர்கள் அர்ச்சகர்களாகப்பணியாற்றி வருகின்றனர். இவர்கள் கழுத்தில் சிறிய இஷ்ட லிங்கம் என்னும் லிங்கம்எழுந்தருளி வைக்கப்பட்டுள்ள சிறிய பெட்டகத்தை அணிந் துள்ளனர். இவர்களை ஐயாஎன்றும் ஐயர் என்னும் அழைக்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறுபத்து மூவர் அருட் களஞ்சியம்

நினைவுக்கு எட்டாத இடத்திலிருந்து தொடங்கி முடிவு காணமுடியாத இடத்தை நோக்கி காலச்சக்கரம் ஓடிக் கொண்டே இருக்கிறது. இந்தக் காலப் பெருவெளியில் தோன்றிய அனைத்து சமயங்களிலும் அடியவர்கள் தோன்றி இறைவழிபாடு செய்து பேறு பெற்று வருகின்றனர்.

இவ்வகையில் பாரத தேசத்தின் பழம் பெருமை மிக்க சமயமான சைவ சமயத்தில் ஆங்காங்கு தோன்றி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அருந்தொண்டாற்றிய அடியவர்களின் எண்ணிகை கணக்கில் அடங்காததாகும். இவர்களில் தென்னகம் போற்றிக் கொண்டாடும் அடியவர்களும் ஏராளமானவர்கள்.

அவர்களில் அறுபதின்மர் பெயரைப் பட்டியலிட்டு சுந்தரமூர்த்திகள்**"திருத் தொண்டத் தொகை"** என்னும் பதிகத்தைப் பாடினார். அதனைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் விரித்துத் திருத்தொண்டர் **""திருவந் தாதி"**யாக விரித்துப் பாடினார்கள். திருஇந்த இரண்டு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு சேக்கிழார் பெருமான்**"திருத்தொண்டர் மாக் கதை"** என்னும் பெரிய புராணத்தைப் பாடி அருளினார்.

பெரிய புராணம் போற்றும் அடியவர்களின் பெருமைகளைப் பின்வந்த புலவர்கள் செய்யுட் பாடல்களாகவும், உரை நடை நூல்களாகவும் பாடிப் பரவியுள்ளனர்.

அதை அடியொற்றி **"அறுபத்து மூவர் அருட் செயல் களஞ்சியம்"** என்னும் இந்நூல் தொடங்கி அதற்கான செய்திகள் தொகுக்கப் பட்டு நூலாக்கம் பெறுகின்றன.

இதில் நாயன்மார் பற்றிய அறிமுக உரை, பெரிய புராணப் பாடல்கள் பாடல்களின் பொழிப்புரை, நாயனார் வரலாற்றுச் சுவடுகள், நாயன்மாரைப் போற்றும் சிற்றிலக்கியங்கள், நாயன்மாரைக் குறித்து நடத் தப்படும் ஐதீக விழாக்கள், அவர்கள் செய்த பணிகள் பற்றிய விரிவான செய்திகள் என அனேகம் செய்திகள் தொகுத்து அளிக்கப் பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, எண்ணிக்கையில் 63ஆவதாக இருப்பவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆவர்.அவர்ளைப் பற்றியதாக பல்வேறு செய்திகளைத் தாங்கிய வாறு **"முப்போதும் திருமேனி தீண்டுவார்"** என்னும் தலைப்பில் முதல் நூலாக வெளி வருகிறது.

இதில் அறிமுகவுரை, பெரிய புராணப் பாடல்கள், அதற்கான உரை,நாயன்மார் திருமேனி வடிவம் சிற்ப ஓவியங்களில் நாயன்மார்கள் போன்ற செய்திகளுடன் பின்னிணைப்பாக சிவாச்சாரியார்கள் பற்றிய அனேக செய்திகள் இடம் பெற்றுள்ளன. இது போலவே ஒவ்வொரு நாயன்மார் பற்றியுமான விளக்கங்கள் வெளிவர உள்ளன.

இந்நூல் தொகுதியைஉருவாக்க பெருந் தொகை தேவைப்படுகிறது.எனவே ஆர்வமுள்ள அன்பர்களிடம் அருட் கொடை வழங்கி நூல் பணி சிறக்க உதவிடுமாறு வேண்டினோம். அவ்வகையில் பின்வரும் அன்பர்கள் ரூ.5000/- வீதம் அளித்துள்ளார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள். இவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. (இவர்கள் பெயர்கள் முதல் ஐந்து நூல்களிலும் இடம்பெறும் அத்துடன் பெரியபுராண சிந்தனைக் களஞ்சியம் நூலிலும் இடம் பெறும்) மேலும் , அன்பர்களின் உதவியை எதிர்பாக்கின்றோம். நல்லாதரவு தர அன்புடன் வேண்டுகிறோம்.

இப்பணி தொடரத் தோகைமயில் கற்பகவல்லி உடனாய தொண்டர் நாயகன் கபாலீசுவரப் பெருமான் திருவருளைப் பணிந்து வேண்டுகிறேன்.

இவ்வண்
சிவப்பணியில் மீளா அடிமை

பூசை.ச.ஆட்சிலிங்கம்
(பூசை.ச.அருணவசந்தன்)

சிவசுந்தரி கலைக் கூடம்
29,பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்பேட்டை,சென்னை,600 018,
அலைபேசி 99411 24964

அருட்கொடையாளர்கள்

1. பேராசிரியர் .முனைவர்.அரங்க.ராமலிங்கம் (ப.நி)
   தலைவர்,தமிழ்த்துறை,சென்னை பல்கலைக் கழகம்.இருப்பு-ராயப்பேட்டை,சென்னை-14
2. பேராசிரியர் .முனைவர். சிவ.மாதவன்,(ப.நி)
   முதல்வர்,காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
   பாண்டிச்சேரி
3. சித்தாந்த ரத்தினம் -சிவத்திரு சீனு. அருணாச்சலம்,
   மேனாள், அமைப்பாளர் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், சிதம்பரம்
4. டாக்டர் சுவாமிநாதன்,
   கால்நடை மருத்துவர் , சிதம்பரம்
5. பேராசிரியர். டாக்டர். சந்திரசேகரன்,
   திருச்சி
6. குறிஞ்சிப்பாடி.சிவஸ்ரீ.பழனி செங்குந்தர்
   பாண்டி நிலக்கிழார், இருப்பு அமெரிக்கா,
7. திருப்புகழ் அமுதன்,
   குகஸ்ரீ. வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்
   இந்திரா நகர்,சென்னை 20

8. சிவத்திரு.மகாராஜன்
   மதுரை

8. சிவத்திரு.மாணிக்கவாசகம்
   கிழக்குத் தாம்பரம்

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றிக்குரிய நமது நல்லாதரவாளர்கள்

திரு.மோகன்(எ)சபாரத்தினசிவாச்சாரியார்,
மண்ணடி சென்னை-600001

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.விஸ்வ.ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி,கிழக்குத் தாம்பரம்

லால்குடி. சிவஸ்ரீ கமலா வேதநாராயணன்,
இருப்பு லண்டன் மற்றும் கிழக்குத் தாம்பரம் சென்னை.

சித்தாந்த ரத்தினம் திருமிகு.இரா.இராமச்சந்திரன்
நூம்பல்.சென்னை

சிவஸ்ரீமதி. பானுமதி மாதவன்
திருவல்லிக்கேணி,

டாக்டர்.திருமிகு. T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

திரு. நாடியன் செல்வன்
பெங்களூரு

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.C.ரவிசங்கர்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

திரு.சுவாமிநாதன்
திருவாரூர், இருப்பு திருச்சி.

சித்தாந்த ரத்தினம் வி.சி.கோபிநாத்
ஸ்ரீம் மங்கலம், பாண்டிச்சேரி

திருவீழிமிழலை வை.சீதாராமன்
கணபதி ஐயர் மெஸ் திருவான்மியூர்

சிவஸ்ரீ. கேப்டன் பேரா.ஞான.அம்பலவாணன்,
(ப.நி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம். சிதம்பரம்.

திரு.பேரா.எம்.வி.சத்யநாராயணா I.I.T, கிண்டி
வேளச்சேரி சென்னை

திரு.ராஜேஷ்கன்னா,
ஒசூர்.

சிவத்திருமதி.கலா(எ) மன்னாங்கட்டி
பாண்டிச்சேரி

சிவத்திருமதி.சுஜாதா
ஸ்ரீமகாலிங்க ஐயர் குமாரத்தி
திருக்கோடிக்கா

சிவத்திரு.பாலசுந்திரன்
அமைப்பாளர் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம், பாண்டி

திரு.வ.வீரராகவன்- அனந்தலட்சுமி, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

தமிழவேள் சித்தாந்தச்சுடர் சிவாலயம்,ஜெ.மோகன் திருமயிலை.

வாழி நலம் சூழ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சண்டேஸ்வர அனுக்கிரகர்
கங்கை கொண்ட சோழபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவமஞ்சரி

இது சிவபெருமானுக்கு சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்
எல்லையற்ற சிவபெருமானின் பெருமைகளை
இயன்றவரை பேசும் நூல்